

லட்சுமி பாலாஜி பதிப்பகம் ★ சாதகப் பறவை..! ★ முத்துலட்சுமி ராகவன்




லட்சுமி பாலாஜி பதிப்பகம்


லட்சுமி பாலாஜி பதிப்பகம்
லட்சுமி பாலாஜி பதிப்பகம் ★ சாதகப் பறவை..! ★ முத்துலட்சுமி ராகவன்
முத்துலட்சுமி ராகவன்
சாதகப்பறவை..!

முத்துலட்சுமி ராகவன் எழுதிய

சாதகப்பறவை..!

1

"ச்க்ச்.. ச்க்ச்.. கூக்.. குக்கூ..."

பறவைகளின் சங்கீதக் குரலோசையில் கண் விழித்தாள் பவானி... இரண்டு உள்ளங்கைகளையும் சேர்த்துப் பார்த்து விட்டு படுக்கையிலிருந்து எழுந்தாள்.. அடுத்த வழக்கமாக படுக்கையறை ஜன்னலை திறந்து பார்த்தாள்.. தோட்டத்தின் பசுமை அவளுக்குப் புத்துணர்வைத் தந்தது.. எப்போதும் போல ஒரு இனம் புரியாத சந்தோசமும் குதூகலமும் அவள் மனதை நிறைத்தது.. எதனால் அது என்று அவளுக்குத் தெரியவில்லை.. பெரிய தோப்புப் போல பரந்து விரிந்திருக்கும் தோட்டத்தின் மத்தியிலிருக்கும் வீட்டில் குடியிருப்பதால் அந்த சந்தோசம் வருகின்றதா..? இல்லை.. தோட்டத்தைத் தாண்டித் தெரியும் உயர்ந்த அரண்மனையின் பிரம்மாண்ட தோற்றத்தைப் பார்க்கும் பிரமிப்பில் அந்த சந்தோசம் வருகின்றதா..?

பவானிக்கு இவற்றையெல்லாம் இனம் பிரித்து யோசித்துப் பார்க்கத் தெரியாது.. அவளது உலகம் சிறியது.. அந்தப் பிரம்மாண்ட அரண்மனைக்கும், பரந்த தோட்டத்திற்கும் அவளுக்கும் தூரத்து உறவினர் என்பதைத் தவிர யாதொரு சம்பந்தமுமில்லை.. தோட்டத்தின் மத்தியிலிருக்கும் வீடு கூட கருணையின் அடிப்படையில் குடியிருக்கத் தரப்பட்டது.. அவளுக்குச் சொந்தமானதல்ல..

பவானியின் தாத்தா குமரகுரு அன்னவாசல் ஜமீன்தாரர் சிவனேசனின் மனைவியான ஜமின்தாரிணி கௌரிக்கு தூரத்து உறவு.. பெரியப்பா முறை என்று சொல்வாள்.. மகன்வழிப் பேத்தியான பவானியை சின்னஞ்சிறு சிறுமியாக கையில் பிடித்துக் கொண்டு யாருமற்றவராக

ஆதரவு தேடி குமரகுரு அன்னவாசல் ஜமீன் அரண்மனைக்கு வந்து நின்ற போது கௌரி மனம் கலங்கி விட்டாள்.

"யார், யாருக்கோ அள்ளிக் கொடுக்கிறோம் கை தூக்கி விடுகிறோம்.. உங்களுக்குச் செய்ய மாட்டோமா பெரியப்பா..? உங்க காலம் வரை நீங்க ஜமீன் தோட்ட வீட்டிலேயே குடியிருந்துக்கலாம்.. ஜமீன் கணக்கு வழக்கைப் பார்த்துக்கங்க அதுக்கான சம்பளத்தை வாங்கிக்கங்க..." என்று சொல்லி விட்டாள்..

பவானிக்கு அப்போது ஏழு வயது.. ஆற்றைக் கடக்கும் போது ஆற்றோடு போய்விட்ட தாய், தந்தையைப் பற்றிய விவரம் அறியாதவள்.. அவர்கள் ஊருக்குப் போயிருக்கிறார்கள், என்றேனும் ஓர்நாளில் வந்து விடுவார்கள் என்று நம்பிக் கொண்டிருந்தவள்.. அவளைப் பார்க்கும் போதெல்லாம் கௌரியின் தாய் மனம் பதறும்..

மனைவியை இழந்த குமரகுருவுக்கு பேத்தியான பவானி மட்டுமே வாழ்வின் பற்றுக்கோடு.. கால வெள்ளத்தில் நீந்திக் கரை சேர வேண்டுமென்ற உத்வேகத்தை அந்தக் கிழவருக்குக் கொடுத்துக் கொண்டிருப்பவள்.. பேத்தியின் தலைவிதியாவது நன்றாக இருக்க வேண்டும், அவள் தீர்க்காயுளும், தீர்க்க சுமங்கலித்துவமும் பெற்றவளாக வாழ வேண்டும் என்பதே அவரது பிரார்த்தனை..

பவானியைப் படிக்க வைக்கும் பொறுப்பை கௌரி ஏற்றுக் கொண்டாள்.. அவளுடைய பிள்ளைகளுக்குச் சமமாக பவானியை கௌரி நடத்தினாலும், ஜமின்தாரின் பிள்ளைகள் பவானியை சமமாக நினைக்க மாட்டார்கள்.. தள்ளியே நிறுத்துவார்கள்.. சிவனேசனும் அப்படியே.. மனைவியின் தூரத்து உறவினர் என்பதற்காக சொந்தம் பாராட்ட அனுமதிக்க மாட்டார்.. வேலையாள் என்ற அளவில் குமரகுருவிற்கு எல்லைக் கோட்டை வரையறுத்திருந்தார்.. குமரகுருவும் அதைப் புரிந்து வைத்திருந்ததினால் எவ்வித சலுகைகளையும் எதிர்பார்த்ததில்லை.. அவருடைய எல்லைக் கோட்டைத் தாண்டியதுமில்லை.. அவருடைய எல்லைக்குள் நின்று வேலை செய்வார்..

சிறுமியான பவானிக்கு இது எதுவும் தெரியாவிட்டாலும் தாத்தாவின் வாய்மொழிப்படி நடக்கத் தெரிந்திருந்தது..

"பவானிச் செல்லம்.. அத்தை நமக்குச் சொந்தமுன்னாலும் அவங்க ஜமின்தாரிணி.. நாம அவங்களிடம் வேலை பார்ப்பவங்க.. அவங்க உரிமை கொடுத்தாலும் நாம உரிமை எடுத்துக்கக் கூடாது.." என்று சொல்லி வளர்த்திருந்தார்..

உரிமை கொடுப்பது, எடுப்பது என்றால் என்ன என்று சின்னஞ்சிறு பவானிக்குத் தெரியாது.. அதைத் தெரிய வைக்கத்தான் கௌரி பெற்ற மக்கள் இருந்தார்களே..

ஏழுவயது சிறுமியாக அடைக்கலம் கேட்டு தாத்தாவுடன் அன்னவாசல் ஜமின் அரண்மனை வாசலில் வந்து நின்றபோது பவானியை அசூசையாகப் பார்த்தவள் சரளா.. கௌரியின் இளைய மகள்.. அவளுக்கு அப்போது பத்து வயது.. பவானியை விட மூன்று வயது மூத்தவள்.. ஜமின் குடும்பத்தின் இளவரசி என்ற செல்வச் செருக்கு அவள் முகத்தில் வழிந்தது.. அவள் பார்த்த முதல் பார்வையிலேயே பவானி அரண்டு போய் குமரகுருவின் பின்னால் ஒளிந்து கொண்டாள்.. அதில் சரளாவுக்கு பெருத்த சந்தோசம்..

தங்கை இப்படியென்றால் அவளது அண்ணனான சங்கர் ஆணவம் பிடித்தவனாக இருந்தான்.. சிடுசிடுவென்ற முகமும், சுள்ளென்ற பார்வையுமாக..

"ஏய்.. என் ஷீவின் மேல் காலை வைக்கிறாயே.. உனக்கு அறிவில்லை..?" என்று பவானியைத் திட்டினான்..

பதினான்கு வயது சங்கரின் பார்வையில் தெரிந்த அலட்சியம் குமரகுருவைத் தாக்கியது.. அவருடைய வயதுக்கு மரியாதை கொடுக்காமல், அவர் இருக்கும் போதே அவளுடைய பேத்தியை அவன் அதட்டுகிறானே என்ற கோபம் அவருக்கு வரத்தான் செய்தது.. அடைக்கலம் கேட்டு வந்திருக்கும் அவருடைய அனாதரவான நிலையை நினைத்து தன் பேத்திக்குத்தான் அறிவுரை சொன்னார்..

"மாமாவோட செருப்பு மேல கால் வைக்கக் கூடாது பவானி.."

அதைக் கேட்டவுடன் சிவனேசனின் முகம் மாறியதை இன்று வரை நினைவு வைத்திருக்கிறார் குமரகுரு..

"மாமாவா..? யாருக்கு யார் மாமா..?"

சிவனேசனின் கோபக்குரலில் சரளாவின் முகத்தில் தெரிந்த எள்ளலையும், சங்கரின் இதழ்களில் உதித்த இகழ்ச்சிச் சிரிப்பும் குமரகுருவை கூறுபோட்டன..

"என்ன பேசறிங்க நீங்க.. நம்ம சங்கர் பவானிக்கு மாமா முறைதானே.. நான் அவளுக்கு அத்தைதானே.." கௌரி பரிந்து பேசினாள்..

"இப்படி நீ உறவு கொண்டாடுவதா இருந்தா நான் இவருக்கு வேலை போட்டுக் கொடுக்க முடியாது கௌரி.. உன் சொந்தத்தை உன்னுடன் வைத்துக்க.. எங்களிடம் கொண்டு வராதே.."

சிவனேசனின் கண்டிப்பான குரல் குமரகுருவின் எல்லையை வரையறுத்துத் தள்ளி நிறுத்தியது.. விக்கித்துப் போன கௌரி ஏதோ சொல்லப் போனாள்.. அதற்குள் குமரகுரு முந்திக் கொண்டார்..

"ஜமீன்தாரய்யா சொல்கிறது சரிதானேம்மா.. சின்னய்யா செருப்பு மேல படாம தள்ளி நில்லுன்னுல்ல நான் சொல்லியிருக்கணும்..? பவானி.. இவுக சின்னய்யா.. ஜமீன்தாரய்யாவோட மகன்.. அவுக செருப்பு மேல கால் படாம தள்ளி நில்லும்மா."

ஒரு நொடியில் குமரகுரு தன் புரிதலைத் தெரியப் படுத்திவிட, கௌரியின் முகம் கன்றியது..

'அஃது..' என்ற பார்வையுடன் அமர்த்தலாக குமரகுரு செய்ய வேண்டிய வேலைகளைச் சொல்ல ஆரம்பித்தார் சிவனேசன்..

"கௌரி சொன்ன வார்த்தைக்காக இருக்க இடம் கொடுத்து, பார்க்க வேலையும் கொடுத்திருக்கேன்.. விசுவாசமா வேலை செய்யனும்.. எந்தக் குறையும் இருக்கக் கூடாது.. பார்க்கிற வேலையைத் தக்க வைச்சுக்கறது உங்க

சாமர்த்தியம்.. குற்றம் குறைன்னு வந்தா நான் தயவு தாட்சண்யமெல்லாம் பார்க்க மாட்டேன்.."

கௌரிக்காக பார்க்க மாட்டேன் என்று சிவனேசன் சொல்லாமல் சொன்ன வார்த்தையை மனதில் பதிய வைத்துக் கொண்டார் குமரகுரு.. அன்றிலிருந்து இன்றுவரை குண்டூசியளவு குற்றம்கூட சிவனேசனால் கண்டு பிடிக்க முடியாத அளவிற்கு வேலையைப் பொறுப்பாகவும், திறமையாகவும் செய்து கொண்டிருக்கிறார்.

உறவினர்களிடம் வேலை பார்க்க நேர்வது கொடுமையிலும் கொடுமை.. மற்ற வேலையாள்களுக்குக் கிடைக்கும் சலுகைகள் கிடைக்காது.. மற்றவர்களிடம் இன்முகமாக பேசுபவர்கள் இவர்களிடம் கடுமையாகத்தான் பேசுவார்கள்.. சொந்தமென்ற ஒற்றைச் சொல்லைச் சொல்லிவிடக் கூடாது என்பதில் உறுதியாக இருப்பார்கள்..

குமரகுரு வெகு கவனமாக இருந்தார்.. தூக்கத்தில் எழுப்பிக் கேட்டால் கூடத் தன்னை ஜமீன் வீட்டுக் கணக்குப் பிள்ளை என்று சொல்வாரே தவிர, ஒருநாளும் ஜமீன்தாரிணிக்குப் பெரியப்பா முறையில் சொந்தமென்று சொன்னதே இல்லை..

## 2

பவானி தாவணியை இழுத்துச் செறுகிக் கொண்டு வாசலுக்கு வந்தாள்.. பரபரவென வீட்டு வாசலுடன், தோட்டம், அரண்மனையின் போர்டிகோ, அரண்மனை வாசல் என்று அத்தனையும் கூட்டிப் பெருக்கித் தண்ணீர் தெளித்து முடித்தாள்.. கோலப் பொடி டப்பாவுடன் குனிந்தவள் தோட்டத்து வீட்டு வாசலிலும், அரண்மனை வாசலிலும் அழகாக கோலம் போட்டு நிமிர்ந்தாள்..

"உன்னை யாரு இதையெல்லாம் பெருக்கித் தெளித்துக் கோலம் போடச் சொன்னது..?"

ஆரம்பத்தில் கௌரி அதட்டினாள்.. உரிமையுடன் கோவித்துக் கொண்டாள்.. பனிரெண்டு வயது சிறுமியான பவானிக்கு இந்த வேலைகளையெல்லாம் செய்ய முடியுமா என்ற ஆதங்கம் அவளுக்கு.. அவள் பக்கத்திலிருந்த சரளா 'நான்தான் செய்யச் சொன்னேன்..' என்று ஒப்புதல் வாக்குமூலம் கொடுக்கவில்லை.. கௌரி கணவரிடம் தான் பொறுமையாகப் போவாள்.. பிள்ளைகளிடம் போக மாட்டாள்.. அதட்டி விடுவாள்..

தோட்டத்தில் வண்ணத்துப் பூச்சியைப் பிடிக்க ஓடிக் கொண்டிருந்த பவானியிடம் இந்த வேலைகளைச் செய்யச் சொல்லி சரளாதான் சொன்னாள்.. பொதுவாக அவள் அதிகாலையில் எழுந்து கொண்டதில்லை.. அன்றைக்கு பவானிக்கு நேரம் சரியில்லையோ என்னவோ, சரளாவுக்கு சீக்கிரமாக விழிப்பு வந்து தொலைத்து விட்டது.. எழுந்து கொண்டவள் என்றைக்கும் இல்லாத திருநாளாக தோட்டத்தின் பக்கம் சென்று விட்டாள்.. அங்கே பவானியைப் பார்த்தவளுக்கு கோவம் வந்துவிட்டது..

'எங்க வீட்டுத் தோட்டம் இவள் விளையாடுவதற்கா..?' சொடக்குப் போட்டு பவானியை அழைத்தாள்..

"ஏய்.."

திரும்பிப் பார்த்த பவானி அச்சத்துடன் மிரண்டு விழித்தாள்.. அவளுக்கு சரளாவின் பக்கத்தில் போகக்கூட பயமாக இருந்தது.. போகாவிட்டால் சரளா கோபப்படுவாளே.. அதனால் மெதுவாக நடந்து சரளாவின் முன்னால் போய் நின்றாள்..

"கூப்பிட்டா உடனே வரமாட்டியா..? ஆடி அசைந்து வர்ற..?"

"இல்ல சின்னம்மா.. நான் வெரசாத்தான் வந்தேன்.."

"வெரசா.. வந்தியா..? பட்டிக்காடு.."

பவானிக்கு அழுகை வந்து விட்டது.. எதற்காக சரளா திட்டுகிறாள் என்று தெரியாமல் இமை கொட்டிக் கண்ணீரைத் தேக்கி வைத்தாள்.. இல்லையென்றால் அதற்கும் சரளாவிடம் திட்டுக் கிடைக்குமே..

"ஓசியில வீடு கொடுத்தா நீ ஓடிப் பிடிச்சு விளையாடுவியா..?"

"இல்ல சின்னம்மா.. நான் சும்மாதான் இருந்தேன்.."

"சும்மா இருந்தா தோட்டத்தையும், போர்டிகோவையும், வாசலையும் யாரு கூட்டிப் பெருக்கி, தண்ணி தெளிச்சுக் கோலம் போடறது..?"

"அதுக்குத்தான் சுமதியக்கா வருவாகளே.."

சுமதி, அரண்மனை வீட்டின் வேலைக்காரி.. அவள் ஆடி அசைந்து வருவதற்குள் வெயில் வந்திருக்கும்.. கௌரியும் சொல்லிச் சொல்லிப் பார்த்து வாய் வலிக்கிறது என விட்டு விட்டாள்.. அரண்மனை வேலையாள்களை அடிக்கடி மாற்ற முடியாது..

"ஏன்..? சுமதியக்காதான் இதையெல்லாம் செய்யனுமா..? நீயென்ன மகாராணியா..? நீ செய்ய மாட்டியா..? எண்ணி பத்து எண்ணறதுக்குள்ள வீட்டைச் சுத்திக் கூட்டிப் பெருக்கித் தண்ணி தெளிச்சு கோலம் போட்டிருக்கனும்.. இல்ல.. எங்கப்பாவிடம் சொல்லித் தோட்டத்து வீட்டில இருந்து உன்னையும் உன் தாத்தாவையும் துரத்தி விட்டிருவேன்.. இன்னைக்கு மட்டுமில்லை.. இனி என்னைக்கும் நீதான் இந்த வேலைகளைச் செய்யனும்.."

சின்னஞ்சிறு பவானி அவ்வளவு பெரிய அரண்மனையின் சுற்று வளாகத்தையும், தோட்டத்தையும் கூட்டிப் பெருக்கி ஓய்ந்து போனாள்.. உள்ளங்கை கொப்பளித்தது.. தாத்தாவிடம் காட்டவில்லை.. சரளா மிரட்டி வேலை செய்ய வைத்தாள் என்பதையும் சொல்லவில்லை.. வயோதிகரான தாத்தாவுக்கு வேறு எங்கும் வேலை கிடைக்காது.. இருக்க வீடும் கிடைக்காது என்பது அந்தச் சிறுமிக்குப் புரிந்திருந்தது.. அவள் குமரகுருவின் பேத்தியல்லவா.. இருக்கும் இடத்திற்கும், ஆள்களுக்கும் தக்கபடி நடக்கப்பழகிக் கொண்டாள்..

"எனக்குக் காலையிலேயே முழிப்பு வந்திருது அத்தை.. சுமதியக்கா வர்ற வரைக்கும் வாசல் தெளிச்சுக் கோலம்

போடாம இருக்கனுமா..?" என்று சொல்லி சமாளிக்கக் கற்றுக் கொண்டிருந்தாள்..

அரண்மனையில் சிவனேசனும், அவர் பெற்ற பிள்ளைகளும்தான் கடுமை காட்டினார்கள்.. குமரகுருவையும், பவானியையும் வேலையாள்கள் என்று தள்ளி நிறுத்தினார்கள்.. கௌரி அப்படிச் செய்யவில்லை.. அவள் குமரகுருவை வாய் நிறைய..

"பெரியப்பா.." என்றுதான் அழைத்தாள்..

அவரைத் தன் சொந்தமென வேலை செய்பவர்களிடம் சொல்லி வைத்தாள்.. பவானியை அத்தையென்று கூப்பிட வைத்தாள்..

"இந்த ஜமின்தாரய்யா, சின்னய்யா, சின்னம்மாவெல்லாம் அவங்களோட நிறுத்திக்க.. என்னைக்குமே நான் உனக்கு அத்தைதான்.. அம்மான்னு கூப்பிட்டா அடி விழும்.. அத்தைன்னுதான் கூப்பிடனும்.."

ஒற்றை விரலை உயர்த்தி அவள் எச்சரிக்கும் அழகில் சொக்கிப் போவாள் பவானி.. கௌரிக்காக அவள் எதையும் செய்வாள்.. கௌரி காட்டும் அன்பான அடக்குமுறைக்குப் பணிவதில் சந்தோசப்பட்டுப் போவாள்.. அவளது பாசமான மிரட்டல்களுக்கு பயப்படுவது போல் நடிப்பது தனி சுகம் என்று சிலிர்த்துப் போவாள்..

கௌரிக்காக.. அவளது கருணைக்காக.. அவள் காட்டும் பாசத்துக்காக.. குமரகுருவும், பவானியும் அனைத்தையும் தாங்கிக் கொண்டார்கள்.. பவானி சரளா சொல்லும் வேலைகளை முகம் சுளிக்காமல் செய்தாள்..

மற்றவற்றைக் கண்டும் காணாமல் போனாலும் பவானியின் படிப்பு விசயத்தில் கௌரி பிடிவாதமாக இருந்தாள்.. பவானியை படிக்க வைத்தாள்..

"பாருங்க.. ஆயிரம் ஏழைகளுக்கு அன்னதானம் செய்கிறதுக்கு நிகரானது ஒரு ஏழைக்குப் படிப்பைக் கொடுக்கிறது.. பெண்ணுக்கு கல்வி முக்கியம்.. அது என்னைக்கும் அவளுக்கு கைகொடுக்கும்.. பவானியை

நான் படிக்க வைக்கிறதுக்கு யாராச்சும் தடை சொன்னா நடக்கிறது வேற.."

கௌரியின் சீற்றத்தில் சிவனேசனே வாய் மூடிக்கொள்ளும் போது சரளாவும், சங்கரும் வாய் திறக்க முடியுமா.. என்ன..?

பவானி படித்தாள்.. சுட்டித்தனமான அவளுக்குப் படிப்பு நன்றாகவே வந்தது.. அதில் சரளாவுக்கு கோபமும் நன்றாகவே வந்தது.. அவள் படித்த பள்ளியில் பவானியைச் சேர்த்து விட்ட போதே அவள் வழக்கு வைத்தாள்.. அந்த வழக்கையும் அவள் சிவனேசனிடம் வைத்ததில் கௌரிக்கு மகளின் சாதுர்யத்தில் வெறுப்பு வந்தது..

சரளா எப்போதுமே இப்படித்தான்.. கௌரி முகத்தாட்சண்யம் பார்ப்பாள்.. இரக்கப்படுவாள்.. சிவனேசன் கண்டிப்பும் கறாருமாக இருப்பார்.. கௌரி சொல்லும் நியாயங்களை காதில் போட்டுக் கொள்ளவே மாட்டார்.. அதனால் சரளா இது போன்ற வழக்குகளைத் தந்தையிடம்தான் கொண்டு செல்வாள்.. கௌரி சொல்லும் நீதி, நேர்மை, நியாயங்கள் சரளாவுக்கு கொட்டாவியை வரவழைக்கும்..

"அப்பா நானும், நம் வீட்டு வேலைக்காரப் பெண்ணும் ஒரே ஸ்கூலில் படிப்பதா..?"

சிவனேசன் முகம் சுருங்க மனைவியை முறைத்தார்.. கௌரி நேர்பார்வையுடன் பதிலைத் தந்தாள்..

"உங்களுக்கு பவானி வேலைக்காரப் பெண்.. எனக்கு என் ஒன்றுவிட்ட பெரியப்பாவின் பேத்தி.. பவானியை படிக்க வைப்பது நான்.."

"படிக்க வை கௌரி.. வேணான்னு சொல்லலை.. வேற ஏதாவது ஒரு ஸ்கூலில் சேர்த்து விட்டுப் படிக்க வை.. பக்கத்து டவுனில் ஸ்கூலுக்கா பஞ்சம்..?"

"இந்த ஸ்கூலில் பவானி படிக்கிறதில உங்க மகளுக்கு என்ன கஷ்டம்..? இந்தக் கேள்விக்குப் பதிலைச் சொல்லுங்க. அங்கே ஆயிரக் கணக்கில் பிள்ளைக

படிக்கிறாக.. அத்தனை பிள்ளைகளும் ஜமீன் வீட்டுப் பிள்ளைகளா என்ன..? வசதியில்லாத வீட்டுப் பிள்ளைகள், ஸ்காலர்ஷிப்பில் படிக்கிற பிள்ளைகள்ன்னு எத்தனை பிள்ளைகள் இருப்பாங்க..? அதில ஒருத்தியா பவானியும் இருந்துட்டுப் போறா.. அவ என்ன உங்க மகளின் வகுப்பில வந்தா உக்காரப் போறா..? சரளா படிக்கிறது ஆறாம் வகுப்பு.. பவானி படிக்கப் போறது மூன்றாம் வகுப்பு.. இரண்டுக்கும் என்ன சம்பந்தம்..?"

"இல்லடி.. நம்ம பிள்ள படிக்கிற ஸ்கூலில அந்தப் புள்ளயும் படிக்கனுமா..?"

"நம்ம அரண்மனைத் தோட்டத்து வீட்டிலதான் பவானி இருக்கிறா.. உங்க மக அரண்மனையிலதானே இருக்கிறா..? இது போலதான் அதுவும்.. இதுக்கு மேலே விளக்கம் வேணாம்ன்னு நினைக்கிறேன்."

கௌரியின் நெற்றியடி விளக்கத்தில் சரளா வைத்த வழக்கில் கௌரிக்குச் சாதகமான தீர்ப்பு வந்தது.. பவானி சரளா படித்த பள்ளிக்கூடத்திலேயே சேர்க்கப் பட்டாள்..

3

தாவணியை சரி செய்தபடி சமையலறைக்குச் சென்ற பவானி கேஸ் அடுப்பைப் பற்ற வைத்தாள்.. வாசலில் சித்ராவின் குரல் கேட்டது.. அவசரமாக வாசலுக்கு விரைந்தாள்..

"நீங்களே வரனுமாக்கா..? நான் வந்து பாலை வாங்கிக்க மாட்டேனா..?"

"எதுக்கு..? யார்கிட்டேயாவது ஏச்சு வாங்கறதுக்கா..? விட்ட விடிகாலையில நல்ல பேச்சைத்தான் வாங்கணும் கண்ணு.."

பிரியத்துடன் பால் பாத்திரத்தை நீட்டினாள் சித்ரா.. ஜமீன் வீட்டில் சமையல் வேலை செய்பவள் அவள்..

சிவனேசனுக்குச் சொந்தமான பால் பண்ணையிலிருந்து தினமும் கறக்கப்படும் புதுப்பால் காலை, மாலை இரு வேளையும் வீட்டுக்கு வந்து விடும்.. அந்தப் பாலில் இருந்து அரைலிட்டர் பாலை குமரகுருவின் தோட்ட வீட்டில் கொடுத்து விட வேண்டுமென்று கௌரி உத்தரவு போட்டிருந்தாள்.. பால் மட்டுமல்ல.. காய்கறித் தோட்டத்திலிருந்து வரும் காய்களுக்கும் அதே உத்தரவுதான்.. அதற்கும் சரளா வழக்கு வைத்தாள்.. அதற்கும் கௌரி பதிலைச் சொன்னாள்..

"பாலுக்கும், காய்கறிக்கும் கணக்குப் பார்த்தா, என் பெரியப்பா இருபத்திநாலுமணி நேரமும் உங்களுக்கு உழைக்கிறதுக்கு நான் கணக்கு பார்க்க வேண்டியிருக்கும் எட்டுமணி நேரம்தான் வேலை நேரம்.. நினைப்பிருக்கில்ல... மக பேச்சைக் கேட்டு வாயைத்திறந்து.. ஜமீன்தார் அரைலிட்டர் பாலுக்கும் அஞ்சாறு காய்கறிக்கும் கணக்குப் பார்த்தார்ன்னு பெயரை வாங்கிக் கட்டிக்காதீங்க.. நாளொன்னுக்கு நாம பிள்ளைப் பாலா இலவசமாக் கொடுக்கற அத்தனை லிட்டர் பாலுக்கான பெருமையும் இந்த ஒற்றை விசயத்தில் காணாமப் போயிரும்.. யோசிச்சுப் பேசுங்க.."

இந்த வழக்கிலும் கௌரியே வென்றாள்.. குமரகுருகூட சங்கடப்பட்டார்.. கௌரியிடம் மறுத்துப் பேசினார்..

"ஜமீன்தார் நல்ல சம்பளம் கொடுக்கிறார்ம்மா.. நானும் பவானியும் மட்டும்தானே.. எங்களுக்கான பாலையும், காய்கறியையும் நான் வாங்கிக் மாட்டேனா..?"

"அரண்மனை வீட்டுத் தோடத்திலே குடியிருந்துக்கிட்டு பாலையும் காயையும் வெளியே நீங்க விலைக்கு வாங்கினா ஊர் எங்களைப் பத்தி என்ன நினைக்கும் பெரியப்பா..?"

கௌரியின் கேள்வியில் இருந்த நியாயத்தில் குமரகுரு வாயை மூடிக் கொண்டார்.. இப்படிக் கிடைக்கப் பெற்ற பாலையும், காயையும் பவானி வாங்க வரும் போது

சரளாவின் பார்வையில் பட்டுவிட்டால் அவள் பவானியை வறுத்து எடுத்து விடுவாள்..

"இருக்கிறதும், படிக்கிறதும்தான் ஓசின்னா, பாலும், காய்கறியும் ஓசிதானா..? இப்படி ஓசியில பிழைப்பு நடத்த வெட்கமா இல்லை..?"

இந்தப் பேச்சில் பவானி அழுதபடி பாலை வாங்காமல் ஓடிவிட.. அதைப்பார்த்துக் கொண்டிருந்த சித்ரா, கௌரியிடம் சொல்லி விட்டாள்.. அதுவும் தானாகச் சொல்லவில்லை..

"பெரியப்பா வீட்டுக்குப் பால் கொடுத்து விட்டியா சித்ரா..?" என்று கௌரி கேட்டபோதுதான் தயங்கியபடி சொன்னாள்..

"பவானிப் பாப்பா வந்ததும்மா.. நம்ம சின்னம்மா கேலியாப் பேசினாங்க.. பவானி பால் வாங்காம போயிருச்சு.."

சரளா கேலியாக என்ன பேசினாள் என்று சித்ராவும் சொல்லவில்லை.. கௌரியும் கேட்கவில்லை.. மகள் என்ன பேசியிருப்பாள் என்று அவளைப் பெற்ற கௌரிக்குத் தெரியாதா..?

"விடு சித்ரா.. சரளாவின் குணம்தான் நமக்குத் தெரியுமே.. நீ என்ன செய்கிற.. இனிமே காலையிலேயும், சாயந்திரமும் பால் வந்ததும் அரை லிட்டர் பாலைக் கொண்டுபோய் தோட்டத்து வீட்டில கொடுத்துட்டு வந்துரு.. காய் வந்தா கொஞ்சம் கொஞ்சம் பிரிச்சு எடுத்து அதையும் கொண்டு போய் கொடுத்துரு.."

"ஆகட்டும்மா.."

முகமலர்ச்சியாக தலையை ஆட்டினாள் சித்ரா.. பவானியின் குணம் அப்படி.. அரண்மனை வீட்டுக்குள் வந்து விட்டால் அத்தனை ஒத்தாசையாக இருப்பாள்.. காய் நறுக்கிக் கொடுப்பாள்.. சித்ராவை விலகி நிற்கச் சொல்லி மொத்த சமையலையும் முடித்து விடுவாள்.. சித்ரா ஆட்சேபித்தால்..

"சொல்லிக் கொடுத்த குரு நீங்கதானேக்கா.. இதை குரு தட்சணையா நினைத்துக்கங்க.." என்று சிரிப்பாள்..

சித்ராதான் பவானிக்கு சமையல் கற்றுக் கொடுத்தாள்.. பத்து வயது பவானி படிப்புடன் வீட்டு வேலைகளையும் கற்றுக் கொண்டவள்.. சூட்சுமமான அறிவு படைத்தவள்..

பழைய நினைவுகளை புறம் தள்ளினாள் பவானி.. ஒரு புன்னகையை சித்ராவுக்குத் தந்துவிட்டு பால் பாத்திரத்தை வாங்கிக் கொண்டாள்.. வேலையைப் பார்க்க வேண்டும் என்று சித்ரா விரைந்து விட்டாள்.. எப்போதும் அப்படித்தான்.. பாலோ, காய்கறியோ.. கொடுக்க வருபவள் அங்கே நின்று பேச்சை வளர்க்க மாட்டாள்.. அவள் கொண்டு வரும் பாத்திரத்தையும், கூடையையும் பவானி சுத்தம் செய்து, உலர வைத்து அடுத்து அவள் வரும்போது கொடுத்து விடுவாள்.. இல்லையென்றால் பவானி அங்கே போகும் போது கொண்டு செல்வாள்..

'அடுப்பு எரியுதே..'

நாக்கைக் கடித்துத் தனக்குத்தானே தலையில் குட்டிக் கொண்ட பவானி சமையலறைக்கு ஓடினாள்.. பாத்திரத்தில் பாலை ஊற்றி ஒரு அடுப்பில் வைத்தாள்.. பரபரவென குக்கரில் அரிசி களைந்து இன்னொரு பர்னரில் வைத்தாள்.. கொதித்து எழும்பிய பாலை இறக்கிக் காபி கலந்தவள்..

"தாத்தா.. காபி ரெடி.." என்று குரல் கொடுத்தாள்..

"வாசலுக்குக் கொண்டு வாம்மா.."குமரகுரு குரல் கொடுத்தார்..

விசிலடித்த குக்கரை குறும்பாகப் பார்த்த பவானி..

"நீயென்ன ஆம்பளையா..? என்னப் பார்த்து விசிலடிக்கிற..?" என்று அதன் தலையில் ஒரு தட்டு தட்டி அடுப்பை அணைத்து குக்கரை இறக்கி வைத்தாள்.. காபித் தம்ளர்களுடன் வாசலுக்குப் போனாள்..

தோட்டத்தில் ஒரு சுற்று சுற்றி விட்டுத் திரும்பியிருந்த குமரகுரு வாசல்படியில் உட்கார்ந்திருந்தார்..

"என்ன தாத்தா.. வாக்கிங் முடிஞ்சிருச்சா..?" பவானி மேல்படியில் உட்கார்ந்திருந்த குமரகுருவின் பக்கத்தில் உட்கார்ந்தாள்..

"முடிஞ்சிருச்சும்மா.." கனிவுடன் சிரித்தார் குமரகுரு..

அவர் மனதுக்கும் பவானி மனதிற்கும் தெரியும்.. அது வெறும் உலாவுதல் இல்லையென்று.. தோட்டத்து மரம், செடி, கொடிகள் சரியாகப் பராமரிக்கப் படுகின்றனவா என்று கண்காணிப்பதும் குமரகுருவின் வேலைகளில் ஒன்று.. இல்லையென்றால்..

"நீங்க தோட்டத்திலதான குடியிருக்கீங்க..? இதைக்கூடப் பார்க்க மாட்டிங்களா..?" என்று சிவனேசன் கடிந்து பேசி விடுவார்..

அதனால் தினமும் உலாவப் போகிறேன் பேர்வழியென்று குமரகுரு காலையில் எழுந்ததும் தோட்டத்தைச் சுற்றி வருவார்.. சின்ன குறைபாடு இருந்தாலும் தோட்டக்கார பாலனுக்கு எச்சரிக்கை போய்விடும்..

"கொய்யா மரத்துக்கு அடியில கரையான் அரிக்க ஆரம்பிச்சிருக்கு பாலா மருந்தை அடி.."

"முல்லைக்கொடி வாடித் தெரியுதே.. தண்ணி பாய்ச்சலையா..?"

கணக்குப்பிள்ளை என்றுதான் பெயர்.. கணக்கு வழக்கில்லாத வேலைகளை அவர் பார்க்க வேண்டும்..

"ஸ்..ஆ..."

காபியின் வாசனையை முகர்ந்து ரசித்து காபி குடிக்க ஆரம்பித்தார் குமரகுரு.. அவர் ரசித்துக் குடிப்பதைப் பார்த்த பவானிக்கு மனது நிறைந்தது.. இதற்காகத்தானே அவள் மெனக்கெடுகிறாள்.. சித்ராவிடம் கேட்டுக் கேட்டுச் சமைக்கப் பழகினாள்.. அவளுக்கென்று இந்த உலகில் யார் இருக்கிறார்கள்..? இந்த வயோதிக வயதிலும் குமரகுரு

ஓடியோடி வேலை செய்வது யாருக்காக..? பாவனிக்காக.. பதிலுக்கு அவளுடைய தாத்தாவுக்கு அவளால் செய்ய முடிந்த பணிவிடைகளைச் சிறப்பாக செய்ய வேண்டுமல்லவா.. அவற்றை வெகு சிறப்பாக பவானி செய்தாள்..

தோட்டத்து வீடு சிறியதுதான்.. ஆனால் அழகான, வசதியான வீடு.. உயரமான வாசல்படிகள்.. அதைத் தாண்டினால் சிறிய வராண்டா கம்பி கிராதியுடன் இருக்கும்.. மழை பெய்யும் போது அங்கே சேர்களைப் போட்டு அமர்ந்து சூடான பலகாரமும் காபியும் அருந்தியபடி தாத்தாவும் பேத்தியும் மழையை வேடிக்கை பார்த்தபடி கதை பேசுவார்கள்.. வராண்டாவைத் தாண்டி ஹால்.. அதையொட்டி இரண்டு படுக்கையறைகள்.. சமையலறை.. அதையொட்டி பூஜையறை.. மொட்டைமாடிக்கான படிகள் வராண்டாவில் இருந்தன..

அந்தவீடு அவர்களுக்குச் சொர்க்கம்.. தானமாக வழங்கப்பட வில்லையென்றாலும் அவர்கள் வாழும் காலம் முழுவதும் அந்த வீட்டில் தங்க உரிமை வழங்கப்பட்டிருந்தது.. அதுபோதும் என்ற நன்றியுணர்வே அவர்கள் மனதில் நிறைந்திருந்தது..

இவ்வுலகில் செய்நன்றியுடையவர்கள் மிக சொற்பமே..

4

"இப்படித் தோட்டத்தை வேடிக்கை பார்த்துக்கிட்டு இருந்தா காலேஜீக்கு யாரு போவாங்களாம்..?"

வேடிக்கையாக கேட்டார் குமரகுரு.. நீண்ட பின்னலை எடுத்துப் பின்னால் போட்டபடி எழுந்த பவானி..

"ஏன்..? நீங்க போக வேண்டியதுதானே..?" என்று அழகு காட்டினாள்..

"போக நான் தயார்தான்.. இந்தக் கிழவனைக் கேட்டுக்கு வெளியே நிறுத்தி வைச்சிருவாங்களே.."

"தெரியுதில்ல..? அப்புறம் எதுக்குக் கேள்வி கேட்கறீங்களாம்..?"

பவானி சமையறைக்குள் சென்றாள்.. குமரகுரு குளித்து முடித்து வருவதற்குள் ஆவி பறக்கும் இட்லிகள் மேஜையில் காத்திருந்தன.. பக்கத்தில் சூடான சாம்பார்.. மதிய உணவு டப்பாவுடன் சமையலறையிலிருந்து வெளியே வந்த பவானி அதை மேஜையில் வைத்துவிட்டு..

"தாத்தா, சமையல் வேலை ஓவர்.. மதியத்திற்கும் சேர்த்து சாம்பார் வைச்சுட்டேன்.. தயிர் இருக்கு.. சேப்பங்கிழங்கு வறுவல்.. சாதம்.. சரியா..? நான் குளிக்க ஓடனும்.." என்று ஒப்பித்தாள்..

"என்ன இருக்குன்னு நான் பார்த்துக்க மாட்டேனா..? நீ மதியத்துக்கு என்ன கொண்டு போற..?"

"தாளிச்சு விட்ட தயிர் சாதம்.. சேப்பங்கிழங்கு வறுவல்.."

பவானி குளிக்க ஓடினாள்.. குளித்து முடித்து, அழகான காட்டன் புடவையைக் கட்டி, பின்னலிட்டு, நெற்றியில் சின்ன ஸ்டிக்கர் பொட்டை வைத்து கண்ணாடி பார்த்தவளின் முன்னால் தட்டை நீட்டினார் குமரகுரு.. அதில் இட்லிகள் சாம்பாரில் மிதந்து கொண்டிருந்தன..

"நேரமாகுது தாத்தா.." சிணுங்கினாள் பவானி..

"இரண்டு இட்லியைப் பிய்ச்சு வாயில் போட எவ்வளவு நேரமாகும்..? இம்புட்டு வேலையைச் செஞ்சுட்டு பட்டினியா காலேஜீக்கு ஓடுவியா..?" அதட்டினார் குமரகுரு..

"விட மாட்டிங்களே.." அவசர கதியில் இட்லிகளை உள்ளே தள்ளினாள் பவானி..

தாத்தாவுக்கு டாட்டா சொல்லிவிட்டு புத்தக்கபையை தோளில் மாட்டிக் கொண்டவள் தயக்கத்துடன் வாசல் பக்கம் எட்டிப் பார்த்தாள்.. அவள் யாரைப் பார்க்கிறாள் என்று தெரிந்து வைத்திருந்த குமரகுரு..

"வாசலில் யாரும் இல்லைம்மா.. சரளா இன்னும் எழுந்திருச்சிருக்காது.. நீ கிளம்பு.." என்று வாத்சல்யத்துடன் சொன்னார்..

நிம்மதியுடன் சரளா எதைக் கண்டால் வெகுண்டு போவாளோ அதைக் கையிலெடுத்து பிரமிப்புடன் பார்த்தாள் பவானி.. பெரிய பாக்கெட்டில் ஸ்டெதெஸ்கோப் இருக்க அழகாக அவளைப் பார்த்துக் கண்சிமிட்டியது அந்த வெள்ளைக் கோட்..

'நான் டாக்டருக்குப் படிக்கிறேனா..?'

பவானியால் இன்னும் நம்ப முடியவில்லை.. மருத்துவக் கல்லூரியில் முதலாண்டு படிக்கிறாள் என்பதை அடிக்கடி நினைவு படுத்திக் கொண்டாலும் நடப்பது கனவு போலதான் இருந்தது.. மேல்நிலைக் கல்வியில் அவள் பள்ளியிலும் மாவட்டத்திலும் முதல் மாணவியாகவும், மாநில அளவில் இருபத்தி நான்காம் இடத்தைப் பிடித்த மாணவியாகவும் தேர்ச்சி பெற்றதில் பேப்பர் செய்திகளில் இடம் பிடித்தாள். மருத்துவக் கல்விக்கான தேர்வில் வெற்றி பெற்று பக்கத்து டவுனில் இருக்கும் மருத்துவக் கல்லூரியில் இடமும் கிடைத்து விட்டது.. ஜமீன்தாரின் வீட்டில் பிரளயம் வெடித்தது.. சரளா ஆடித் தீர்த்து விட்டாள்..

"ஏம்மா.. ஜமீன்தார் மகள் ஆர்ட்ஸ் காலேஜில் படிப்பா.. அவங்க வீட்டு வேலைக்காரி மெடிகல் காலேஜில படிப்பான்னா இந்த ஊரில் என் மரியாதை என்னாகிறதும்மா..?"

"அதுக்காக, மெரிட்டில் மெடிகல் சீட் வாங்கின பவானியை படிக்க அனுப்பாம வீட்டில கட்டிப்போட்டா இந்த ஊரில் உன் அப்பாவின் பெருமை என்னாகிறது சரளா..?"

கௌரி கேட்ட கேள்வியில் மகளுக்கு ஆதரவாகப் பேச வாய்திறந்த சிவனேசன் யோசனையானார்.

"கருணை வள்ளல், கொடைபிரபுன்னு எல்லாம் உங்க அப்பாவுக்கு ஊருக்குள்ள புகழாரம் சூட்டிக்கிட்டு இருக்காங்க.. இப்ப மக டாக்டருக்குப் படிக்கலை

என்கிறதுக்காக சொந்தக்காரப் பெண்ணுக்கு பரிட்சை எழுதிக் கிடைச்ச டாக்டர் படிப்பை படிக்க விடாம செய்தார்ன்னு பேச வைக்கப் போறியா..? பரம்பரையா ஏழை பாழைகளுக்கு உதவி செய்து அவர்களை வாழ வைச்ச குடும்பம் இது.. மாத்திப் பேச வைச்சிராதே.."

"நம்ம பொண்ணையே குறை சொல்லாதே கௌரி.. உன் பெரியப்பா பேத்தி வேற படிப்பைப் படிக்க கூடாதா..?"

"டாக்டர் படிப்புக்கு சீட்டு கிடைச்சிருக்கும் போது அவ ஏங்க வேற படிப்பை படிக்கனும்..? இந்த ஊர் உலகம் முழுக்க அவளுக்கு மெடிகல் சீட் கிடைச்சிருக்கிற விசயம் தெரிஞ்சு போச்சு.. இப்ப அவ படிப்பை மாத்தினா நாலுபேரு நாலு விதமா

பேச மாட்டாங்களா..? அது நம் குடும்பக் பெருமைக்கு நல்லதில்லைங்க.."

"ஆனா.. நம்ம சரளா..?"

"உங்க மனச்சாட்சியைத் தொட்டுச் சொல்லுங்க.. நம்ம மக டாக்டருக்குப் படிக்கணும்னு ஆசைப்பட்டாளா..? இவ படிக்கவே ஆசைப்பட்டதில்லையே.. பொழுது போக்காத்தானே படிக்கப் போனா..?"

"என் மக ஏண்டி விழுந்து விழுந்து படிக்கனும்.. அவளுக்கு சென்னையிலே சொந்தமா மல்ட்டி ஸ்பெசலாட்டி ஹாஸ்பிடல் கட்டித்தருவேண்டி.. நூறு டாக்டருக்கு இவ வேலைதருவா.."

"தெரியுதில்ல.. அப்புறம் எதுக்காக பவானியை டாக்டருக்குப் படிக்க வேண்டாம்ன்னு சொல்றீங்க..? தாய் தகப்பனில்லாத பொண்ணு... தாத்தா மட்டும்தான்.. அவரும் வயசானவர்.. இப்படிப்பட்ட சூழ்நிலையில இருக்கிற பொண்ணுக்கு கை கொடுக்க வேணாம்.. அவ தானாப்படிச்சு முன்னேறுகிறதையும் தடை போடக் பாக்கறிங்களே.. இது நீங்கதானா..? அன்னவாசல் ஜமின்தார்தான் பேசறாத..?"

அதற்கு மேலும் வாயைத் திறந்து வாங்கிக் கட்டிக் கொள்ள சிவனேசன் தயாராக இல்லை.. கௌரி சொன்னதைப் போல அவளுக்கும், அவளுடைய குடும்பத்திற்கும் கொடுத்து உதவும் கொடைவள்ளல்கள் என்ற பெருமை ஊருக்குள் இருந்தது.. அதைக் காணாமல் போக்கிக் கொள்வதா என்ற ஞானோதயத்தில் மகளை சமாதானம் செய்து வைத்தார்..

சரளாவின் கொந்தளிப்பு அடங்கவில்லை.. அவள் கண்ணில் கையில் வெள்ளைக் கோட்டுடன் பவானி தென்பட்டு விட்டால் போதும்.. தாளிதம் செய்து விடுவாள்..

"இவ வேணும்னே என் முன்னாலே பகுமானம் காட்டறாம்மா.." என்று கத்தி பழி போட்டு ஆர்ப்பாட்டம் செய்து விடுவாள்..

அதனால் சரளா வாசல் பக்கம் வந்து நிற்கிறாளா என்று பார்த்து உறுதி செய்தபின்தான் வெள்ளைக் கோட்டைக் கையில் எடுப்பாள் பவானி.. நல்ல வேளையாக இவள் மருத்துவக் கல்லூரிக்கு சீக்கிரமாகவே கிளம்பிப் போய் விடுவாள்.. சரளா வெகு தாமதமாக அவளது கல்லூரிக்குச் செல்வாள்.. அந்த நேர வித்தியாசத்தில் தப்பித்து வந்தாள் பவானி..

"டாட்டா தாத்தா.. மதியம் நேரத்துக்கு வீட்டுக்கு வந்து சாப்பிட்டுட்டுப் போங்க.. தோட்டத்தில வேலையிருந்தா கேரியரில் சாப்பாட்டை எடுத்துட்டுப் போயிருங்க.."

"என்னை நான் பார்த்துக்குவேன்.. நீ பத்திரமாப் போயிட்டு வாம்மா.. ரோட்டில வண்டியைப் பார்த்து ஓட்டனும்.."

"அதெல்லாம் நல்லாத்தான் ஓட்டுவேன்.. கவலைப்படாதீங்க.."

சத்தமில்லாமல் ஸ்கூட்டியைத் தள்ளிக்கொண்டு போனாள் பவானி..

காம்பவுண்டு கேட்டில் காவலிருந்த காவலாளி பவானியைக் கண்டதும் கேட்டைத் திறந்து விட்டபடி..

"ஏன் பாப்பா வண்டியைத் தள்ளிக்கிட்டு வர்ற..? ஓட்டிக்கிட்டு வர்றதுதானே.. இன்னுமா பயம் போகல..?" என்று கேட்டார்..

இது தினமும் அவன் கேட்கிற கேள்விதான்.. பவானிக்கு ிடிகல் காலேஜில் இடம் கிடைத்ததும் கௌரி அவளுக்காக ஸ்கூட்டி ஒன்றை வாங்கிக் கொடுத்தாள்.. மறுத்துப் பேச முயன்ற குமரகுருவை..

"சும்மாயிருங்க பெரியப்பா.. இத்தனை நாளா பள்ளிக்கூடத்தில் படிச்சா.. சைக்கிளில போயிட்டு வந்தா.. இப்ப மெடிகல் காலேஜில சேர்ந்திருக்கா.. இப்பவும் சைக்கிளில போயிட்டு வந்தா நல்லாவா இருக்கும்..? பர்ஸ்ட் ரேங்கில் பாஸ் பண்ணினவளுக்கு பரிசு கொடுக்கனும்னு நினைச்சேன்.. படிக்கிற பிள்ளைக்கு சங்கிலியை பரிசு கொடுக்கிறதைவிட, அவ காலேஜீக்கு போயிட்டு வர வண்டி வாங்கிக் கொடுக்கிறதுதான் சிறந்த பரிசுன்னு தோணுச்சு.. அதை வாங்கிக் கொடுக்கக்கூட எனக்கு உரிமையில்லையா..? " என்று அடக்கி விட்டாள்..

அப்போது சிவனேசனும் சரளாவும் அங்கேதான் இருந்தார்கள்.. கௌரி சொன்ன வார்த்தைகள் குமரகுருவுக்கு மட்டுமில்லை.. அவர்களுக்கும் சேர்த்துத்தான் என்று புரிந்துகொண்டவர்களாக வாயை மூடிக் கொண்டார்கள்.. இருந்தாலும் சரளா விட்டு வைக்கவில்லை.. பவானி ஸ்கூட்டியைக் கிளப்பும் சப்தம் காதில் விழுந்து விட்டால் ஓடி வந்து விடுவாள்.. அதன் பின் அவள் பேசும் பேச்சுக்கள் அன்றைய நாளின் ஒட்டு மொத்த சந்தோசத்தையும் ஓட்டி விடும்.

பவானி ஒதுங்கிப் போகும் குணம் கொண்டவள்.. ஸ்கூட்டியைத் தள்ளிக் கொண்டே வந்து சாலையில்தான் ஸ்டார்ட் பண்ணுவாள்.. அதை காவலாளியிடம் சொல்ல முடியுமா..? பயம் என்றுதான் சொல்ல முடியும்..

"ரோட்டில ஸ்டார்ட் பண்ணினாத்தான் பயமில்லாம இருக்குது அண்ணா.." வெள்ளையாகச் சிரித்தபடி வண்டியைக் கிளப்பினாள்..

சாலையில் வேகமெடுத்து அன்னவாசலைக் கடந்த ஸ்கூட்டி மெயின் ரோட்டுக்கு வந்து திரும்பியபோது எதிரே வந்த கார் மயிரிழையில் மோத வந்து சடன் பிரேக் போட்டு நின்றது.. காரின் மீது ஒட்டி நின்ற ஸ்கூட்டியில் இருந்த பவானி பயந்து போய் ஸ்கூட்டியுடன் கீழே விழ கார் கதவு திறந்தது..

"இம்சை..! நீயெல்லாம் வண்டியோட்டலைன்னு யார் அழுதது..?"

உறுமியபடி காரைவிட்டு இறங்கிய வாலிபனைக் கண்டதும் பவானியின் விழிகள் விரிந்தன.. பரவசத்துடன் அவனைப் பார்த்தாள்..

5

"சின்னய்யா.."

பவானியின் உதடுகள் முணுமுணுத்தன.. வாய் விட்டுச் சொல்ல முடியாமல் மென்று விழுங்கியபடி எழுந்து நின்றாள்.. அவளை முறைத்துப் பார்த்தபடி நின்ற சங்கருக்கு அவள் யாரென்று தெரியவில்லை.. எப்படித் தெரியும்..? அவன்தான் எம்.பி.ஏ படிக்கப் போகிறேன் என்று வெளிநாட்டிற்குப் போய் விட்டானே.. மூன்று வருடங்கள் கழித்து இப்போதுதான் இந்தியாவுக்கு வந்திருக்கிறான்.. அதற்கு முன்பும் அவன் அன்னவாசலில் இருந்ததில்லை.. மேல்நிலைப் படிப்பு முடிந்ததும் சென்னைக்குப் போய் விட்டான்.. அங்கே ஜமீன் குடும்பத்துக்குச் சொந்தமாக பங்களாக்களும் தொழில்களும் இருந்தன.. சென்னையில் பி.ஈ படிப்பை முடித்தவன் தொழில்களை மேற்பார்வை செய்தபடி எம்.ஈ படித்தான்.. எப்போதாவது ஒர்முறை அன்னவாசலுக்கு வருவான்.. அவன் வரும்போது பவானி ஒளிந்திருந்து அவனைப் பார்ப்பாள்.. யதேச்சையாக அவள் எதிரில் வந்தாலும் அவன் அவளை ஒரு பொருட்டாக

மதித்துப் பார்த்ததில்லை.. உதாசீனமாகப் பார்த்தபடி கடந்து விடுவான்..

"ஏய்ய்.. பட்டிக்காடு.. வண்டியோட்டத் தெரியலைன்னா அடங்கி வீட்டில் இருக்க வேண்டியதுதானே.. இப்படியா ராங் ரூட்டில வந்து காரில் மோதப் பார்ப்ப..?" சங்கர் அதட்டினான்..

சங்கருடன் வந்திருந்த இன்னொரு வாலிபனின் பார்வையில் சுவராஸ்யம் தென்பட்டது.. தரையில் கிடந்த வெள்ளைக் கோட்டையும் அதிலிருந்த ஸ்டெதஸ்கோப்பையும் பார்த்தவன் குனிந்து அதை எடுத்தான்..

"உனக்கு வேண்டாத வேலையிது வினோத்.." சங்கர் முகம் சுளித்தான்..

"ஈஸிசங்கர்.. இந்தப் பெண் மெடிகல் ஸ்டூடண்ட்போல.." என்ற வினோத் கோட்டை பவானியிடம் நீட்டினான்.

சங்கரைப் பார்த்து விட்ட ஆனந்த அதிர்ச்சியிலிருந்து பவானி இன்னும் வெளிவரவில்லை.. அவள் கூச்சத்துடன் தலைகுனிந்தபடி வினோத்திடம் கோட்டை வாங்கிக் கொண்டாள்.. சங்கர் வந்திருக்கிறான்.. அவளுடன் நின்று பேசிக் கொண்டிருக்கிறான் என்பதில் அவளது உடல் நடுங்கிக் கொண்டிருந்தது..

"அன்னவாசலில் மெடிகல் ஸ்டூடண்டா..? இட்ஸ் எ கிரேட் மெடிகல் மிராக்கிள் யு நோ.."

பெரிய நகைச்சுவையைச் சொல்லி விட்டதைப் போல சங்கர் உரக்கச் சிரித்தான்.. பவானியின் முகம் கன்றிச் சிவந்தது.. அதைக் கவனித்த வினோத் சங்கருடன் சேர்ந்து சிரிக்கவில்லை..

"இது என்ன ஜோக்கா சங்கர்..?"

"ஜோக்கில்லையா..?"

"இல்லை.. உன் வில்லேஜில் இருக்கிறவங்க யாரும் படிப்பில் கெட்டிக்காரங்களா இருக்கக்கூடாதுன்னு சட்டமா

என்ன..?"

சங்கரின் சிரிப்பு நின்று விட்டது.. வினோத் அவனைக் கேள்வி கேட்டதற்கு பவானிதான் காரணம் என்பதைப் போல அவளை முறைத்தான்.. பவானியின் நடுக்கம் அதிகமானது..

"ஸ்யூர்.. ஸ்யூர்.. அப்படியொன்றும் சட்டமில்லைதான்.. ஏய்ய்.. வழியை விட்டு விலகி நில்லு.. டாக்டருக்குப் படிக்கும் திமிரில் கண்மண் தெரியாம வண்டியை ஓட்டாதே.." சங்கர் எரிந்து விழுந்தான்..

"பாவம்.. இந்தப் பெண் ஓரமா வந்ததைப் போலதான் இருந்தது சங்கர்.."

"அப்ப நான்தான் கண்மண் தெரியாம காரை ஓட்டிக் கொண்டு வந்தேன்னு சொல்கிறியா..?"

சங்கர் ஒருமாதிரியான குரலில் கேட்டான்.. பவானிக்கு அழுகையே வந்து விட்டது.. அவளுக்கு சங்கரைப் பிடிக்கும்.. அவனை முதன் முதலாக பார்த்த சிறுமிப் பருவத்திலேயே அவன் ஏதோ ஒருவகையில் அவளை வசீகரித்தான்.. வளர, வளர அவனிடம் பேசிப் பழக ஆசை கொண்டாள்.. ஆனால் அவன் அவளை மதித்து ஒர் வார்த்தை கூடப் பேசியதே இல்லை.. ஒரு வேலையாள் என்ற நிலையிலே அவளைத் தள்ளி நிறுத்தியிருந்தான்.. முகத்தைக்கூடப் பார்க்க மாட்டான்.. சரளாவின் பேச்சில்தான் அவளுடைய திமிர் வெளிப்படும்.. சங்கரின் ஒவ்வொரு அங்க அசைவிலும் அவனுடைய திமிர் வெளிப்படும்..

"நான் அப்படிச் சொல்லலை சங்கர்.. நீ கண்ட்ரோலா காரை டிரைவ் பண்ணறவன்.. அதனாலதான் சட்டுன்னு பிரேக் போட்டு ஆக்சிடெண்ட் ஏற்படாம சமாளிச்சுட்ட.."

"அதை இந்தப் பட்டிக்காட்டிடம் சொல்லு.. ஆளும் தலையும்.. தள்ளி நில்லு.. இதெல்லாம் மெடிகல் ஸ்டூடண்டாம்.."

சங்கர் காரில் ஏறிவிட்டான்.. வினோத் பவானியை அனுதாபத்துடன் பார்த்தான்.. அவள் பொங்கி வந்த

அழுகையைக் கட்டுப்படுத்திக்கொண்டு அசையாமல் நின்றாள்..

வினோத்தின் அனுதாபப் பார்வையை பவானி விரும்ப வில்லை.. அவள் உதட்டைக் கடித்தபடி ஸ்கூட்டியைத் தூக்கப் போனாள்.. அதற்குள் குனிந்து விட்ட வினோத் ஸ்கூட்டியைத் தூக்கி நிறுத்தி விட்டுக் கனிவுடன் பவானியைப் பார்த்தான்.

"உங்களால் இதைத் தூக்க முடியுமா..?"

என்னவோ மலையை வெட்டிச் சாய்த்து விட்டவனைப் போல அவன் கேட்க... பவானி அவன் முகம் பார்க்காமல்..

"வண்டியை ஓட்ட முடிந்தவளுக்குத் தூக்கி நிறுத்த முடியாதா..?" என்று கேட்டாள்...

"தேவைதாண்டா உனக்கு.." சங்கர் காரிலிருந்து குரல் கொடுத்தான்..

பவானியின் பேச்சில் பாதிக்கப்படாத வினோத் திரும்பிப் பார்த்துச் சிரித்துவிட்டு...

"பாருங்க.. உங்களாலே அவன் என்னைக் கேலி செய்கிறான்.." என்று பவானியிடம் சொன்னான்..

பவானிக்கு சங்கரைத்தான் தெரியும்.. வினாத்தைத் தெரியாது.. அறிமுகமில்லாதவனிடம் எப்படிப் பேசுவது என்ற சங்கடத்துடன் ஸ்கூட்டியைக் கிளப்பப் போனாள்.. சங்கருக்கே அவள் யாரென்று தெரியவில்லை.. இந்த லட்சணத்தில் அவனுடைய நண்பனிடம் அவள் என்னத்தைப் பேசுவது..?

"நீங்க இந்த ஊரா..?" வினோத் பேச்சை வளர்த்தான்..

"ஆமாம்ன்னு இந்தப் பெண் சொன்னா என்ன செய்கிறதா உத்தேசம் வினோத்.., பெண் கேட்கப் போறியா..?" சங்கர் கிண்டலாகக் கேட்டதில் பவானி துடித்துப் போனாள்..

'நீ இப்படிப் பேசலாமா..?'

அவளது அதிர்ந்த பார்வையில் சங்கர் புருவங்களை உயர்த்தினான்.. வினோத் நண்பனைக் கடிந்து கொண்டான்..

"உனக்கு எப்போ என்ன பேசறதுன்னு தெரியலை சங்கர்.."

"ஈஸிட்..? நீ வேண்டும்ன்னா சொல்லிக்கொடு.."

"இது ஜோக்கில்லை சங்கர்.. முன் பின் தெரியாதவர்களிடம் இப்படித்தான் பேசுவதா..? "

"முன்னே பின்னே தெரியாத பொண்ணுன்னு தெரியுதில்ல.. அப்புறம் அந்தப் பெண்ணிடம் உனக்கென்ன பேச்சு வேண்டிக்கிடக்கு..?"

நண்பர்கள் இருவரும் வழக்கடித்துக் கொண்டிருக்க, பவானி ஸ்கூட்டியைக் கிளப்பிச் சிட்டாகப் பறந்து விட்டாள்..

"பாவம்.." பவானியின் ஸ்கூட்டி சென்ற திசையைப் பார்த்தபடி சொன்னான் வினோத்..

"எதை வைத்து அவ பாவம்ன்னு நீ டிசைட் பண்ற..?" சங்கர் அலட்சியமாகக் கேட்டான்..

"பார்த்தா நல்ல பெண் போல தெரியுது.."

"ஓ.. இந்த வெர்ல்டில நல்லவங்களா இருந்தா அவங்க பாவம்ன்னு பரிதாபப்பட வேண்டிய ஜீவன்கள்.. இல்லையா..?"

"உனக்கு எல்லாமே விளையாட்டுத்தான் சங்கர்.."

"நீ ஒருத்தன் சீரியஸா இருக்கிறதே போதும்.. எல்லோரும் உன்னைப் போல இருந்துட்டா இந்த உலகம் தாங்காது.. வா..வா.. காரில் ஏறு.. வீட்டுக்குப் போகலாம்.."

வினாத் காரில் ஏறிக் கொண்டான்.. காரை ஓட்டிக் கொண்டிருநத சங்கர் எதையோ நினைத்துக் கொண்டவனைப் போல தனக்குத்தானே சிரித்துக் கொண்டான..

"என்னடா..?" வினோத் புரியாமல் கேட்டான்..

"இல்லை.. அந்தப் பெண்ணை நல்லவன்னு நீ சொன்னியே.."

"ஸோ வாட்..?"

"நல்லவளுக்கு அழகு சொல்லாமல் போவது.. அதான் ஒரு தேங்க்ஸ் கூட உனக்குச் சொல்லாம ஓடிப் போயிட்டா.."

"ஓடிப் போகலை.. ஸ்கூட்டியில் போனா.."

வினோத் பிழை திருத்தம் செய்தான்.. சங்கர் இமைக்காமல் அவனை ஓர் பார்வை பார்க்க, கைகளை உயர்த்தி..

"அம்பேல்.." என்று சிரித்தான்..

சங்கரின் காரைக் கண்டதும் வேகமாகக் கேட்டைத் திறந்து விட்ட காவலாளி ஓர் சல்யூட்டை வைத்தான்.. தலையைக் கூட அசைக்காமல் இறுக்கமாக முகத்தை வைத்துக் கொண்டு காரை காம்பவுண்டுக்குள் விட்டான் சங்கர்.. நீண்ட பாதையில் ஓடிய கார் போர்டிகோவில் நின்றிருந்த குமரகுருவை மோதுவதைப் போல உரசி நின்றது.. குமரகுரு துள்ளி விலகி நின்றார்.. அவர் கண்களில் பயம் வந்திருந்தது..

"ஸ்டுப்பிட் ஓல்டு மேன்.." சங்கர் முணுமுணுத்தான்..

"தப்பு சங்கர்.. அவர் போர்டிகோவில் நின்றிருந்தது உனக்குத் தெரியும்தானே.. தள்ளி நிறுத்தியிருக்கலாமே.." வினோத் ஆட்சேபித்தான்..

"இப்ப என்ன..? மேலேயா மோதிட்டேன்..?" சங்கர் தோள்களைக் குலுக்கினான்..

"உன் கார் அவரை குளோஸா டச் பண்ணுச்சு சங்கர்.."

"ஸோ வாட்..? கார் வருகிறதைப் பார்த்து அவர்தான் தள்ளி நின்றிருக்கனும்.."

அதற்கு மேல் பேச எதுவுமில்லை என்பதைப் போல சங்கர் காரை விட்டு இறங்கினான்.. வணக்கம் சொல்லி வரவேற்ற குமரகுருவைத் திரும்பியும் பார்க்காமல் சங்கர் வீட்டுப் படியேறி விட்டான்..

முன்னாலிருந்த டிபன் பாக்ஸைத் திறக்காமல் செடியில் இருந்த பூக்களைப் பார்த்தபடி மரத்தடி சிமிண்ட் பெஞ்சில் செதுக்கி வைத்த சிலை போல உட்கார்ந்திருந்தாள் பவானி.. அப்படி அவள் உட்காருபவளல்ல.. மதிய உணவு இடைவேளையில் அவசரமாக உணவை உண்டு விட்டு வகுப்பறைக்கு ஓடிவிடுபவள்..

'எம்புட்டு அழகா இருக்காரு..'

அவளது நினைவெல்லாம் சங்கரின் மீதே இருந்தது.. ஏழுவயது சிறுமியாக இருந்தபோது சங்கரைக் கண்டால் ஒரு பயம் வந்தது.. அந்த பயத்தையும் தாண்டி அவன்மீது ஒரு ஈர்ப்பு வந்தது.. பதினான்கு வயதில் இருந்த சங்கர் அவளைக் கண்டாலே மிரட்டுவான்.. வேலை ஏவுவான்.. அவன் காலால் சொல்லும் வேலையை பவானி தலையால் செய்து முடிப்பாள்.. அவனுக்கு வேலை செய்வதென்றால் அவளுக்கு அவ்வளவு சந்தோசமாக இருக்கும்.. சங்கரும் சரளாவும் பேசிச் சிரிக்கும் போது தானும் அவர்களுடன் உட்கார்ந்து உரையாட வேண்டும் என்று அந்தச் சின்னஞ்சிறு சிறுமி ஏங்குவாள்.. அது முடியாது.. சரளாவை இப்படித்தான் என்று அவளால் உணர முடிந்தது.. தள்ளி நிற்க முடிந்தது.. சங்கரைப்பற்றி எப்படியும் அவளால் கணிக்க முடியவில்லை..

சங்கர் கர்வி.. திமிர் பிடித்தவன்.. வேலையாள்களிடம் சரிசமமாக நின்று பேச மாட்டான்.. சிவனேசனின் பிரதி பிம்பமாக கண்டிப்பும் கறாருமாக இருப்பான்.. அவனைப் பொறுத்தவரை குமரகுருவும் அவருடைய பேத்தியும் ஜமீன் வீட்டின் வேலையாள்கள்.. அவர்கள் உறவினர்கள் என்று என்றைக்குமே அவன் நினைத்ததில்லை.. ஒர் பார்வையால் குமரகுருவைத் தள்ளி நிறுத்தி விடுவான்.. பவானி என்ற சிறுமி ஒருத்தி அந்த ஜமீன் வீட்டுத் தோட்டத்தில் குடியிருக்கிறாள் என்ற நினைவுகூட அவன் மனதில் இருந்ததில்லை..

பவானிக்கு அது புரிந்ததில்லை.. சங்கர் ஒரு இமயம்.. அவளுக்கு எட்டாத உயரத்தில் இருப்பவன் என்பது மட்டும் புரிந்தது.. அவள் பத்து வயது சிறுமியாக இருந்தபோது பதினேழு வயது சங்கர் படிப்புக்காக சென்னைக்கு சென்று விட்டான்.. அடுத்து வந்த வருடங்களில் எப்போது அவன் வந்தாலும் பவானியின் மனதில் ஓர் குதூகலம் பிறக்கும்.. ஏதாவது ஒரு வேலையைச் சாக்காக வைத்து அவள் ஜமீன் வீட்டுக்கு அடிக்கடி போவாள்.. சங்கரை ஒளிந்திருந்து பார்ப்பாள்.. அவனுடைய பேச்சு, சிரிப்பு, நடையுறை பாவனை என்று ஒவ்வொன்றையும் ரசிப்பாள்.. அவன் ஊருக்குப் போனபின்பு அவற்றையெல்லாம் மனதில் திரும்பத் திரும்ப நினைத்து அசை போடுவாள்.. அடுத்து சங்கரைப் பார்க்கும்வரை அந்த நினைவுகள் போதும் அவளுக்கு.

சங்கர் வரப் போகிறான் என்ற பேச்சு வந்ததுமே அவனுடைய அறையைச் சுத்தம் பண்ணி அழகு செய்து வைப்பாள்.. நெருக்குருகிப் போவாள் சுமதி..

"நீ மட்டும் இல்லைன்னா இந்த ஜமீன் வீட்டில் என் பாடு திண்டாட்டம்தான் பவானி.. நான் என்ன செய்தாலும் பெரியம்மா குத்தம் சொல்லிக்கிட்டே இருப்பாங்க.. அதுவே நீ செய்தா தங்கமா பாராட்டறாங்க.."

"அத்தைக்கு யாரு வேலை செய்யறதுன்னு தெரியாது சுமதியக்கா.. நான் செய்யற வேலையை நீங்க செய்ததாத்தானே நினைச்சு பாராட்டறாங்க..?"

"ஆனா அதைச் செஞ்சது நீதான்னு என் மனசுக்குத் தெரியுமே பவானிக்கண்ணு.."

இதுதான் ஏழை மனது.. அடுத்தவரின் உழைப்புக்கான பாராட்டில் உரிமை கொண்டாடாது.. தனதென்று ஏற்றுக் கொள்ளாது..

"விடுங்கக்கா.. இதெல்லாம் பெரிய விசயமா..? யாருக்காக இதையெல்லாம் செய்யறேன்..? உங்களுக்காகத்தானே செய்யறேன்..?"

ஐஸ்மலையைத் தூக்கி அவள் தலையில் வைப்பாள் பவானி.. அதில் இன்னும் உருகி நீராகிப் போவாள் சுமதி..

"ஆத்தி.. என்ற பவானிக் கண்ணுக்குத்தான் எம்மேல எம்புட்டு பாசம்.."

பவானியின் மனதுக்குத்தான் தெரியும்.. அவளுக்கு யார்மீது பாசம் என்பது.. அவள் சுமதிக்காகவா சங்கரின் அறையைச் சுத்தம் செய்து அழகு படுத்துகிறாள்..? சங்கருக்காக செய்கிறாள்.. அவள் பார்த்துப் பார்த்துச் செய்வதையெல்லாம் சங்கர் ஒர்நாளும் உணரப் போவதில்லையென்று தெரிந்திருந்தும் அவள் அவனுக்காக நெற்றி வியர்வை சிந்த வேலை செய்தாள்..

"அத்தை மகனே.. அத்தானே - உன்

அழகைக் கண்டு நான் பித்தானேன்.."

கௌரியத்தையின் மகன் சங்கர் என்ற நினைவு மனதில் வெல்லக் கட்டியாக இனிக்க அவள் பாட..

"அட.. நம்ம எம்.ஜி.ஆரப் பாத்து சரோஜா தேவி பாடின பாட்டு.." என்றாள் சுமதி..

'ஊஹீம்.. இது சங்கரை நினைத்து இந்த பவானி பாடும் பாடல்..'

மனதில் நினைப்பதை வெளியில் சொல்ல முடியாத ஊமையாக தலையை ஆட்டினாள் பவானி..

'அப்ப அவர் வர்ற நாளு தெரிஞ்சிருந்தது.. ரூமை சுத்தம் பண்ணி வைச்சேன்.. இப்பத் திடிர்ன்னு வந்து நிற்கிறாரே.. அவரோட ரூம் எப்படியிருக்குமோ..'

பவானி கவலைப்பட்டாள்.. பணக்காரர்களின் வாழ்வைப் பற்றித் தெரியாத பேதை அவள்.. அருகிலிருந்தாலும் அவள் வாழ்வு தனி வாழ்வு.. அவளுக்குத்தான் சங்கர் வரப்போவது தெரியாது.. ஜமீன் குடும்பத்திற்கு அது தெரியும்.. சங்கரும் அவனுடைய நண்பனும் வருவதற்காக அவர்களுடைய அறைகள் தயார்நிலையில் காத்திருந்தன என்ற விவரம் அறியாமல் பவானி தவித்துப் போனாள்..

"ஹாய் பவி.. சாப்பிடாம என்ன யோசனை..?"

அருகில் கேட்ட ஆண்குரலில் தலை நிமிர்ந்தாள்.. நான்காம் ஆண்டில் படித்துக் கொண்டிருந்த அஜய் அவளருகில் அமர்ந்தான்.. பவானிக்கு அது பிடிக்கவில்லை.. அவளைக் கண்டதும் அஜய்யின் கண்களில் ஓர் மின்னல் வருவதை அவள் உணர்ந்திருந்தாள்.. அதனால் அவன் பேச வரும் போது நட்புடன் பேசாமல் சீனியர் என்ற மரியாதையுடன் பேசி விலகி விடுவாள்..

இன்றும் அதுபோல அவள் எழுந்து நிற்க..

"பர்ஸ்ட் இயர் முடியப் போகுது.. இன்னும் என்ன சீனியர் ஜீனியர்ன்னு பயந்து நிற்கிற.. ரிலாக்ஸ் பவி.. உட்கார்.." என்றான் அஜய்..

பவானி என்ற அவளது பெயரை அவன் 'பவி' என்று சுருக்கி அழைத்தது அவளுக்கு எரிச்சலைத் தந்தது.. அவளுடைய அனுமதி இல்லாமல் அவன் எப்படி அவள் பெயரைச் சுருக்கிச் செல்லமாக கூப்பிடலாம்..?

அதைச் சொல்லிக் கண்டனம் தெரிவிக்கவும் முடியாது.. அவளைப் பட்டிக்காடு என்று சொல்லி விடுவார்கள்.. இதை எண்ணமிட்டுக் கொண்டிருந்தபோதே.. சங்கர் அவளை..

'பட்டிக்காடு..'

என்று அலட்சியமாகச் சொன்னது நினைவுக்கு வந்தது.. அதற்காக ஏன் அவளுக்கு கோபம் வரவில்லை..?

பவி என்று கூப்பிடுவது அவள் மனதை பாதிக்கிறது.. பட்டிக்காடு என்று சங்கர் சொல்வது மட்டும வெல்லக்கட்டியாக இனித்துத் தொலைக்கிறது..

'இவனும் சின்னய்யாவும் ஒன்னா..?' அவள் மனம் கேட்டது..

"நான் கிளாஸீக்குப் போகணும் சார்.." பவானி டிபன் பாக்ஸை எடுத்துப் பையில் திணித்தாள்..

"சாரா..? கால் மி அஜய்.." அவன் உல்லாசமாகச் சிரித்தான்..

'என்ன கழுதைக்கு..?' மனதுக்குள் அவனைத் தாளித்தவள்..

"சீனியரை பெயர் சொல்லிக் கூப்பிட்டா, மற்ற சீனியர்ஸ் என்னை டின் கட்டிருவாங்க சார்.. " என்று வெளியே அப்பாவி போலச் சொன்னாள்..

"அவங்களை நான் பார்த்துக்கிறேன்.." அஜய் ஹீரோ போல சட்டைக் காலரைத் தூக்கி விட்டான்..

'இவன் வேற ஷோ காண்பிச்சு காமெடி பண்றான்.. டேய்..

என் ஹீரோ வெளிநாட்டில படிப்பை முடிச்சுட்டு பறந்து வந்திருக்காருடா..'

பவானி தன் கோட்டைத் தூக்கிக் கையில் போட்டுக் கொண்டு மரியாதையாக அஜய்யைப் பார்த்துத் தலையை அசைத்து விட்டு அவன் தடுத்துப் பேசுவதற்குள் வேகமாக நடந்து விட்டாள்..

"என்னடி இப்படி ஓடி வர்ற..?" மேனகா வியப்புடன் கேட்டாள்..

"மரத்தடியில் சாப்பிட போனேன்.."

"நான் என்ன கேட்டேன்.. நீ என்ன பதிலைச் சொல்கிற..?"

"சாப்பிடப் போன பெஞ்சில அஜய் வந்து உட்கார்ந்தான்.."

"யாரு..? ஃபோர்த் இயர் அஜய்யா..?"

"அவன்தான்.."

"அதான் இப்படி ஓடி வர்றியா..? சாப்பிட்டியா இல்லையா..?"

"சாப்பிடலை.."

"சுத்தம்.. போ.. அவன் பாட்டுக்கு ரம்பம் போடறான்னு நீ சாப்பாட்டை உள்ளே தள்ளிட்டு வர வேண்டியதுதானே..?"

"விடுடி.. எனக்குப் பசியில்லை.."

பவானிக்கு பசிக்கவில்லை.. அவளுடைய மனமெல்லாம் நிறைந்திருந்தது.. வீட்டுக்குப் போனால் சங்கரைப் பார்க்கலாம்.. என்ற நினைவே அவள் மனதை வியாபித்திருந்ததால் பசி தெரியவில்லை.. அவளுக்குத் தெரிந்ததெல்லாம் சங்கர் ஜமீன் வீட்டுக்கு வந்திருக்கிறான்,

மூன்று வருடங்களுக்குப் பின்னால் பவானி அவனைப் பார்த்து விட்டாள் என்பது மட்டுமே..

7

ஊரை ஒட்டி ஓடிய ஆறு.. அதையொட்டிய கோவில்.. அடுத்து தென்னந்தோப்புகள், தோட்டங்கள், நெல்வயல்கள் என்று பார்ப்பதற்கு வெகு ரம்யமாக காட்சி தந்தது அன்னவாசல்..!

"வாவ்.." என்றான் வினோத்..

"எங்க ஊர்.." பெருமையுடன் சொன்னான் சங்கர்..

"எந்தப் பக்கம் பார்த்தாலும் பச்சைப் பசேல்ன்னு அழகா இருக்குடா.."

"அழகா மட்டுமில்ல.. அன்னமும் போடும்.."

"அன்னமா..? அது பறவையில்ல..?"

"அன்னப்பறவையைச் சொல்கிறயா..? இது அன்னம்.. சாதம்.. பசியாற அன்னம் வேணும்.. அன்னம் சமைக்க நெல் வேணும்.. மூனு போகம் நெல் விளையற பூமி இது.. அன்னம் வழங்கற பூமிங்கிறதினால அன்னவாசல்ன்னு பெயர் வந்ததாம்.. எங்க பாட்டி சொல்வாங்க."

"அவங்களுக்கு யார் சொல்லியிருப்பாங்க..?"

"அவங்க பாட்டி சொல்லியிருப்பாங்க.."

நண்பர்கள் உரக்கச் சிரித்தார்கள்..

"எதைப் பேசி சிரிக்கறீங்க..?" என்று கேட்டபடி சுமதி பின் தொடர கௌரி அங்கே வந்தாள்.. மொட்டை மாடியைப் போல இல்லாமல் ஓர் தோட்டத்தைப் போல.. ஓர் பூங்காவைப் போல வடிவமைக்கப் பட்டிருந்தது ஜமீன் அரண்மனையின் மொட்டைமாடி.. சுற்றுச்சுவர் அருகில் வரிசையாக பூந்தொட்டிகள்.. அதில் பூத்த கொடி மலர்கள் கைபிடி சுவரின் மீது படர்ந்து முற்றிலுமாக சுவரை

மறைத்து கொடி மலர்களினால் சுற்றுச் சுவர் அமைக்கப் பட்டிருப்பதைப் போல காட்சியளித்தன..

மொட்டை மாடியெங்கும் வரிசை கட்டி, குறுக்கு மறுக்காக மண்தொட்டிகள்.. அதில் மா, கொய்யா, பலா என்று சிறு மரங்கள்.. மலர் செடிகள்.. நடுவில் போடப்பட்டிருந்த ஓடுகளால் கூரை வேயப்பட மண்டபம்.. அதில் தொங்கிய மர ஊஞ்சல்..

"உன் வீடு பேலஸ் போலவே இருக்கு.." சிலாகித்தான் வினோத்..

பெருமையுடன் தாயைப் பார்த்துக் கொண்டான் சங்கர்..

"பேலஸ் போலவா..? இது பேலஸ்ன்னுதான் இந்த ஊரில சொல்லிக்குவாங்கடா.. ஜமீன் அரண்மனை..!"

மகனின் பெருமையில் பங்கு கொள்ளாமல் சாந்தமாக முறுவலித்தாள் கௌரி.. சுமதியின் கையில் பெரிய டிரே இருந்தது.. அதில் பலகாரத் தட்டுகளும், காபி கெட்டிலும், கோப்பைகளும் இருந்தன.. ஊஞ்சலின் அருகில் வட்ட வடிவிலான மேஜைகள் போடப்பட்டிருந்தன.. ஒவ்வொரு மேஜையைச் சுற்றிலும் நான்கு சேர்கள்..

"ஸ்டார் ஹோட்டல் கார்டனைப் போல அப்பியரன்ஸ்.." சுற்றிலும் பார்வையை ஓட விட்டான் வினோத்..

"இங்கே அது போல, இது போலன்னு நீ அப்ரிசியேட் பண்ண நிறைய இருக்கும்.." என்றான் சங்கர்..

அவர்கள் அமர்ந்திருந்த மேஜையின் மீது சுமதியை டிரேயை வைக்கச் சொல்லிவிட்டு அவளைப் போகச் சொன்னாள் கௌரி.. வெகுகாலம் கழித்துப் பார்க்கும் மகனின் மீது பிரியமாக படிந்தது அவள் பார்வை.. மகனின் தலையைப் பாசத்துடன் வருடிக் கொடுத்தவள்..

"படிக்கப் போனா ஊரை மறந்துரனும்னு இருக்கா..? வருசத்துக்கு ஒரு தரம் அன்னவாசலுக்கு வந்து போயிருக்கக் கூடாதாடா..?" என்று ஏக்கத்துடன் கேட்டாள்..

"அதுதான் வந்துட்டேனில்ல.." அன்னையின் கையைப் பற்றி உள்ளங்கையில் தட்டிக் கொடுத்தான் சங்கர்..

அந்தக் காட்சியைப் பார்க்க அருமையாக இருந்தது.. வினோத்துக்கு பொறாமையாக இருந்தது.. இதுபோன்றஓர் வாழ்வை வாழ்ந்து பார்த்திட மனதுக்குள் ஏக்கம் கொண்டான்.. அவனுடைய பெற்றோருக்கு அவன் ஒரே மகன்.. அவர்களுக்கு வினோத்தின் மீது பாசம் அதிகம்தான்.. அதை வெளிப்படுத்தும் முறைதான் வேறு.. வினோத்தின் அம்மா கௌரியைப் போல மகனின் தலையைக் கோதி கொஞ்ச மாட்டாள்.. பட்டும் படாமலும் கட்டிக் கொண்டு விலகி விடுவாள்..

"பை வினோத்.. ஸீ.. யு.. எனக்கு அர்ஜெண்ட் போர்டு மீட்டிங் இருக்கு.." என்று பறந்து விடுவாள்..

வினோத்தின் அப்பா சங்கரைக் கண்டதும் சிவனேசன் கட்டித்தழுவி, உச்சி முகர்ந்து கண்கலங்கியதைப் போல உணர்ச்சிவசப்பட மாட்டார்... ஏதோ பார்ட்டியில் கை கொடுப்பதைப் போல நாசுக்காக கை கொடுத்து, மகனின் தோளில் லேசாக தட்டிவிட்டு..

"பிளைட்டுக்கு நேரமாச்சு.. போனில் பேசலாம்.." என்று சொல்லியபடி விரைந்து விடுவார்..

அவர்கள் ஹை சொசைட்டியாம்.. நுனி நாக்கு ஆங்கிலத்துடன் மேற்கத்திய கலாச்சார முறையில் வாழும் நாகரிக வர்க்கத்தினராம்.. வினோத்தி அம்மா கம்பெனியைப் பார்த்துக் கொள்ள, வினோத்தின் அப்பா வெளிநாடுகளுக்குப் பறந்து வியாபாரத்தை பெருக்கிக் கொண்டிருந்தார்.. இருவரும் சேர்ந்திருக்கும் சமயங்களில் பார்ட்டிகளுக்குப் போய் விடுவார்கள்.. வேலையாள்கள் பரிமாறச் சாப்பிட்டு, அவர்களது கவனிப்பில் வளர்ந்த வினோத்துக்கு சங்கரின் கிராமத்தையும், வீட்டையும், பெற்றோரையும் பிடித்துப் போனதில் ஆச்சரியமேதுமில்லை..

"பேச்சு.. பேச்சு.. பேச்சுத்தானா..? பலகாரம், காபி, சாப்பிட்டுட்டு பேச வேண்டியதுதானே.. பசிக்காதா..?"

குழந்தையை அதட்டுவதைப் போல மகனை அதட்டிவிட்டு பலகாரத் தட்டுகளை நண்பர்களிடம் நீட்டினாள் கௌரி.. இனிப்பு கார பணியாரங்களும், உளுந்தவடையும் தொட்டுக்கொள்ள கெட்டிச் சட்டினியும் வாசனையுடன் இருந்தன.. பீட்ஸா, பர்கர் என்று சாப்பிட்டு வளர்ந்திருந்த வினோத் பணியாரத்தை வியப்புடன் பார்த்து விட்டு..

"இது வடை.. தெரியும்.. இது என்னம்மா..?" என்று கௌரியிடம் விளக்கம் கேட்டான்..

"குழிப்பணியாரம்.." கௌரி விளக்கம் சொன்னாள்..

"வெறுமனே பணியாரம்ன்னு மட்டும் சொல்லுங்கம்மா..

குழி பணியாரம்ன்னு சொன்னா, குழியெங்கேன்னு தேட ஆரம்பிச்சிருவான்.. ஹா.. ஹா.." சங்கர் சிரித்தான்..

"இதைச் செய்யும் பணியாரச் சட்டியில சின்னச் சின்ன குழிகள் இருக்கும்.. அதில் மாவை ஊற்றி வேக விடனும்.." கௌரி சிரிக்காமல் சொன்னாள்..

"செம டேஸ்ட்.." வினோத் ரசித்துச் சாப்பிட்டான்..

"ம்மா.."

கன்றுக்குட்டியைப் போலக் குரல் கொடுத்தபடி அங்கே வந்தாள் சரளா.. வினோத்தை கள்ளப்பார்வை பார்த்தாள்.. சிரத்தையாக தன்னை அலங்கரித்துக் கொண்டிருக்கிறாள் என்பது தெளிவாகத் தெரிந்தது.. அமைதியே வடிவானவள் போல இமைகளை படபடவென அடித்தபடி கௌரியிடம் சிணுங்கினாள்..

"நீங்க இங்கேயா இருக்கறீங்க..? உங்களை எங்கேயெல்லாம் தேடறது..?"

கேள்வி கௌரியிடம்.. பார்வை வினோத்திடம்..

கௌரிக்கு மகளின் செயல் பிடிக்கவில்லை.. வினோத்திற்கு சரளாவைக் கொடுக்கலாம் என்ற பேச்சு குடும்பத்துக்குள் ஓடிக் கொண்டிருப்பது உண்மைதான்..

சங்கர்தான் அந்தப் பேச்சை ஆரம்பித்து வைத்தான்.. போனில் பேசும்போது சிவனேசனிடம் சொன்னான்..

"வினோத் நமக்கு டிஸ்டன்ஸ் ரிலேட்டிவ்தான்ப்பா.. உங்க வகையறாவில் ஒரு தாத்தா சென்னையில செட்டிலாகிட்டார்ன்னு சொல்வீங்களே.."

"ஆமாண்டா சங்கர்.. கந்தகோட்டை ஜமீன்தாத்தா.. குண்டுச்சட்டியில குதிரை ஓட்ட முடியாது.. ஜமீன் பெருமையை மட்டும் வைச்சும் காலம் தள்ள முடியாதுன்னு சொல்லி சென்னையில கம்பெனி ஆரம்பிச்சாரு.. இப்ப அது பெரிசா வளந்து வெளிநாட்டில எல்லாம் பரவிருச்சாமே.. அதைப் பார்த்துத்தான் என் பாட்டனாரு சென்னையில பங்களாக்களாக் கட்டிப் போட்டு நாலு தொழிலில முதலீடு பண்ணினாரு.."

"கந்தகோட்டை ஜமீன் பரம்பரையேதான்... வினோத் வீட்டுக்கு ஒற்றை பிள்ளை.. நம்ம சரளாவுக்கு ஏற்ற மாப்பிள்ளை.."

"முறை சரியாத்தான் வருது.. நீ நம்ம ஊருக்கு வர்றப்ப அந்தப் பையனையும் கூப்பிட்டுக்கிட்டு வா.. பிடிச்சிருந்தா பேசி முடிச்சுரலாம்.."

"அவனை உங்களுக்கு நிச்சயமா பிடிக்கும்ப்பா.."

"அதுக்கென்னடா தம்பி.. உன் ஆசைப்படியே உன் தங்கச்சி கல்யாணத்த நடத்திப்புடலாம்.."

"வினோத் எனக்கு பெஸ்ட் பிரண்டுப்பா.. அவனே எனக்கு மச்சினனா வந்தா நல்லாயிருக்கும்ப்பா.."

"நல்லதே நடக்கும்டா தம்பி.. ஒன்னைக் கவனிச்சியா..?"

"என்னப்பா..?"

"என்னோட தூரத்து சொந்த பந்தமெல்லாம் இப்படிக் கோடிஸ்வரர்களா இருக்காங்க.. அதுவே உங்க அம்மாவுக்குத் தூரத்துச் சொந்தம்ன்னா வேலைக்காரன்களா இருக்காங்க.."

"இதை அம்மாவிடம் சொல்லட்டுமா..?"

"எதுக்குடா மகனே..! குடும்பத்தில சூறாவளி சுத்தறதுக்கா..? நீ படிப்பை முடிச்சுட்டு உன் நண்பனை கையோடு கூப்பிட்டுக்கிட்டு வர்ற வழியை மட்டும் பாரு.."

தந்தை சொல் மிக்க மந்திரமில்லை என்று சங்கர் வினோத்தை கையோடு அழைத்துக் கொண்டு வந்து விட்டான்..

8

வினோத் சரளாவைப் பார்க்கவில்லை.. நண்பனின் வீட்டிற்கு விருந்தாளியாக வந்திருக்கிறோம்.. நண்பனின் தங்கையை பார்வையிடுவது தவறு என்ற பண்பாடு தெரிந்தவனாக இருந்தான்.. அவனது பார்வையைச் சந்திக்க முடியாத ஏமாற்றத்தில் சரளாவின் முகம் சிணுங்குவதைக் கண்ட கௌரிக்கு என்ன சொல்வதென்றே தெரியவில்லை.. மகளை கடிந்து கொள்ளவும் முடியவில்லை.. இதற்கு தூபம் போட்டிருப்பது சிவனேசன் ஆயிற்றே.. வினோத்தை உள்நோக்கத்துடன் வரச் சொல்லியிருப்பதை கௌரி ஆதரிக்கவில்லை..

"பெரிசா அன்னவாசல் ஜமின்தார்ன்னு பெருமை பீத்திக்குவீங்களே.. இதுதானா உங்க ஜமின் பெருமை..?"

"ஏண்டி..? என் ஜமீன் பெருமைக்கு என்ன குறைச்சல்..?"

"பெண்ணுக்கு மாப்பிள்ளை பார்க்கிறதுன்னா முறைப்படி பார்க்கனும் முறைப்படி நம்ம பெண்ணைக் காட்டனும்.. இப்படி வீட்டுக்கு விருந்தாளியா வர வைச்சு பெண்ணைக் காட்டக்கூடாது."

கௌரியின் கோபத்தில் சிவனேசன் தடுமாறினார்.. அவருக்கும் வினோத்தை வரவழைத்துப் பெண்ணைக் காட்டுவதில் மனதுக்குள் சங்கடம் இருந்ததுதான்.. அவருடைய தரத்தை விட்டு இறங்கிப் போவதா என்று

சஞ்சலப்பட்டுக் கொண்டிருந்தார்.. அதை மனைவியிடம் ஒப்புக் கொள்ள அவருடைய ஆணவம் தடுத்தது.. அவரும்தான் என்ன செய்வார்..? வினோத்தைப் பற்றி சங்கர் சிவனேசனிடம் போனில் சொன்ன சமயத்தில் சரளா சிவனேசனிடம் எதையோ பேச வந்திருக்கிறாள்.. மகள் வந்ததை சிவனேசன் பார்க்கவில்லை.. கௌரி பார்த்து விட்டாள்.. சிவனேசனிடம் தாழ்ந்த குரலில் முணுமுணுத்தாள்..

"ஏங்க.. நீங்களும் உங்க மகனும் பேசறதை காதுக்குள்ள வைச்சுப் பேசிக்க மாட்டிங்களா..? ஸ்பீக்கர் போட்டுத்தான் கேக்கனுமா..?"

"ஏண்டி.. என்ன ஆச்சு..?"

"உங்க மக வந்து எல்லாத்தையும் கேட்டுட்டா.."

"எங்கே..?"

அவசரமாக ஸ்பீக்கரை அணைத்து விட்டுத் திரும்பிப் பார்த்தார் சிவனேசன்.. சரளாவின் முகத்திலிருந்த குறுகுறுப்பு அவள் சங்கர் பேசியதை கேட்டு விட்டாள் என்பதைச் சொல்லியது.. சங்கர் அனுப்பி வைக்கும் போட்டோக்களில் வினோத்தும் உடனிருந்தால் அதைத் தனித்து ஸ்கிரின் ஷாட் எடுத்து சேமித்து வைத்துப் பார்க்க ஆரம்பித்தாள்.. அதைப் பார்த்து விட்ட கௌரி கவலைப்பட்டாள்..

"இதுக்குத்தான் சொன்னேன்.. நீங்களும் சங்கரும் காதில் போட்டுக்கலை.. இப்ப பாருங்க.. என்ன நடக்குதுன்னு.."

பெண்ணுக்கு வினோத்தை பிடித்திருக்கிறது என்பதில் சிவனேசன் முடிவு செய்து விட்டார்.. அவருடைய மகளுக்குப் பிடித்த மாப்பிள்ளையைத் திருமணம் செய்து வைக்காவிட்டால் அவர் அன்னவாசல் ஜமீன்தார் என்று சொல்லிக் கொள்வதில் அர்த்தம் என்ன இருக்கிறது..?

"இதோ பார் கௌரி.. நாம முறைப்படி சம்பந்தம் பேசலாம்தான்.. கந்தகோட்டை ஜமீன் வகையறா நாம பொண்ணு கொடுக்கிற முறையிலதான் இருக்காங்க..

ஆனா.. அவங்கள்ளாம் கிராமத்தை மறந்து சென்னைக்குப் போய் செட்டிலாகிட்டாங்க.. இந்தப் பையன் வினோத்தோ வெளிநாட்டிலேயே குடியிருக்கிறவனாம்.. அவனுக்கு நம்ம சரளாவைக் கட்டி வைக்க அவனோட அப்பாம்மா மறுப்புச் சொல்லிட்டாங்கன்னா என்ன பண்றது..?"

"எதுக்கு மறுப்புச் சொல்லப் போறாங்க..? அவங்களை விட நாம எதில குறைஞ்சவங்க..?"

"ஜமீன் வம்சத்தில குறையில்ல கௌரி.. கோடிஸ்வரங்க என்கிறதில அவங்க நம்மள விட பலமடங்கு உசத்தியாத்தான் இருக்காங்க.. அதனாலதான நானு சங்கர சென்னைக்கு அனுப்பி படிக்க வைச்சேன்..? சரளாவும் போயிருக்கலாம்.. மாட்டேன்னு சொல்லிருச்சு.."

"எப்படிப் போவா..? இவ வாங்கற பார்டர் மார்க்குக்கு பக்கத்து டவுனுதான் தோதுபடும்.. அன்னவாசல் ஜமீன்தாரோட பொண்ணு.. பேருக்கு படிப்பிருந்தா போதும்ன்னு சொல்லி 'ஆ' ன்னு பாப்பாங்க.. கேலி பேச மாட்டாங்க.. அந்த பார்டர் மார்க்கையும் காலேஜில இழுத்துப் பிடிச்சுப் போட்டுக்கிட்டு இருக்காங்க.. சென்னைக்குப் போனா முட்டையில்ல வாங்குவா..? அன்னவாசல் ஜமீன்னைப் பத்தி அங்கே யாருக்குத் தெரியும்..? உனக்கெல்லாம் படிப்பெதுக்கு.. நீயெல்லாம் எதுக்கு காலேஜீக்கு வர்றன்னு கேலி பேசிற மாட்டாங்களா..? அதான் போகலை.."

"நம்ம பொண்ணைப் பத்தி நீயே இப்படிப் பேசினா நல்லாயிருக்காது கௌரி.."

"பேசனும்னு எனக்கு மட்டும் ஆசையா..? அவ நடந்துக்கிறது அப்படி.. சொல்பேச்சு கேட்க மாட்டேங்கிறா.."

"விடுடி... சின்னப் பொண்ணு.. வினோத்தைப் பெத்தவங்க நம்ம சரளாவை பட்டிக்காட்டுப் பொண்ணுன்னு நினைச்சு வேணாம்ன்னு சொல்லிட்டா என்னடி செய்யறது..? அதுவே வினோத் எனக்குப் பிடிச்சுருக்குன்னு சரளாவை கைகாட்டிட்டா நல்லதில்லையா..?"

அப்படி வினோத் சரளாவைக் கை காட்ட வேண்டுமென்றால் சரளா வினோத்தின் மனதைக் கவர வேண்டும்... இதில் கௌரிக்கு உடன்பாடில்லை..

"அவன் ஒருத்தன்தான் ஓவியத்துக்கு மாப்பிள்ளையா இருக்கானா..? நம்ம சொந்தபந்தத்திலே படிப்பு, அழகு, பணம்ன்னு எல்லாமும் இருக்கிற மாப்பிள்ளையாப் பார்த்துக் கட்டிக் கொடுத்துட்டாப் போகுது.."

"ஈஸியா சொல்லிட்ட கௌரி.. நம்ம சொந்த பந்தத்திலே அண்ணாந்து பார்க்கிற உசரத்திலே இருக்கிறது ரெண்டே மாப்பிள்ளைகதான்.. ஒன்னு வினோத்.. இன்னொருத்தன் நம்ம சங்கர்.. இவங்களுக்கு இணையா வேற யாருமில்லை.. சங்கரோட தங்கச்சிய வினோத்துக்கு கட்டிக் கொடுக்கிறதுதானே நியாயம்..?"

என்ன நியாயமோ என்ற தலைவேதனையுடன் விட்டு விட்டாள் கௌரி.. என்னதான் தொண்டை வறள, விடிய விடிய எடுத்துச் சொன்னாலும் அவளுடைய பேச்சு சிவனேசனின் மனதில் ஏறப்போவதில்லை என்றான பின்பு பேசி என்ன செய்ய..? பெற்ற மனதுதான் கிடந்து அடித்துக் கொண்டது.. சரளாவின் மனதில் வினோத்தைப் பற்றிய எண்ணம் வந்து விட்டது.. வினோத்திற்கு சரளாவைப் பிடித்திருந்தால் நல்லது.. இல்லையென்றால்..?

கௌரி வேதனை கொண்டாள்.. எப்படி மகளுக்கு புத்திமதி சொல்வது என்று குழம்பினாள்.. சரளா சொல்பேச்சு கேட்க மாட்டாள்.. கௌரிக்கு மகள்மீது அன்பில்லை என்று பழி போடுவாள்.. அழுது ஆகாத்தியம் பண்ணுவாள்.. சிவனேசன் மகள் பேச்சைக் கேட்டுக் கொண்டு மனைவியிடம் சண்டைக்கு வருவார்.. மகளைத் திருத்தவும் முடியாமல் கணவரிடமும் சண்டை போட வேண்டும்..

'தேவையா..?'

அலைபாயும் மனதோடு, சங்கர் வந்தால் எடுத்துச் சொல்லிப் புரிய வைக்கலாம் என்று காத்திருந்தாள் கௌரி.. வந்த சங்கர் கையோடு வினோத்தையும் அழைத்துக் கொண்டு வந்திருந்தான்.. வினோத் வீட்டுக்குள்

வந்த மறுநொடியில் சரளா ஒப்பனை செய்து கொள்ள ஓடி விட்டாள்.. சங்கரும் வினோத்தும் ஹாலில் உட்கார்ந்து பேசிக் கொண்டிருந்த போது அப்போதுதான் மாடியிலிருந்து வருபவளைப் போல..

"அண்ணா.. எப்போ வந்தே..?" என்று ஒன்றும் அறியாத சின்னப் பெண்ணைப் போல இமைகள் படபடக்க ஓடி வந்தாள்..

'இவன் எப்போ வந்தான்னு உனக்குத் தெரியாதா..?'

கௌரிக்கு சங்கடமாக இருந்தது.. அவள் வயிற்றில் பிறந்த மகள் இப்படி நடிக்கலாமா..?

"நான் வந்ததை நீ பார்க்கலையா..?" சங்கர் ஆச்சரியத்துடன் கேட்டான்..

அவன் சிவனேசனைப் போல கண்டிப்பும் கறாரும் நிறைந்தவன்தான்.. பணக்காரர்களுக்கே உரிய ஆணவமும், அகங்காரமும் நிரம்பியவன்தான்.. ஆனால் கௌரியின் வயிற்றில் பிறந்தவன்.. அவள் வளர்த்த மகன்.. பொடித்தனங்களும், பொய்யும், நடிப்பும் இல்லாதவன்.. பட்டென்று கேட்டு விட்டான்..

வினோத் இதைக் கவனித்து விடக் கூடாதே என்று கவலைப் பட்டாள் கௌரி.. நல்ல வேளையாக வினோத் சங்கர் பேசியதை கவனிக்கவில்லை.. நண்பனின் தங்கை என்ற பரிவுடன் லேசாக முறுவலித்தான்.

"இல்லையே அண்ணா.. நீ வந்தது எனக்குத் தெரியாதே.." தடுமாறாமல் பொய் சொன்னாள் சரளா..

'எப்படி பொய் சொல்கிறாள் பார்..' கௌரிக்கு எரிச்சல் வந்தது.. மகளாயிற்றே.. மௌனமாக இருந்தாள்..

"மூணு வருசத்தில என்னமா வளர்ந்திட்ட.." தங்கையை பரிவுடன் பார்த்த சங்கர்..

"வினோத்.. இவதான் என் ஒரே தங்கை.. சரளா.. வால் ஒன்னுதான் இல்ல.. அவ்வளவு சேட்டை செய்வா.." என்று நண்பனிடம் அறிமுகம் செய்து வைத்தான்.

"பார்த்தா அப்படித் தெரியலையே.. அமைதியா இருக்காங்க.." வினோத் மரியாதையுடன் சொல்லி வைத்தான்..

"அண்ணா.. நான் ஒன்னும் கிழவியில்லை.. உன்னோட பிரண்ட் என்னை வாங்க போங்கன்னு சொல்லி கிழவியாக்கறாரே.." சரளா குறும்பாக புகார் செய்வதைப் போல வினோத்திடம் பேச்சை வளர்த்தாள்..

"நான் சொல்லலை..? இவ சேட்டை செய்வான்னு நீயேண்டா இவளை வாங்க போங்கன்னு கிழவியாக்கறே.. 'வா, போ'ன்னு தான் சொல்லேன்.." என்றான் சங்கர்..

"அது மேனர்ஸில்ல சங்கர்.." வினேத் மறுத்தான்..

"அப்ப உங்க பேச்சு காய்.." சரளா வெகு நாள்கள் பழகியதைப் போல வினோத்திடம் காய் விட்டாள்..

அதை வேடிக்கை போல எடுத்துக் கொண்ட வினோத் சிரித்தான்.. மகள் இந்த அளவுக்கு இறங்கிப் பேச வேண்டுமா என்றிருந்தது கௌரிக்கு.. மனதுக்குள் வினோத்தின் மீது காதல் இருந்தால் சரணடையலாம்.. அவன் வெளிநாட்டில் வசிப்பவன்.. அவர்களை விட அதிகப் பணக்காரன் என்பதில் அல்லவா சரளாவுக்கு மயக்கம் இருக்கிறது..

9

கௌரிக்குத் தெரியும்.. வினோத் அழகானவன் தான்.. கம்பீரமானவன்தான்... படித்தவன்தான்... இவை அத்தனையும் இருந்து அவனிடம் அந்தஸ்தும் பணமும் கோடிஸ்வரப் பாரம்பர்யமும் இல்லாமலிருந்திருந்தால் சரளா வினோத்தைத் திரும்பிக்கூடப் பார்த்திருக்க மாட்டாள்..

சுற்று வட்டாரத்திலேயே அன்னவாசல் ஜமீன் பரம்பரைதான் கோடிஸ்வரப் பரம்பரை.. வினோத்தின்

கந்தகோட்டை ஜமீன் பெயரைச் சொல்ல கந்தகோட்டையில் ஆளில்லை.. நிலங்கள் குத்தகைக்கு விடப்பட்டிருந்தன.. அரண்மனை வேலையாள்களின் பராமரிப்பில் இருந்தது.. ஆனால் கந்தக்கோட்டை ஜமீன் பரம்பரை சென்னையில் பெயர் தெரியும் அளவிற்கு கோடிஸ்வரப் பரம்பரையாக கோலோச்சியது.. வினோத்தோ வெளிநாட்டில் பிறந்து வளர்ந்து அங்கேயே படிப்பையும் முடித்து தொழில் செய்பவன்..

பக்கத்து டவுன்.. அதை விட்டால் வருடாவருடம் சென்று வரும் சென்னை என்று குறுகிய வட்டத்துக்குள் வளர்ந்திருந்த சரளாவுக்கு வெளிநாட்டில் வசிக்கும் கோடிஸ்வர ஜமீன் பரம்பரை மாப்பிள்ளையின் மீது மோகம் வந்து விட்டதில் வியப்பில்லை.. வினோத்தை திருமணம் செய்து கொண்டால் வெளிநாட்டிற்கு பறந்து விடலாம்.. அன்னவாசல் ஜமீன் பரம்பரையில் பிறந்தவள் என்ற அலட்டலோடு அமெரிக்காவில் வசிப்பவள் என்ற அலட்டலையும் சேர்த்துக் கொண்டு சொந்த பந்தங்களின் மத்தியில் உலா வரலாம் என்ற கனவில் இருந்தாள் சரளா..

மகளின் கனவு நிறைவேற வேண்டும் என்று கௌரியும் ஆசைப்பட்டாள்தான்.. வினோத் நல்லவனாக இருந்தான்.. அவனுடைய அந்தஸ்த்தின் உயரத்தைப் பற்றிய கர்வமில்லாதவனாக இருந்தான்.. அவனுடைய அந்த குண இயல்பு கௌரியை வசீகரித்தது.. அவன் அவளுக்கு மருமகனாக வந்து விட்டால் கடவுளுக்கு நன்றி சொல்லி மகிழ்ந்து போவாள்.. ஆனால் அது தானாக கடவுளின் சித்தப்படியல்லவா நடக்க வேண்டும்..? சரளாவின் தத்துப்பித்தான நடவடிக்கைகளும் பேச்சுக்களும் வினோத்தின் மனதில் சரளாவைப் பற்றிய தவறான அபிப்ராயத்தை உருவாக்கி விட்டால் என்ன செய்வது..?

'இந்தப் பித்துக்குளிக்கு அது தெரியவில்லையே..'

கௌரிக்கு தலையில் அடித்துக் கொள்ள வேண்டும் போல இருந்தது.. மகளின் செயல்களுக்காக அவள் தலையில் அடித்துக் கொள்ள ஆரம்பித்தால், தலைதான் புண்ணாகும்.. மகள் ஓர்நாளும் திருந்த மாட்டாள் என்பதினால் அதை

விட்டு விட்டு பல்லை மட்டும் கடித்தபடி மகளை பார்வையால் அதட்டினாள்..

சரளா தாயைக் கவனித்தால்தானே.. அவள் தன் போக்கில் தத்துப் பித்தெனப் பேசினாள்.. அதை அவளே ரசித்து 'கெக்கே, பிக்கே..!' என்று சிரித்து மகிழ்ந்தாள்.. மரியாதைக்காக வினோத் உதடு பிரியாமல் சிரித்து வைக்க.. கௌரிக்கு அவமானம் பிடுங்கித் தின்றது.. அவள் வயிற்றில் பிறந்த மகளா இப்படிச் செய்வது..?

"சங்கர்.. நீயும் வினோத்தும் குளித்துட்டு சாப்பிட வாங்க.."

கௌரி சொன்னவுடன் வினோத் எழுந்து நின்று விட்டான்.. எப்போது கௌரி அந்த வார்த்தைகளைச் சொல்வாள் என்று அவன் காத்துக் கொண்டிருந்ததைப் போல அவனது முகத்தில் தெரிந்த விடுதலையுணர்வில் கௌிரிக்கு மகளை கன்னம் கன்னமாக அறையலாமா என்ற வெறி வந்தது..

"எங்க ரூம் ரெடியா இருக்காம்மா..?"

"இருக்குப்பா.. இப்பத்தான் சுமதி ரெடி பண்ணினா.."

"ஓகே.. கம் வினோத்.. என் ரூமுக்கு பக்கத்து ரூமை உனக்கு ரெடி பண்ணச் சொல்லியிருக்கிறேன்.."

சங்கர் வினோத்துடன் மாடியேற.. தமையனுடன் பேசியபடி சரளாவும் கூடப் போனாள்.. கௌரி தடுக்கவில்லை.. தடுத்தால் மட்டும் சரளா நின்று விடுவாளா என்ன..? தாய் அழைப்பது காதுகளில் விழுகாததைப் போல படியேறி விடுவாளே.. மகளைக் காவல் காக்க கூடப் போனாலும் பிரயோஜனமாக இருக்காது.. கௌரியின் ரகசிய சமிக்ஞைகளையும், முறைப்புக்களையும் சரளா கண்டு கொள்ளவே மாட்டாள்..

'ம்ஹீம்.. வாய்ச்ச புருசனும் சரியில்ல.. பெத்த பிள்ளைகளும் சரியில்ல..'

ஆற்றாமையில் இல்லத்தரசிகளின் மனது புலம்பும் புலம்பலை கௌரியும் மனதுக்குள் புலம்பியபடி

வேலையைப் பார்க்கப் போய் விட்டாள்.

வினோத் சரளாவிடமிருந்து எப்படியோ தப்பித்து, குளித்து உடைமாற்றி சங்கருடன் டைனிங் ஹாலுக்கு வந்து சேர்ந்தான்.. மறுநொடியில் அங்கு பிரசன்னமான சரளா..

"உங்களுக்கு ஏன் சிரமம் அம்மா..? நீங்கள் நகருங்கள்.. நான் பரிமாறுகிறேன்.." என்று தேனினும் இனிய குரலில் சொல்லி சமையலறையில் இருந்த சித்ராவிற்கு மயக்கத்தை வரவழைத்தாள்..

மயங்கி விழப் போனவளை தாங்கிப் பிடித்த சுமதி..

"ஏண்டி சித்ரா.. இதென்ன கோராமையா இருக்கு..? நம்ம சின்னம்மா இன்னைக்கு கருப்பு வெள்ளை சினிமா கதாநாயகி மாதிரி பினாத்தறாங்களே.." என்று முகவாயில் கையை வைத்தாள்..

"அதையேண்டி கேக்கற.. மக செய்யற கோமாளித்தனத்தக் காணச் சகிக்காம நம்ம பெரியம்மா தல, தலயா அடிச்சுக்கிறாங்க.. நான்தான் வெந்நி வைச்சு ஒத்தடம் கொடுத்தேன்.."

"இந்தம்மா பண்ற அழிச்சாட்டியத்துக்கு எத்தன தரம் ஒத்தடம் வைக்கிறது..?"

"அத நினச்சுத்தான் பெரியம்மா தலையில அடிச்சுக்கிறதை நிறுத்திட்டு முகத்த மட்டும் சுளிக்கிறாக.."

"அடக்கடவுளே..! அழிச்சாட்டியம் பண்ற மகளப் பெத்த கொடுமைக்கா அழகான நம்ம பெரியம்மா முகத்த கோணிக்கிறாக..?"

சுமதி ஆற்றாற்றுப் போனாள்.. சரளா தன் காரியத்தில் கண்ணாக வினோத்திற்கு மட்டும் பரிமாறினாள்.. அவன் லேசாகச் செருமினால் உடனே புரையேறுகிறது என்று தலையைத் தட்டினாள்.. தண்ணீர் கொடுக்கிறேன் என்ற பெயரில் வினோத்தின் மீது சரிந்தாள்..

'நல்ல வேளையா இந்தக் கூத்தையெல்லாம் இவங்கப்பா முன்னாலே செஞ்சு வைக்கலை..'

தோப்பில் வேலையிருக்கிறது என்று காலையில் சீக்கிரமாக உணவருந்தி விட்டு சிவனேசன் சென்று விட்டதை நினைத்துப் பார்த்து ஆசுவாசப் பெருமூச்சு விட்டாள் கௌரி..

"ஓகே.. ஓகே.. ஐ கேன் மேனேஜ்.."

நாசுக்காக சரளாவிடமிருந்து ஒதுங்கித் தப்பித்த வினோத்தைப் பார்க்க பாவமாகத்தான் இருந்தது.. கௌரியால் பரிதாபப் படத்தான் முடியும்.. வேறென்ன செய்ய முடியும்..?

'தன் கையே தனக்குதவின்னு நீயாத் தப்பித்துக்கப்பா..'

கௌரி மகள் நடத்தும் நாடகத்தைப் பார்க்க முடியாமல் சங்கருக்குப் பரிமாறுவதைப் போல முகத்தைத் திருப்பிக் கொண்டாள்.. சாப்பிட்டவுடன் சங்கரும் வினோத்தும் ஹாலுக்கு வந்தனர்.. கூடவே நிழல் போல சரளாவும் பின் தொடர்ந்தாள்..

"நீங்க பிரேக் பாஸ்ட் சாப்பிடலையா..?" வினோத் சரளாவைக் கத்தரித்து விட முயன்றான்..

"ஹௌ ஸ்வீட்..! நான் சாப்பிடலைன்னு நீங்க இந்த அளவுக்கு ஃபீல் பண்றீங்களே.." சரளா விழிகளை விரித்து குதூகலித்தாள்..

"ஏங்க..? சாப்பிடலையான்னுதானே கேட்டேன்..?" அழமாட்டாத குறையாக கேட்டான் வினோத்..

"மறுபடியும் 'ஏங்க' வா..? நீங்க சேன்ஜே ஆக மாட்டிங்களா..? 'வா, போ'ன்னு எப்போக் கூப்பிடுவீங்களோன்னு நான் ஏங்கிக்கிட்டே இருக்கனுமா..?"

பெரிய நகைச்சுவையைச் சொல்லி விட்டதைப் போல சரளா குலுங்கிச் சிரித்தாள்.. வினோத்தின் முகத்தில் அலுப்பு வெளிப்படையாகத் தெரிந்தது.. அவசரப்பட்டு சங்கரின் அழைப்பை ஏற்று அன்னவாசலுக்கு வந்து விட்டோமோ என்று யோசித்தான்..

'இப்ப யோசித்து என்ன பிரயோசனம்..?' கௌரி வினோத்தை இரக்கப் பார்வை பார்த்தாள்..

"சங்கர்.. ஐ'ம் ஸோ டயர்டு.. கொஞ்ச நேரம் ரெஸ்ட் எடுத்துக்கவா..?" சங்கரின் பதிலை எதிர்பார்க்காமல் மாடிப் படிகளில் தாவி ஓடி விட்டான்..

அவன் போனவுடன் மகளை ஒரு பிடி பிடிக்க கோபத்துடன் கௌரி திரும்புவதற்குள் சரளா அங்கிருந்து மாயமாகி விட்டாள்.. மதிய உணவு நேரத்திலும் இதே கதை தொடர்ந்தது.. மதியமும் தூக்கத்தைக் காரணம் சொல்லித் தப்பித்த வினோத்.. மாலையில் மொட்டைமாடி தோட்டத்தை சங்கருடன் ரசித்துக் கொண்டிருந்தபோது சரளாவிடம் மாட்டிக் கொண்டான்..

"நீங்களும் இங்கேதான் இருக்கறீங்களா..?"

சரளா தாயை விட்டுவிட்டு வினோத்திடம் கொஞ்சலாகக் கேட்டாள்.. அவன் சங்கடத்துடன் தலையை அசைத்தான்.

"கொடுங்கம்மா.. நான் சர்வ் பண்றேன்.."

கௌரியிடமிருந்து டிரேயை சரளா பறிக்க..

"நாங்க டிபன் காபியை முடிச்சாச்சே.." என்றபடி எழுந்த வினோத் சுவரோரமாக பொருத்தப் பட்டிருந்த வாஷ் பேசினில் கை கழுவினான்.. சரளாவின் முகம் சுருங்கியது..

10

சரளாவிடமிருந்து எப்படித் தப்பிப்பது என்ற யோசனையுடன் நிமிர்ந்த வினோத்தின் முகம் மலர்ந்தது.. அங்கிருந்து பார்த்தால் போர்டிகோவும் அதிலிருந்து நீண்டு செல்லும் பாதையும் வாசல் காம்பவுண்டு கேட்டும் தெரிந்தன.. கேட்டைத் திறந்து ஸ்கூட்டியைத் தள்ளியபடி உள்ளே வந்து கொண்டிருந்தாள் பவானி.. அப்போதுதான் மலர்ந்த பூவைப் போல இருந்த அவளது முகம்

காலையிலிருந்தே அவன் மனதில் நிழலாடிக் கொண்டிருந்தது.. இப்போதும் அந்தத் தோற்றம் மாறாத புத்துணர்வோடு வந்து கொண்டிருந்தவளைப் பார்த்தவனின் மனதில் தென்றலடித்தது..

மகளின் முகம் சுருங்கியதில் வருத்தம் கொண்டாள் கௌரி..

'நம்மிடம் என்ன இல்லை..? வினோத்தைப் போல வேறு ஒரு மாப்பிள்ளை கிடைக்க மாட்டானா..? அப்பாவுக்கும் மகளுக்கும் ஏன்தான் புத்தி இப்படி புல் மேயப் போகிறதோ.. வலியப் போனால் மதிப்புக் கிடைக்குமா..? தேடி வரும் மாப்பிள்ளைக்குப் பெண் கொடுத்தால்தான் மதிப்பு.. அது இவங்களுக்குப் புரியலையே..'

"சங்கர்.. ஷி இஸ் கமிங்.." வினோத் குரல் கொடுத்தான்..

"ஹூ இஸ் ஷி..?"

"அதுதாண்டா.. காலையில் நீ காரை விட்டு மோதப் பார்த்தியே.. அந்தப் பெண்.. உன் வீட்டுக்குத்தான் வருகிறா.."

"நான் காரை விட்டு மோதப் பார்த்தேனா..? அவதான் என் கார்மேல மோதப் பார்த்தா.."

கோபத்துடன் போனான் சங்கர்.. எட்டிப் பார்த்தான்.. அதே நொடியில் யதேச்சையாக அண்ணாந்து பார்த்த பவானி சங்கரைக் கண்டதும் பதட்டத்தில் ஸ்கூட்டியை விட்டு விட்டாள்.. அது புல்தரையில் சரிந்து ஹாயாக சயனித்தது..

"பார்.." வினோத்திடம் கை காட்டினான் சங்கர்..

"இப்பவும் நான்தான் இவ ஸ்கூட்டியைத் தள்ளி விட்டேன்னு சொல்லப் போறியா..? இவளுக்கு வண்டியோட்டத் தெரியலைடா.. ஓட்டத் தெரியாமல் ஸ்கூட்டியை வாங்கி உடைத்துக்கிட்டு இருக்கு. தத்தி.. தத்தி.."

நண்பர்கள் இருவரும் எந்தப் பெண்ணைப் பற்றிப் பேசிக் கொண்டிருக்கிறார்கள் என்று புருவங்களை சுருக்கிய

சரளா வேகமாக வந்து எட்டிப் பார்த்தாள். பவானியைக் கண்டதும் அவளது ரத்தம் கொதித்தது..

"இவளா..? ஓசியில ஸ்கூட்டி கிடைத்தா உடைக்காம என்ன செய்வா..?" இகழ்ச்சியுடன் பேசினாள்..

"ஓசியா..?" வினோத் முகம் சுளித்தான்.

சக மனுஷியை அவமானப்படுத்தும் தோரணையில் சரளா பேசிய விதம் அவனுக்குப் பிடிக்கவில்லை.. வெளிநாட்டில் பிறந்து வளர்ந்தவன்.. உயர்வு, தாழ்வு மனப்பான்மை இல்லாதவன்.. அன்னவாசல் ஜமின்தாரின் செல்ல மகள் என்ற ஆணவச்செருக்கோடு வளர்ந்து நிற்கும் சரளாவின் குணாதியம் அவளது அந்த ஒற்றைச் சொல்லில் வெளிப்பட்டு விட்டதில் அருவெறுத்தான்... அதை உணராத சரளா அதுவரை நடித்த நடிப்பைக் கைவிட்டு பவானியின் மீதிருந்த காழ்ப்புணர்ச்சியை அப்பட்டமாக வெளியே கொட்டினாள்..

"ஓசிதான்.. இவ யாருன்னு நினைத்தீங்க..? எங்க வீட்டு வேலைக்காரி.."

"வேலைக்காரி..? யு மீன் சர்வண்டு..?"

"சர்வண்டுதான்.. இவளும் இவளோட தாத்தாவும் எங்க கிட்டத்தான் வேலை செய்யுறாங்க.. போக்கிடம் இல்லைன்னு இவளுக்கு ஏழு வயதா இருக்கும்போது இவளோட தாத்தா இவளைக் கையில் பிடிச்சுக்கிட்டு எங்க வீட்டு வாசலிலே கையேந்தி நின்னாரு.. அப்பாதான் பாவம்ன்னு இரக்கப்பட்டு எங்க ஜமீன் கணக்கு வழக்குகளைப் பார்த்துக்கிற கணக்குப் பிள்ளையா வேலைக்கு வைத்துக்கிட்டாரு.. ஆனா, ஆவன்னா மட்டும் படிச்ச கிழவனுக்கு வேற யாரு வேலை கொடுப்பாங்க..? வேலை கொடுத்ததோடு வெளியே அனுப்பியிருக்கனும்.. எங்க அம்மா சொன்னாங்கன்னு தோட்ட வீட்டில குடியிருக்க அனுமதிச்சிருக்கோம்.. இவ எங்க வீட்டு வேலை செய்வா.. இவளோட தாத்தா கணக்குப் பிள்ளையா வேலை செய்யறாரு.."

குமரகுருவை 'அவர், இவர்' என்று சொல்ல வேண்டியிருக்கிறதே என்ற காட்டத்துடன் பேசினாள் சரளா.. அவள் அவரை 'அவன், இவன்' என்றுதான் பேசினாள்.. கௌரி பல்லைக் கழட்டி விடுவேன் என்று பலமாக எச்சரித்ததினால் வேறு வழியின்றி வயதில் பெரியவரை 'வாங்க போங்க' என்று அழைத்து வந்தாள்.. வயதைச் சொல்ல முடியாமல் பவானி சரளாவை விட இளையவளாக இருந்ததினால் வார்த்தைக்கு வார்த்தை 'அவள், இவள், வாடி, போடி' என்று தாளித்துக் கொட்டுவாள்..

"வீட்டு வேலை செய்கிறவங்களுக்கு ஸ்கூட்டி எதுக்கு..?"

"அதை எங்க அம்மாவிடம்தான் கேட்கனும்.."

"ஆண்ட்டியிடமா..?"

வினோத் கௌரியைப் பார்த்தான்.. அவள் எழுந்து வந்து எட்டிப் பார்த்து விட்டு லேசாகச் சிரித்தாள்..

"அம்மாவிடம்தான் கேட்கச் சொன்னேன்.. இவங்கதான் இவளுக்கு சொல்லச் சொல்லக் கேட்காம ஸ்கூட்டியை வாங்கிக் கொடுத்திருக்காங்க.. பாருங்கம்மா.. நீங்க வாங்கிக் கொடுத்த ஸ்கூட்டியை ஓட்டத் தெரியாம ஓட்டி அண்ணன் வந்த கார் மேல மோதியிருக்கா.. இப்ப என்னடான்னா ஸ்கூட்டியை கீழே போட்டுட்டு சொகுசா நிற்கிறா.."

வினோத் கீழே பார்த்தான்.. அவர்கள் அவளைத்தான் பார்க்கிறார்கள் என்பதில் பயந்து போனவளாக கைகளைப் பிசைந்து கொண்டு நின்றிருந்தாள் பவானி.. வினோத் பரிதாபம் கொண்டான்..

"அவங்களைப் பார்த்தா சொகுசா நிற்கிறதைப் போல இல்லையே.. பயந்து போய் நிற்கிறதைப் போல இருக்கே.."

சரளா வெகுண்டாள்.. வினோத் பவானிக்காக பரிந்து பேசியதை அவள் விரும்பவில்லை.. அவள் அன்னவாசல் ஜமின்தாரின் மகள்.. சென்னையில் பெரிய தொழிலதிபனாக காலுன்றியிருக்கும் சங்கரின் தங்கை.. பக்கத்தில் அவள் நிற்கும் போது அவளுக்காக

பார்க்கப்பட்டிருக்கும் மாப்பிள்ளை அவளை விட்டுவிட்டு அந்த பவானிக்கழுதையைப் பார்க்கிறான் அவளுக்காக பரிதாபப்படுகிறான்.. இதை எங்கே போய் சொல்வது..?

"அவளுக்கு பயமெல்லாம் கிடையாவதுங்க.. எல்லாம் பாசாங்கு.."

தங்கை படபடத்ததில் சங்கர் புருவங்கள் முடிச்சிட.. கோபத்துடன் அதட்டினான்..

"நீங்க எதுக்காக வழக்கடிச்சுக்கிட்டு இருக்கீங்க..?"

"வழக்கா..? யு மீன் ஆர்கியுமெண்ட்..?"

"யெஸ் வினோத்.. தட் இஸிட்.."

"ஆர்கியூ நான் பண்ணலை சங்கர்.. உன் தங்கைதான் அன்னெஸஸரியா ஆர்கியு பண்ணிக்கிட்டு இருக்காங்க.. "

"அன்னெஸஸரியா..? யார்..? நானா..?"

சரளாவின் விழிகளில் கண்ணீர் கோர்த்து விட்டது.. வினோத்தை அன்று காலையில்தான் பார்த்திருக்கிறாள்.. மாலைக்குள் அவள் அவனுக்குத் தேவையில்லாதவளாக ஆகி விட்டாளா..?

சங்கருக்கு மனம் பொறுக்கவில்லை.. பல்லைக் கடித்தான்.

"யாரும்மா இவ..? வேலைக்காரிக்கெல்லாம் இவ்வளவு திமிர் ஆகாதும்மா.."

"சங்கர் இவ பவானி.. உனக்குத் தெரியலையா..?"

"பவானியா..? யார் அது..?"

கௌரி வெறுமையாக மகனைப் பார்த்தாள்.. சங்கர் என்றால் பவானிக்கு எவ்வளவு பிடிக்கும் என்று அவளுக்குத் தெரியும்.. சங்கர் நடக்கும் பாதையைத் தொட்டு வணங்கி அவனது காலடி மண்ணை நெற்றியில் பூசிக் கொள்ளும் அளவுக்கு அவன்மீது பிரேமை கலந்த பத்தி கொண்டவள் அவள்.. அவனை மனதுக்குள் ஆராதிப்பவள்.. சங்கரைப் பற்றிய பேச்சைக்

கேட்பதென்றால் அவளுக்கு அவ்வளவு பிடிக்கும்.. கண்கள் பிரகாசிக்க முகம் விகசிக்க அவனைப் பற்றிய விவரங்களைக் கேட்டுக் கொள்பவள்..

அந்த பவானியைத்தான் யார் அது என்று சங்கர் கேட்கிறான்.. அவள் அன்னவாசல் ஜமின் அரண்மனையின் தோட்டத்தில்தான் வசிக்கிறாள்.. ஆனால் அவள் யாரென்று சங்கருக்குத் தெரியாது..

'இவன் அவளுக்குக் கொடுக்கும் முக்கியத்துவம் இவ்வளவுதான்..'

கௌரி பெருமூச்சு விட்டாள்.. உயர உயரப் பறந்தாலும் ஊர்க்குருவி பருந்தாக முடியாது.. இதை பவானி புரிந்து கொள்ள வேண்டும்.. பவானி அழகில் தேவதைதான்.. படிப்பில் கெட்டிக்காரிதான்.. அறிவானவள்.. டாக்டருக்குப் படிக்கிறாள்.. அவளும் ஜமின் வம்சத்தைச் சேர்ந்தவள்தான்.. ஆனால் அன்னவாசல் ஜமினைப் போலவோ, கந்தகோட்டை ஜமின் போலவோ கோடிஸ்வரப் பரம்பரையில்லை.. வாழ்ந்து கெட்ட பரம்பரை.. இருக்க இடமில்லாமல் அன்னவாசல் அரண்மனையில் அடைக்கலம் புகுந்த பரம்பரை.. அவளை சிவனேசனின் மகன் திரும்பிக் கூடப் பார்க்க மாட்டானே..

"பவானி யாருமில்லை சங்கர்.. எனக்குத் தூரத்துச் சொந்தம்.. உங்க அப்பாகிட்ட கணக்குப்பிள்ளை வேலைபார்க்கும் குமரகுரு பெரியப்பாவோட பேத்தி.. ஏழை.. அதனால உன் வீட்டில அவளுக்கு வேலைக்காரின்னு பட்டம் கொடுத்திருக்கீங்க.. ஆனா பாரு சங்கர்.. பணமில்லாத அவகிட்ட படிப்பு இருக்கு.. டாக்டர் படிப்புக்கு சீட் கிடைச்சு ஒரு வருசப் படிப்பை முடிச்சுட்டா.. எண்ணி நாலே வருசம்தான்.. அதுக்கப்புறம் அவளுக்குப் பெயர் வேலைக்காரியில்லை.. டாக்டர் பவானி.."

"நீ சரளாவைப் பெற்ற தாயா..?"

ஒரு கேள்வியில் கௌரியின் மனதில் முள் சாட்டையால் ரணம் உண்டாக்கினார் சிவனேசன்.. தந்தையிடம் சரளா அழுது முறையிட்டதில் அவருக்கு கோபம் கௌந்தளித்தது.

"உன் மகளைப் பெண் பார்க்க வந்தவன் முன்னாலே உன் மகளின் பெருமையைப் பேசாமல் வேலைக்காரியின் பெருமையைப் பேசியிருக்கிற.. அவ படிப்பில கெட்டிக்காரின்னா.. உன் மக யாரு..? மக்கா..? நாலு வருசம் கழிச்சு அவ டாக்டர் பவானி.. என் மக வெறும் சரளாவா..?"

சிவனேசன் மனைவியைக் காதலிப்பவர்.. தீராக்காதல் அவருடையது.. மனைவி சொன்ன ஓர் வார்த்தைக்காக தோட்டத்து வீட்டில் குமரகுரு வசிக்க சம்மதம் கொடுத்தவர்.. அவருக்கு வேலை கொடுத்து கௌரி பவானியை டாக்டருக்குப் படிக்க வைக்க நினைத்தற்கு தடை சொல்லாதவர்.. பவானிக்கு கௌரி ஸ்கூட்டி வாங்கிக் கொடுத்ததை தடுக்காதவர்.. அதே சமயம் தன் பிள்ளைகள் வேறு, பவானி வேறு என்பதில் உறுதியாக நிற்பவர்.. அந்தஸ்து பேதம் பார்ப்பவர்.. மறந்தும் குமரகுருவும் பவானியும் தாங்கள் அன்னவாசல் ஜமின் குடும்பத்துக்குச் சொந்க்காரர்கள் என்று சொல்வதை அனுமதிக்காதவர்.. சொந்தம் என்று சொல்லிக் கொள்வதையே விரும்பாதவர் அவர்களும் ஜமின் வம்சத்தைச் சேர்ந்தவர்கள்தான் என்று சொல்லிக் கொள்வதை அனுமதிப்பாரா..?

கௌரி குற்றவாளியாக குடும்ப சபையின் முன் நின்றாள்.. சங்கரின் பார்வை அவளைத் துளைத்தது.. சரளாவின் பார்வை அவளை வெறுத்தது.. சிவனேசனின் பார்வையோ எரித்தது..

"அவளை உனக்குத் தூரத்துச் சொந்தம்ன்னு சொல்லியிருக்கியே.. வினோத் அந்த விவரத்தைக் கேட்டானா..? பவானியைப் பற்றி வினோத்திடம் ஏன் ஒப்பிக்கிற..?"

"நான் வினோத்திடம் சொல்லலைங்க.. சங்கரிடம்தான்.."

"சங்கரிடம்தான் சொன்ன.. அதை வினோத்துக்கு முன்னாடி சொன்ன..? ஏன் கௌரி..? பவானியை சங்கருக்குத் தெரியலைன்னா விட்டுவிட வேண்டியதுதானே.. அவள் யாருன்னு சங்கருக்கு அவசியம் தெரியனுமா..?"

சிவனேசன் ருத்ர அவதாரம் எடுத்திருந்தார்.. மகளின் கண்ணீர் அவரை பாதித்தது.. பவானியை யாரென்று தெரியாமல் சங்கர் வளர்ந்திருப்பதில் பெருமை கொள்ளாமல் அவளைப் பற்றிய விவரங்களை வினோத் அங்கிருக்கிறான் என்ற அறிவில்லாமல் எடுத்துச் சொன்ன கௌளரியை என்ன செய்தால் தேவலாம் என்ற ஆங்காரம் அவர் கண்களில் தெரிந்தது.. கௌரி பவானியை உயர்வாக நினைக்கிறாள்.. அவளைப் பற்றி சங்கரிடம் எடுத்துச் சொல்லி பவானியைக் கவனிக்க வைக்க முனைகிறாள் என்பதை அவர் மனம் கண்டு கொண்டது..

'அப்படின்னா, இவ மனசில என்ன நினைப்பிருக்கு..? பெரியப்பா பேத்திங்கிற சொந்தத்தை மனசில வைச்சுக்கிட்டு பாவனி டாக்டருக்குப் படிக்கிறாங்கிறதை மகன் மனசில பதிய வைச்சு அவளை என் மகனுக்கு கட்டி வைச்சிரலாம்ன்னு கணக்குப் போடறாளா..? அன்னவாசல் ஜமின் அரண்மனையிலே அந்த பவானி மருமகளா கால் வைக்கிறதா..?' இந்த எண்ணமே அவரை ஆட்டிப் படைத்தது..

"உன் மேல பிரியமிருக்குங்கிறதினால நீ என்ன சொன்னாலும் நான் தலையாட்டிக்கிட்டு நிப்பேன்னு கனவு காணாதே.. குமருகுர என்கிட்ட வேல பார்க்கும் கணக்குப்பிள்ளை.. அவரோட பேத்தி இந்த வீட்டில வேல பாக்கற வேலைக்காரி.. இதுக்கு மேல அவங்களை உசத்திப் பார்க்கனும்ன்னு ஆசைப்படாதே.. அது அவங்களுக்கு நல்லதில்ல.. அஞ்சே நிமிசத்தில அவங்களைக் காணாமப் பண்ணிருவேன்.."

"அப்பா.." சங்கர் அதட்டினான்..

"அம்மா பேசியது தப்புத்தான்.. எனக்கும் அதில கோபமிருக்கு.. என்னதான் தூரத்து சொந்தமா இருந்தாலும்

வேலை செய்கிறவங்களை வைக்கிற இடத்திலதான் வைக்கனும்.. அது அம்மாவுக்குத் தெரியலை.. அதை மட்டும் கண்டிச்சுச் சொல்லுங்க.. அதை விட்டு விட்டு அவங்களைக் காணாம போக வைச்சிருவேன்னு பேசறது நல்லதில்லை.. என்ன பேசறிங்க நீங்க..?"

"எனக்கு ஆத்திரமா வருதுடா.."

"அதை அம்மாவிடம் காட்டுங்க.. என்னிடம் காட்டுங்க.. எளியவங்களிடம் காட்டாதீங்க.. நீங்க வீரமானவர் அப்பா.. நம்மளை விட உயர்ந்தவங்களிடம் கோபப் படுவதுதான் வீரம்.. நம்ம கோபம் செல்லுபடியாகிற இடத்தில கோபத்தைக் காட்ட நினைப்பது வீரமா அப்பா..?"

சங்கரை நன்றியுடன் பார்த்தாள் கௌரி.. சங்கர் வேதனைப் பட்டான்.. அவனைப் பெற்ற தாய் அவனுக்கு நன்றி சொல்வதா..? தனிமையில் தாயை கடிந்து கொண்டான்.

"எதுக்காகம்மா அந்தப் பெண்ணுக்காக நீங்க பேச்சு வாங்கறிங்க..? சரளாவின் கோபமும் அப்பாவின் கோபமும் நியாயமானதுதானேம்மா.. நம்ம வீட்டுப் பெண்ணைப் பார்க்க வந்திருக்கிறவன் முன்னாடி வேலைக்காரப் பெண்ணை உயர்த்திப் பேசறது தப்பில்லையாம்மா..?"

"எனக்கு அது தப்பாத் தோணலை சங்கர்.. பவானி நம்ம வீட்டு வேலைக்காரியில்லை.. அவளுடைய தாத்தா உங்க அப்பாவிடம் வேலை பார்க்கிறார்.. பேத்தியை நம் வீட்டு வேலை செய்ய அனுப்பலை.. அவளாகத்தான் நம்ம வீட்டு வேலையை இழுத்துப் போட்டுக்கிட்டு செய்வா.. அதுக்காக டாக்டருக்குப் படிக்கிற பெண்ணை வார்த்தைக்கு வார்த்தை வேலைக்காரின்னு உன் தங்கையும் உன் அப்பாவும் சொல்லிக் காட்டலாமா..?"

கௌரி பொங்கி வந்த கண்ணீரை புடவை முந்தானையில் துடைத்துக் கொண்டாள்.. விசனத்துடன் பேசிய தாயை இமைக்காமல் பார்த்து வைத்தான் மகன்.. புரியாமல்..

"என்னடா..?" என்றாள் கௌரி..

"என் தங்கை.. என் அப்பா..! வெரிகுட்.. சரளாவும் அப்பாவும் எனக்குத்தான் சொந்தமா..? உங்களுக்கு யாருமேயில்லையா..? ஏன்ம்மா..? சரளா உங்க வயிற்றில் சுமந்து பெற்ற மகள்.. அப்பா உங்க மேல உயிராய் இருக்கும் ஹஸ்பெண்ட்.. இவங்களைவிட அந்தப் பெண் உங்களுக்கு உயர்வாப் போயிட்டாளா..?"

"அந்தப் பொண்ணு.. அந்தப் பொண்ணுன்னு சொல்றியே.. அவளுக்குன்னு ஒரு பெயரில்லையா..?"

"இப்பவும் நீங்க அந்தப் பெண்ணுக்காகத்தான் வாதாடறீங்க.."

"ஏன்னா.. அவளுக்காக வாதாட யாருமேயில்லை சங்கர்.."

"அவளோட தாத்தா இருக்காரே.."

"அவர் வயதானவர் சங்கர்.. இயலாதவர்.."

"அது அவ பிரச்னை.. அதுக்காக காலமெல்லாம் அவளை

நீங்கத் தூக்கிச் சுமந்துக்கிட்டு இருக்கப் போகிறீங்களா..? இரக்கப்படுங்கம்மா.. தப்பில்லை.. ஆனா அளவோடு இரக்கப்படுங்க.. உங்க குடும்பத்தையும் கொஞ்சம் பாருங்க.."

கௌரியின் மனம் ரணமானது.. இத்தனை நாளாக கட்டிய கணவர்தான் இந்த வார்த்தைகளைச் சொன்னார்.. இப்போது பெற்ற மகனே சொல்லி விட்டான்.. இதற்கு மேல் கௌரி குடும்பத்துக்காக என்ன செய்ய வேண்டும் என்று அவர்கள் நினைக்கிறார்கள்..?

அன்னவாசல் ஜமின் அரண்மனையில் வேலை செய்ய ஆள்கள் உண்டு.. அவர்களை வேலை செய்ய வைக்க கௌரியின் கண்காணிப்பும் வழிகாட்டுதலும் வேண்டும்.. அது இல்லையென்றால் அரண்மனை அரண்மனையாக இருக்காது.. குடும்பக் கவலையின்றி சிவனேசன் நிம்மதியாக வெளியே போய்வர முடியாது..

"சித்ரா காபி கலந்தாச்சா..? பிள்ளைகளுக்கு பால் பதமான சூட்டில் இருக்கனும்.. காலைப் பலகாரத்துக்கு இடியாப்பம்

தேங்காய் பால், குருமா செஞ்சுரு.. கூடவே பூரி போட்டிரு.. ஐயாவும் பிள்ளைகளும் ரெண்டையும் விரும்பிச் சாப்பிடுவாங்க.. மதியத்துக்கு மீனை பொரிச்சு குழம்பு வைச்சுரு.. சங்கருக்கு வேக வைத்த முட்டை பிடிக்கும்.. நைட்டுக்கு இட்லி ஊத்திரு.. மீன் குழம்புக்கு தோதா இருக்கும்.. ஐயாவுக்கு சட்னி வேணும்.."

"சுமதி.. மொட்டை மாடித் தோட்டத்தைப் பார்த்துப் பெருக்க மாட்டியா..? மாடிப்படிகளில தினமும் துடைக்கனும்.. அலமாரி சோபாக்களை கண்ணாடி போல பளபளன்னு துடைச்சு வைக்க வேணாமா..? பாரு.. இங்கே தூசி தெரியுது.. துணிகளைத் துவைச்சுக் காயப் போடறப்ப வெயில் படாத இடத்தில காயப் போடு.. சாயங்காலமா இஸ்திரி போட வேண்டிய துணிகளை இஸ்திரி போட்டு வாங்கிட்டு வந்திரு.. மத்த துணிகளை மடிச்சு மாடி ஹாலில ஊஞ்சல் மேல வைச்சிரு.. அவரவர் ரூமில நான் அடுக்கி வைச்சிருவேன்.."

"மாசி.. பெட்ரோல் போட்டா பில்லை பெரியப்பாகிட்ட கொடுத்திரு.. போனதடவை போட்டத விட இந்தத்தடவை அதிகமாப் போட்டிருக்கியே.. ஏன்ப்பா.. புதுக்கார்.. பெட்ரோலைக் குடிக்காதேப்பா.. என்ன விசயம்..?"

கௌரி கவனிக்க ஆயிரம் வேலைகள்.. இதற்கு இடையே பிள்ளைகளைப் பெற்று, வளர்த்து, அவர்களுக்கும், கணவருக்கும் பணிவிடைகள் செய்து இருபத்தி நான்கு மணி நேரத்தையும் குடும்பத்துக்கே அர்ப்பணித்தவள்.. இல்லத்தரசி என்ற பெயரில் அடிமையாய் ஆனவள்..

## 12

தன்னைப் போல பிறரையும் நினை என்றார் யேசு.. கௌரி தன் மகளைப் போல பவானியை நேசிக்கவில்லை.. மகளுக்கான இடத்தை வேறொரு பெண்ணுக்கு கொடுக்கவில்லை.. சரளாவைத் தன் உயிராக நேசித்தாள்..

பவானிக்கு தன் மனதில் ஓரத்தில் சிறு துளியளவு இடத்தைக் கொடுத்து விட்டாள்.. அது அவளுடைய குடும்பத்தார்க்கு பொறுக்கவில்லை..

கௌரி செய்த தவறுதான் என்ன..? பணமிருந்தாலும் இல்லாவிட்டாலும் சொந்தம் சொந்தம்தானே என்று நினைத்தாள்.. வாழ்ந்து கெட்ட பரம்பரையில் பிறந்துவிட்டார் என்பதற்காக குமரகுருவை மதிப்பில்லாமல் நடத்தலாமா என்று கேட்டாள்.. தாய், தகப்பனில்லாத பெண் என்பதற்காக பவானியிடம் கருணை காட்டினாள்.. பொறுமையானவளாக, சகிப்புத்தன்மை கொண்டவளாக, மற்றவர்களைக் குறை சொல்லாத பவானியின் குணம் அவளை வசீகரித்தது.. குடும்பத்தின் நிலை உணர்ந்து தான் படும் கஷ்டங்களைத் தன் தாத்தாவிடம் கொண்டு போகாத பவானியின் நற்பண்பு அவளைக் கவர்ந்தது.. படிப்பில் கெட்டிக்காரியாக, மாவட்டத்திலேயே முதல் மாணவியாக தேர்ச்சி பெற்று, மருத்துவப்பட்டப்படிப்புக்கு தேர்வெழுதி வெற்றி பெற்று விட்ட ஏழைப் பெண்ணை படிக்க வைப்பது புண்ணியம் என்று

கௌரி நினைத்தாள்.. அது சொந்தமாக இல்லாமல் வேறு ஒரு ஏழைப் பெண்ணாக இருந்திருந்தாலும் கௌரி உதவிக்கரம் நீட்டியிருப்பாள்.. கௌரியின் மனம் அத்தகையது.. சித்ரா, சுமதி, பவானி என்ற பேதம் பார்க்காதது..

அவள் குடும்பத்தில் அவள் மனதை உணர்ந்தவர் யார்..? ஒருவருமே இல்லை.. சரளாவுக்காக கௌரி எதையும் செய்வாள்.. அது எவருக்கும் புரியவில்லை..

"என் குடும்பத்தை நான் பார்க்காம வேறு யார் பார்த்தது சங்கர்..? உன் அப்பாவா..?"

"அம்மா.."

"உன்னையும் சரளாவையும் வளர்த்தது யார்..? உன் அப்பாவா..? அவருக்கு ஊர் பஞ்சாயத்து தெரியும்.. தொழில்களை தெரியும்.. தோட்டம் துரவைத் தெரியும்..

நீயும் உன் தங்கையும் எப்போ அழுவீங்க.. எப்போ சிரிப்பீங்க.. எப்போ பசிக்கும்.. என்ன படிக்கறீங்க.. நல்லாப் படிக்கறிங்களா இப்படி ஏதாவது ஒன்னு தெரியுமா சங்கர்..?"

"அம்மா..."

"அது எனக்கு மட்டும்தான் தெரியும்.. உங்க அப்பா காலையில் வீட்டை விட்டுப் போனாருன்னா நடுராத்திரிக்குத்தான் வீடு வந்து சேருவார்.. அவரோட வேலை அப்படி.. குடும்பத்தைப் பார்க்க முடியாது.. இந்த வீடு காலையில கோழி கூவறப்ப விழித்து அர்த்த ஜாமத்தில தூங்கும்.. அது வரைக்கும் இந்த அரண்மனை வீட்டை உயிர்ப்பா வைச்சுக்கிட்டது யார் சங்கர்..? உன் அப்பாவா..?"

கௌரி வேதனையுடன் கேட்டு விட்டுப் போய் விட்டாள்.. சங்கர் வருத்தமடைந்தான்.. மூன்று வருடங்கள் கழித்துத் தாயின் முகம் பார்க்க ஓடி வந்தது இதற்காகத்தானா..? தாயின் மனதை வேதனைப் படுத்த வேண்டுமென்று அவன் நினைக்கவில்லையே..

'எல்லாம் அவளால்தான்..'

அவனது கோபம் பவானியின் மீது திரும்பியது.. அவன் சுட்டு விரலை நீட்டி அவளைக் குற்றம் சாட்டினான்..

"யார்.. நீ..?"

அந்தி மாலையில் தோட்டத்து மர நிழலின் மறைவில் நின்று அவளை எதிர்கொண்டவன் கேட்ட கேள்வியில் அவள் விதிர்த்துத் தடுமாறினாள்.. மனதில் மயக்கம் ஒருபுறம்.. பயம் மறுபுறம்..

"நான்.. நான்.. பவானி.. குமரகுரு இருக்காரில்ல.."

"அந்தக் கதையெல்லாம் அம்மா சொன்னாங்க.. உன் ஹிஸ்டரியைக் கேட்க நான் வரலை.. அதைக் கேட்டு எனக்கென்ன ஆகப்போகுது..?"

உறுத்துப் பார்த்த அவனது கோபப்பார்வை அவளைச் சுட்டது.. தணலாக தகித்தவனின் பார்வையை எதிர்கொள்ள முடியாமல் அவள் தவித்தாள்.. அவனது

அலட்சியத்தில் அவளது மனம் புண்ணானது.. ஓர் அன்புப்பார்வைக்காக ஏங்கித் தவித்தது..

'அம்மா சொன்னாங்களா..? அவங்க சொல்லித்தான் நான் யாருன்னு உனக்குத் தெரியுமா..? ஆனா எனக்கு உன்னை விட உசத்தின்னு யாருமே இல்லையே.. ராப்பகலா உன்னைப்பத்தி மட்டும்தானே நான் நினைச்சுக்கிட்டு இருக்கேன்.. உன் உபாசகி நான்.. உன்னை என் மனதில் வைத்து ஆராதிப்பவள்.. என் கண்ணனே..! நான் உன்னைக் காதலிப்பவள்..'

கன்னி மனம் சொல்லத் துடித்தது.. உயரத்தில் இருப்பவனின் உதாசீனத்தில் உடைந்தது.. நீயின்றி நானில்லை என்று மனதுக்குள் கதறியது.. ஓர் வார்த்தைசொல்லி விடு.. நான் உயிர் வாழ அது போதும் என்று தேம்பியது..

"உன்னால்தான்.."

சங்கரின் சுட்டு விரல் பவானியை நோக்கி நீண்டது..

"உன்னால்தான் என் அம்மா வேதனைப்படுகிறாங்க.."

"என்னாலா..? அத்தை வேதனைப் படுகிறாங்களா..? நான் என்ன செய்தேன்..?" இதயத்தில் ஈட்டி பாய்ந்த வேதனை போல் அவள் துடித்துப் போனாள்..

பவானி வணங்கும் தெய்வம் கௌரி.. அவள் இல்லாவிட்டால் பவானி வாழும் இந்த வாழ்க்கையில்லை என்பதை புரிந்து வைத்திருப்பவள்.. ஆதரிக்கும் அந்த அன்பு தெய்வத்தை அன்னையைப் போல நேசிப்பவள்.. அவளால் அவள் வணங்கும் அன்பு தெய்வத்திற்கு வேதனை ஏற்பட்டிருக்கிறதா..? எப்படி..? ஏன்..?

"அத்தையா..? யார் உனக்கு அத்தை..?"

மறுபடியும் சங்கர் நாவால் சுட்டான்.. இமைமூடி தன் மன வலியை ஜீரணித்துக் கொண்டாள் பவானி.. சரளாவும் இந்தக் கேள்வியைத்தான் கேட்பாள்.. அவள் கேட்கும் போது ஒன்றும் தோன்றவில்லை.. அதைக் கேட்டுக் கொள்ள

முடிந்தது.. அதே கேள்வியை சங்கர் கேட்கும்போது தாங்கிக் கொள்ள முடியவில்லையே.. பாழும் இந்த மனது இற்றுப் போகிறதே..

"மன்னிச்சிருங்க சின்னய்யா.."

"சின்னய்யா..? குட்.. நீ இப்படிக் கூப்பிட்டதாகத்தான் நினைவு.. இப்படிக் கூப்பிடுவதுதான் பெட்டர்.. நீ யாரென்பது உனக்கு மறக்காமல் இருக்கும்.. அதே போல என் அம்மாவையும் அம்மான்னு கூப்பிட்டுப் பழகு.."

'அம்மாவா...?'

துடிக்கும் இதழ்களைப் பற்களால் கடித்துத் தன்னை அடக்கிக் கொண்டாள் பவானி.. சிவனேசனை 'ஜமின்தாரய்யா..' என்று கூப்பிட வரும் வாய், கௌரியை 'ஜமின்தாரம்மா' என்று கூப்பிட வரவில்லை.. அதற்குக் காரணம் கௌரிதான்.. 'அத்தை' என்று தான் கூப்பிட வேண்டும் என்று அவள் கட்டளையிட்டிருந்தாள் என்பதெல்லாம் சப்பைக் கட்டு.. பவானியால் கௌரியை அம்மா என்று கூப்பிட முடியவில்லை.. 'அத்தை' என்றுதான் கூப்பிடப் பிடித்திருந்தது.. அவளால் கௌரியை 'அத்தை' என்றுதான் கூப்பிட முடியும்.. அதை சங்கரிடம் எப்படிச் சொல்வாள்..?

பவானி சங்கரை ஏக்கத்துடன் பார்த்தாள்.. எவனை சுவாசமாக நினைத்துக் கொண்டிருக்கிறாளோ, அவனுக்கு அவளை அடையாளம் கூடத் தெரியவில்லை.. ஜமின் வீட்டுத் தோட்டத்தில்தான் அவள் குடியிருக்கிறாள்.. சங்கர் வீட்டிலிருந்தால் அவன் முகம் பார்ப்பதற்காக ஜமின் வீட்டின் அத்தனை வேலைகளையும் செய்து கொண்டு அவனது அறைக்கதவு திறப்பதற்காக தவம் செய்வாள்.. அவனும் வருவான்.. தாய், தந்தையோடு பேசுவான்.. தங்கையுடன் விளையாடுவான்.. வேலையாள்களிடம் வேலை வாங்குவான்.. பவானியின் பக்கம் கூடத் திரும்ப மாட்டான்.. முகத்தைத் திருப்பிக் கொண்டு போய் விடுவான்..

பவானி அந்த வீட்டுக்கு வந்து பனிரெண்டு ஆண்டுகள் ஆகப் போகின்றன.. ஏழு வயதுச் சிறுமி பத்தொன்பதாவது

வயதில் அடியெடுத்து வைத்திருக்கிறாள்.. யௌவனப் பருவம்.. இப்போதும் அவன் அவளை ஏறெடுத்தும் பார்க்கவில்லை..

அடர்ந்த வனத்தின் காற்றுப்போல அவனது அருகாமை அவளை உயிர்த்தெழ வைத்தது.. ஏகாந்தமாய் விரியும் இந்த பிரபஞ்சத்தின் பெருவெளியினைப் போல அவனுக்காக அவளது காத்திருத்தல் அவனது கவனத்தைத் கவர முடியாமல் பெருமூச்சு விட்டது.. மலையடிவாரத்தின் தனிமை அவள் மனதைச் சூழ்ந்தது.. கானகத்தின் ஊடே செல்லும் நீரோடைகளின் சலசலப்பை போல அவளது நெஞ்சம் சலனமுற்றது.. அவளது காதலின் குரல் ஏன் அவனது செவிகளுக்கு எட்டவில்லை.. எவருமற்ற காதல் கானகத்தில் அவள் தனித்து நிற்கிறாளே.. அதை அவன் உணரவில்லையா..?

நள்ளிரவில் மணம் பரப்பும் மல்லிகையின் மொட்டு போன்றது காதல்.. மணம் பரப்பி வசியம் செய்யும்.. அதை உணர்பவர்களுக்கு வாழ்க்கை பேரின்பம்.. நதியின் நடுவே பொழியும் கார்மேகம் போல அவன் மீதான காதலைப் பொழிந்தபடி நின்றிருந்தாள் பவானி.. அவளைத்தான் அவன் "யார்.. நீ..?" என்று கேட்கிறான்..

காதலிப்பதை விடக் காதலிக்கப்படுவது வரம்.. அந்த வரம் கிடைத்திருந்தும் அதன் மதிப்பை உணராமல் துச்சமாக அவளைப் பார்த்துத் தான் சரளாவின் அண்ணன், சிவனேசனின் மகன் என்பதை தெளிவு படுத்திக் கொண்டிருந்தான் சங்கர்..

அந்த சின்னஞ்சிறு வயதில் எத்தனையோ இடர்களைப் புன்னகையுடன் எதிர்கொண்டு கடந்து வந்திருந்தாள் பவானி.. இந்த இடரை எதிர் கொள்ளத்தான் அவளால் முடியவில்லை..

பவானி மனதைத் திடப்படுத்திக் கொண்டாள்.. சங்கரின் முகம் பார்த்தாள்.. அவனது விழிகளில் தெரிந்த வெறுப்பு அவளைச் சுட்டுப் பொசுக்கியதைத் தாங்கிக் கொண்டாள்.. அமைதியாகக் கேட்டாள்..

"என் மனதறிந்து நான் எந்தத் தவறையும் செய்யலை சின்னய்யா.. என்னையறியாம ஏதாச்சும் தப்புச் செய்திருந்தா மன்னிச்சிருங்க.."

"மன்னிப்புக் கேட்டுட்டா எல்லாம் சரியாகிருமா..?"

"நான் என்ன செய்யனும் சின்னய்யா..? அதையாவது சொல்லுங்க.. தப்பைச் சரி பண்ண முடியும்ன்னா அதை நான் செய்கிறேன்.."

அவளது அந்தத் தன்மையும் அமைதியும் சங்கரை அசைத்தன.. முதல் முறையாக அவளை பாதாதி கேசம்வரை பார்த்து வைத்தான்.. ஒரு சிறு பார்வைக்காக ஏங்கிய அந்தப் பூங்கொடி பாதாதிகேசம் முதல் துளைத்த அவனது லேசர் பார்வையில் தடுமாறிப் போனாள்.. முகத்தில் ரத்தம் பாய்ந்தது.. உடலில் நடுக்கம் பரவியது.. சலனமற்ற கன்னி மனம் சலனம் கொண்டது..

இந்தத் தடுமாற்றமும், நடுக்கமும், முகச்சிவப்பும் சங்கருக்குப் புதிது.. அவளது வெட்கம் அழகான ஒன்றாக அவனைக் கவர்ந்தது.. விளக்கின் சுடர் போல ஒளிர்ந்தவளைப் பார்த்தவனின் மனதில்..

'யட்ச கன்னிகையைப் போல இருக்காளே..' என்ற பிரமிப்பு வந்தது..

"செய்த தப்பை சரிபண்ண முடியாது.. இனி அந்தத் தப்பைச் செய்யாமல் தவிர்க்கப் பார்க்கலாம்.."

"சரிங்க சின்னய்யா.."

துளைக்கும் அவனது பார்வையை எதிர்கொள்ள முடியாமல் தரையைப் பார்த்தபடி முணுமுணுத்தாள் பவானி.. சங்கரின் விழிகள் மின்னின.. அவனிடம் அவள் தடுமாறுவதை தன்னையுமறியாமல் அவன் ரசித்தான்..

"என் பிரண்ட் வினோத்தின் பார்வையில் நீ படவே கூடாது.."

அவனது கட்டளையில் அவள் புரியாமல் விழித்தாள்..

"வினோத்தா..? உங்க பிரண்டா..? யாரு அது..?"

வினோத்தை அவளுக்குத் தெரியவில்லை என்பதில் சங்கரின் மனதில் ஓர் இதம் பரவியது.. அவளது விழிகளில் கபடமில்லை.. முகத்தில் பொய் தெரியவில்லை.. நேரடியாக அவனது கண்களைப் பார்த்து அவள் பேசினாள்..

'இவளை வைத்து எங்க குடும்பத்துக்குள்ளே பிரளயமே வெடிச்சிருக்கு.. இவ என்னடான்னா வினோத் யாருன்னு கேட்கிறா..'

ஒரு மென்னகை சங்கரின் இதழ்களில் படர்ந்ததில் அகம் மலர முகம் மலர்ந்தாள் பவானி.. மழைக்காக ஏங்கும் சாதகப் பட்ஷி போல அவனது அன்பான ஓர் பார்வைக்காக ஏங்கித் தவிப்பவள் அவள்.. அவனோ மென்னகையைச் சிந்தி விட்டான்.. அது போதாதா அவளுக்க..?

மழைச்சாரல் அவளது மனம் நனைத்தது.. சிலிர்ப்புடன் அவள் இமைகளை மூடித் திறந்தாள்.. அவளது உணர்ச்சிப் போராட்டத்தை உணர்ச்சிப் போராட்டத்தை உணராத சங்கர் அவளை விசித்திரமாகப் பார்த்தான்..

"வாட் ஹேப்பன்..?"

"ஒன்னுமில்லைங்க சின்னய்யா.."

'சின்னையா' என்ற வார்த்தையை ரசித்துச் சொன்னாள் பவானி.. அது அவளுடைய சங்கரை அழைக்கும் வார்த்தை என்பதில் அவளுக்கு அவ்வளவு ஆனந்தம்..

"என்னவோ போ.. உன் பேச்சும்.. பார்வையும் புரியாத புதிராவே இருக்கு.. லீவ் இட்.. நாம் மேட்டருக்கு வரலாம்.. வினோத் என் பிரண்ட்.. ஃபாரினில் கூடப் படித்தவன்.. எங்களுக்கு டிஸ்டன்ஸ் ரிலேட்டிவும் கூட.."

'நானும் உனக்கு டிஸ்டன்ஸ் ரிலேட்டிவ்தான்.. என்ன ஒன்று.. அந்த வினோத்தைப் போலக் கோடிஸ்வரக் குடும்பத்தில்

பிறக்கவில்லை.. உங்களிடம் அடைக்கலம் கேட்ட தாத்தாவுக்குப் பேத்தி.. அதனால் வினோத் உங்களுக்கு உறவு.. நான் வேலைக்காரி..'

பொங்கிய மனதை அடக்கிக் கொண்டாள் பவானி.. சுயபச்சாதாபம் வாழ்வைத் தின்றுவிடும்.. போராடும் சக்தியை உறிஞ்சி பலவீனமானவளாக மாற்றி விடும்.. பவானி அதற்கு இடம் கொடுக்கக் கூடாது..

"அப்படிங்களா..?"

"காலையில் நீ ஸ்கூட்டியை ஓட்டத் தெரியாம ஓட்டி என் காரின் மீது மோதப் பார்த்தியே.."

"தெரியாம வந்துட்டேன் சின்னய்யா.. டெர்னிங்கில திரும்பறப்ப கவனமாப் பார்த்துத் திரும்பியிருக்கனும்.. நம்ம ஊரில என்ன டிராபிக்கா இருக்குங்கிற அலட்சியம்.. இனிமே பார்த்து வண்டியோட்டறேன் சின்னய்யா.."

"குட்.."

சங்கரின் இந்த ஒற்றை வார்த்தை அடுத்த மழைத்துளியாய் அந்த சாதகப்பறவையின் மனதில் விழுந்தது.. அவள் சிலிர்த்தாள்..

"இப்படித்தான் இருக்கனும்.. தப்புன்னு தெரிந்தா திருத்திக்கனும்.. கீப் இட் அப்.."

"ஆகட்டும் சின்னய்யா.."

அவனது கட்டளைக்கு அடிபணிவதில் இப்படியொரு ஆனந்தமா..?

"காலையில் காரில் என்னுடன் இருந்தவன்தான் வினோத்.. உன்னிடம் பேசினானே.. உன் கோட்டை எடுத்துக் கொடுத்தானே.."

'அப்படியா..? காலையில் சின்னய்யாவுடன் இன்னொருவன் இருந்தானா..?' கேள்வி கேட்டது பவானியின் மனம்..

அவளெங்கே வினோத்தைப் பார்த்தாள்.. சங்கர் வந்திருக்கிறான் என்ற இன்பப் பரபரப்பில் அவளுக்கு

வேறு எதையும் கவனிக்கத் தோன்றவில்லையே.. வினோத்தின் உருவம் மனதில் பதியவில்லையே..

"தெரியலை சின்னய்யா.."

வினோத் கொடுத்த கோட்டை சங்கரைப் பார்த்தபடி அனிச்சையாக வாங்கிக் கொண்டவள் அவள்.. அப்பாவியாக பதில் சொன்னாள்..

"தெரியலையா..?" ஆச்சரியத்துடன் கேட்டான் சங்கர்..

"ஆமாங்க சின்னய்யா.. கார்மேல மோதப் போயிட்டோமேங்கிற அதிர்ச்சியில இருந்ததில அங்கே என்ன நடந்துச்சுன்னு கூடக் கவனிச்சுக்கல.."

'இவளைப் போல ஏன் சரளா இல்லை..?'

கௌரி சரளாவைக் கண்டிப்பதில் நியாயம் உள்ளதோ என்று நினைத்தான் சங்கர்.. சரளாவைப் பெண் பார்க்க வந்தவன்தான் வினோத்.. அது அவனுக்குத் தெரியாது.. சரளாவுக்குத் தெரியும்.. எப்படியும் சங்கர் வினோத்திற்கு சரளாவை அறிமுகப் படுத்தி வைக்கத்தான் போகிறான்.. நண்பர்களின் உரையாடலில் சரளாவையும் கலந்து கொள்ள வைத்து விடுவான்.. அதற்காகக் காத்திருக்காமல் தானாக சந்தர்ப்பங்களை உருவாக்கிக் கொண்டு வினோத்திடம் சரளா ஒட்டிக் கொள்ள முயல்வது சலிப்பை உண்டாக்கி விடாதா..?

"வினோத் இல்லைன்னா வேறொரு மாப்பிள்ளை.. படிப்பும், அழகும், பணமுமா.. நமக்கு இணையா வேற மாப்பிள்ளை பார்க்க உன்னாலும் உன் அப்பாவாலும் முடியாதா சங்கர்..?"

கௌரி கேட்பதில் தவறில்லைதான்.. இதை சரளாவுக்கு யார் புரியவைப்பது.. வினோத்தை மணந்தால் வெளிநாட்டில் வாழலாம் என்று அவள் கனவு காண்கிறாளே..

"தெரியலைன்னா ஓகே.. இப்ப தெரிந்துக்க.. என்னுடன் என் பிரண்டும் வந்திருக்கிறான்.."

"அவரோட ரூமை நான் சுத்தம் பண்ணிக் கொடுக்கனுமா சின்னய்யா..? இதோ வர்றேன்.."

மருத்துவக் கல்லூரியில் படிக்கும் மமதை சிறிதும் இல்லாமல் நொடிப் பொழுதில் அவள் வேலைக்காரியாக மாறி நின்ற இயல்பில் சங்கரின் மனதில் இரக்கம் சுரந்தது..

"நோ தேங்க்ஸ்.."

கொத்தாக விழும் மழைச்சாரல்.. பவானியின் மனதில் காதல் ததும்பியது.. சாதகப்பறவை சாரலில் நனைந்தது..

"தேங்க்ஸெல்லாம் எதுக்கு சின்னய்யா..? என் வேலையைத்தானே செய்கிறேன்னு சொன்னேன்..?"

"நீ வேலை செய்யக்கூட வீட்டுக்குள்ளே வந்து விடாதே.."

சாரல் உலர்ந்து கனல் கங்குகள் மேலே விழுந்தன.. பவானியின் குளிர்ந்த மனம் சூடு தாங்காமல் கதறியது..

"இது என்னுடைய ஆர்டர் பவானி.. நானும் வினோத்தும் சென்னைக்குக் கிளம்பும் வரை, நீ எங்க கண்களிலே படவே கூடாது.. முக்கியமா வினோத்தின் பார்வையில் படக்கூடாது.."

"சரிங்க சின்னய்யா.."

"சப்போஸ், நீ அவனைப் பார்க்காம, அவன் உன்னைப் பார்த்து விட்டு வலியப் பேச வந்தாலும் நீ அவனிடம் பேசக்கூடாது.."

"தெரியாதவங்களிடம் நான் பேசவே மாட்டேனே சின்னய்யா.."

"இவன் தெரிந்தவன்தானே.. எங்க விருந்தாளி.."

"எனக்குத் தெரிந்தவரில்லையே சின்னய்யா.. அவர் எங்க வீட்டுக்கு விருந்தாட வரலையே.."

சங்கருக்குப் பிடித்தமான பதிலைச் சொன்னாள் பவானி.. பாராட்டுதலாக பார்த்து வைத்தான் சங்கர்.. பவானியெனும் சாதகப்பறவை உயிர்த்தெழுந்தது..

"உன்னால் எந்த பிராப்ளமும் உண்டாகலை பவானி.. பட்.. உன்னாலதான் பெரிய பிராப்ளம் கிரியேட் ஆகியிருக்கு.."

"புரியலை.."

"உனக்குப் புரியாமல் இருப்பதுதான் நல்லது.. வினோத்திடம் இருந்து நீ தள்ளியே இரு.. அதுதான் எல்லோருக்கும் நல்லது.."

'யார் அந்த வினோத்..?'

பவானிக்கு எரிச்சல் எரிச்சலாக வந்தது.. பனிரெண்டு வருடங்களாக ஜமின் வீட்டுத் தோட்ட வீட்டில் குடியிருப்பவளிடம் முதன் முறையாக பேச வந்திருக்கிறான் அவளுடைய ஆதர்ச நாயகன்.. அவனைக் கோபத்துடன் பேச வைத்திருப்பது எவனோ ஒரு வினோத்தானே..

"நான் சொன்னதை ஃபாலோ பண்ணுவன்னு நினைக்கிறேன்..?"

"நீங்க சொன்னா மலையுச்சியில இருந்துகூடக் குதிப்பேன் சின்னய்யா.. இதைச் செய்ய மாட்டேனா..?"

"ஃபிலிம் டயலாக்..?"

சங்கர் கேலி போலச் சொன்னாலும் அவளது அடிபணிதலில் அவனுக்குள் திருப்தி வந்திருந்தது.. நடக்க ஆரம்பித்தவன் நின்றான்..

"ஏழுவயசில கவுன் போட்டுக்கிட்டு உன் தாத்தாவின் கையைப் பிடித்தபடி வந்து நின்ற அந்த பவானியா நீ..?"

14

"பூவரசம் பூ பூத்தாச்சு..

பொண்ணுக்கு சேதி வந்தாச்சு..

காவேரி போல பொங்கற மனசு

பாடாதோ..?"

பவானி தோட்டத்து இருளில் கைகளை விரித்துத் தட்டாமாலை சுற்றினாள்.. மரக்கிளைகளைப் பிடித்துக் குதித்து மகிழ்ந்தாள்.. "ஊ.." வென குரல் கொடுத்து குயிலைப் போட்டிக்கு அழைத்தாள்..

சிறு மழைத்துளியின் ஸ்பரிசத்துக்காக ஏங்கிப் போயிருந்த அந்த சாதகப் பறவையைக் கொட்டும் மழை நனைத்திருந்தது.. சொட்டச் சொட்ட நனைந்த களிப்பில் பட்ஷி குதித்து ஆடியது..

"எவ்வளவு பெரிய பெண்ணா வளர்ந்திட்ட..? வாவ்.. அதிலும் ஃபாரினில் படித்தவனை அட்ராக்ட் பண்ணுகிற அழகு.."

"சின்னய்யா..?"

பவானிக்குத் தன் செவிகளையே நம்ப முடியவில்லை.. சங்கர் என்னவோ வினோத்தை மனதில் வைத்துக் கொண்டு சொன்னான்.. பவானியோ சங்கர் அவனைத்தான் சொல்கிறான் என்று நினைத்து மகிழ்ந்து போனாள்.. சங்கரும் வெளிநாட்டில் படித்தவன்தானே..

"மெடிகல் காலேஜ் ஸ்டூடண்டாமில்ல..? குட்... குடும்பத்தின் நிலையை உணர்ந்து படித்திருக்கிற.. ஆல் தி பெஸ்ட்.."

'உன்னைப் பார்த்து விட்டேன்.. உன்னுடன் பேசி விட்டேன்.. இனி விடியும் விடியல்கள் இனிதாகவே விடியும்.. நடக்கப் போகும் நாள்கள் எல்லாம் நல்லதாகவே நடக்கும்.. எனக்கு இனி என்ன குறை..?'

பவானிக்கு குறையொன்றும் இருந்ததில்லை.. அவள் சூழ்நிலைக்கு தக்கபடி தன்னை மாற்றிக் கொள்பவள்.. சின்னச் சின்ன ஆசைகளை மட்டும் மனதில் சுமப்பவள்.. அவையும் நிறைவேறாது.. அது குறித்தும் கவலை கொள்ளாதவள்..

இப்படிப்பட்டவளுக்கு சங்கரின் மீது பிரியம் வராமல் இருந்திருக்கலாம்.. வந்து விட்டது.. அவனை அடைய வேண்டுமென்ற ஆசை அவளிடமில்லை.. எப்போதாவது

ஓர்முறை அவனைப் பார்த்தால் போதும்.. அவள் மனது நிறைந்து விடும்.. அதைத்தாண்டி அவள் யோசித்ததில்லை.. திருமணம் என்ற ஒன்றைப் பற்றி நினைத்தும் பார்க்காத சிறு வயது.. படிப்பில் ஆர்வமுள்ளவள்.. பொறுப்பாக வீட்டையும் கவனித்து.. ஜமின் வீட்டில் வேலைகளையும் செய்து, மருத்துவக் கல்லூரிக்கும் போய் வருபவளுக்கு வேறு நினைவு வந்ததில்லை..

சங்கர் போய் விட்டான்.. கொட்டும் மழையில் நனைந்த அந்த சாதகப்பறவை உற்சாகத்துடன் துள்ளிக் குதித்தது.. அவளால் எட்ட நின்று கூடப் பார்க்க முடியாத சங்கர் கிட்ட நின்று பேசி விட்டான்.. அது போதும் அவளுக்கு..

அடுத்து வந்த நாள்களில் பவானி ஒளிந்திருந்து சங்கரைப் பார்த்தாள்.. மறந்தும் வினோத்தைப் பார்க்கவில்லை.. அவன் கண்களில் படவில்லை.. அவள் தோட்ட வீட்டில்தான் குடியிருக்கிறாள் என்று தெரிந்து வைத்திருந்த வினோத் அவளைத் தேடி அவளுடைய வீட்டிற்கே போய் விட்டான்.. அப்படி அவன் வீட்டுக்கு வருவான் என்று எதிர்பார்த்திராத பவானி பதறிப் போய் விட்டாள்.. அவன் கண்களில் படாமல் ஓடி சமையலறையில் மறைந்து கொண்டாள்.. வாசலில் நின்றிருந்த குமரகுரு வினோத்தைக் கண்டதும்..

"வாங்கய்யா.." என்று வரவேற்றார்..

"நான் உங்களை விட வயதில் சின்னவன்.. என்னைப் போய் 'ஐயா'ன்னு கூப்பிடறிங்களே.. வினோத்துன்னு பெயர் சொல்லியே கூப்பிடலாம்.." மென்மையாக முறுவலித்தான்..

அன்னவாசல் ஜமினுக்கு இப்படியொரு சொந்தமா என்று மலைத்துப் போனார் குமரகுரு.. பணமில்லாதவனை அருகில் கூட அவர்கள் சேர்த்துக் கொள்ள மாட்டார்களே..

"இருக்கட்டும்ங்க ஐயா.. இது அன்னவாசல்.. பட்டணமில்லை.. ஜமின் வீட்டுக் கணக்குப்பிள்ளை.. அந்த வீட்டுக்கு விருந்தாளியா வந்திருக்கிற தம்பிய பேரச் சொல்லிக் கூப்பிடறதா..? அது சரி வராதுங்க."

"நீங்க வெறும் கணக்குப்பிள்ளை மட்டுமில்லையே.. ஆண்டியோட ரிலேட்டிவாமே.. பெரியப்பான்னு சொன்னாங்களே..?"

கௌரியின் பெருந்தன்மையை நினைத்து மனதுக்குள் நன்றி சொல்லிக் கொண்டார் குமரகுரு.. அவளது ஆதரவும், பாசமும் அல்லவா அவரையும் அவருடைய பேத்தியையும் பாதுகாக்கிறது..

"அது அம்மாவோட பெருந்தன்மை.. அதுக்காக நாம நிற்கிற இடம் எதுன்னு மறந்து போகலாமா ஐயா..?"

"இந்த 'ஐயா' என்கிற வெர்டை அவாய்டு பண்ணலாமே.. ஐ ஃபீல் அன்ஈஸி.."

வினோத்தின் பிடிவாதத்தில் குமரகுரு ஈர்க்கப்பட்டார்.. மனிதரை மதிக்கும் அவனுடைய குணம் புண்பட்டிருந்த அவரது மனதுக்கு மருந்தாக வருடியது..

"ஆகட்டும் தம்பி.." என்றார்..

"இது ஓகே.." வரிசைப் பற்கள் தெரிய அவன் சிரித்தான்.

"நீங்க சின்னய்யாவோட படிச்சவுகளா..?" வாத்சல்யத்துடன் விசாரித்தார் குமரகுரு..

"சின்னய்யா..? சங்கரையா சொல்கிறிங்க..?"

"ஆமாங்க தம்பி.. அவரை சின்னய்யான்னு கூப்பிடக் கூடாதுன்னு சொல்லாதீங்க.. என்னால் மாத்திக் கூப்பிட முடியாது.."

வினோத் பெரியவரை இரக்கத்துடன் பார்த்தான்.. சங்கரின் வீட்டில் குமரகுருவை மரியாதையுடன் நடத்துவதில்லையோ என்ற கேள்வி அவன் மனதில் எழுந்தது..

"நீங்க அவங்களுக்கு ரிலேட்டிவ்தானே..? ஆண்ட்டிக்கு பெரியப்பான்னா சங்கருக்கு 'தாத்தா' தானே..?"

"வேண்டாம் தம்பி.." தீவிரமான முகத்துடன் மறுத்தார் குமரகுரு..

"இல்லாதவன் சொந்தத்தச் சொல்லக் கூடாது.. இந்த வயசான காலத்தில.. நொடிச்சுப் போன இந்தக் கிழவன் என்ன வேலையைப் பார்த்துர முடியும்..? இருக்க வீடு கொடுத்து, பார்க்க வேலையும் கொடுத்திருக்காங்க.. வயதுப் பெண்ணை வைத்துக்கிட்டு நான் வேற எங்கே போக முடியும்..? என்ன வேலையைப் பார்க்க முடியும்..? ஆதரிக்கறவங்க மனசு கோணாம, இருக்க வேண்டிய இடத்தில இருந்துக்கிறதுதான் எங்களுக்கு நல்லது.. இந்தப் பேச்சை இத்துடன் விட்டிருங்க.."

குமரகுரு தனது நிலையைச் சொல்லி விட்டார்.. அதற்கு மேல் அதைப் பற்றிப் பேசக் கூடாது என்ற நாகரிகத்துடன் வினோத் தோட்டத்து வீட்டைப் பார்த்தான்.. பவானி உள்ளே இருப்பாளா என்று அவன் மனம் தேடியது..

"இந்த வீட்டில்தான் குடியிருக்கீங்களா..?"

"ஆமாம் தம்பி.."

உள்ளே வாங்க என்று குமரகுரு அழைப்பு விடுக்கவில்லை.. வயதுப் பெண் இருக்கும் வீட்டிற்கு வாலிபப்பையனை அழைக்கக் கூடாது என்பது அவரது கொள்கை.. வினோத் அந்தக் கொள்கையை எளிதாக உடைத்து விட்டான்.. விருந்தோம்பல் என்ற பண்பாட்டில் அவரைச் சிக்க வைத்து விட்டான்..

"இதுதான் உங்க வீடுன்னு சொல்கிறீங்க.. வீட்டுக்குள் வந்து ஒரு கப் காப்பி சாப்பிடுங்கன்னு சொல்ல மாட்டேங்கறிங்களே.. கௌரி ஆண்ட்டிக்கு நீங்க ரிலேட்டிவ்ன்னா.. எனக்கும் நீங்க ரிலேட்டிவ்தானே.. ரிலேட்டிவ்வை வாசலில் நிற்க வைத்துத்தான் பேசுவீங்களா..?"

வினோத் விடுத்த அம்பு சரியான இடத்தில் தாக்கி விட்டது.. குமரகுரு துடித்துப் போனவராக அவனை வீட்டுக்குள் அழைத்து விட்டார்..

"தப்பா நினைத்துக்காதீங்க தம்பி.. இது ஏழை குடியிருக்கிற வீடு.."

"ஊஹீம்.. எங்க ரிலேட்டிவ் குடியிருக்கிற வீடு.."

"எங்க வீட்டுக்கு நீங்க வருவீங்களோ, மாட்டிங்களோன்னு தான்.."

"அதெல்லாம் வருவேன்.."

வினோத் குமரகுருவை முந்திக் கொண்டு வீட்டுப் படியில் ஏறி விட்டான்.. சுவாதீனமாக அவன் சொந்தம் கொண்டாடியதில் குமரகுரு நெகிழ்ந்து போனார்..

"வாங்க தம்பி.. வாங்க.." வாயாற அழைத்தபடி வீட்டுக்குள் ஓடினார்..

ஹாலில் கிடந்த நாற்காலியை அவர் தோளில் கிடந்த துண்டால் துடைக்கப் போக, வினோத் அவருடைய கைபற்றித் தடுத்தான்..

"சேர் கிளினாத்தான் இருக்கு தாத்தா.. நீங்களும் உட்காருங்க.."

அவரைப் பக்கத்தில் உட்கார வைத்து உரையாடினான் அவருடைய ஊர், உறவுகளை விசாரித்தான்..

"வாவ்..! நீங்களும் ஜமின் வம்சமா..? இதை சங்கர் சொல்லவே இல்லையே.." வியந்தான்..

"இருக்க ஒரு ஓலைக்குடிசைகூட இல்லாத ஏழை எந்த வம்சத்தில் பிறந்திருந்தா என்னங்க தம்பி..? வம்சப் பெருமை குறையாம வாழத் தெரியாத பரம்பரைiயில பிறந்தவன் வம்சப் பெருமையைப் பத்தி வாய் விட்டுப் பேசக் கூடாது.. பொழைக்கத் தெரியாம பொழைச்சு, அத்தனை சொத்தையும் வித்துத் தின்ன பாட்டன், முப்பாட்டனுக வைச்சுட்டுப் போனது வெட்டிக் கௌரவத்தையும் வீணாப் போன வம்சப் பெருமையையும்தான்.. அந்த ரெண்டும் என்னைக் கொலையாய் கொன்னதினாலதான் நான் சொந்த ஊரில கூலிவேலை செய்ய முடியாம, அசலூருக்கு அடைக்கலம் கேட்டு வந்திருக்கேன்.. சொந்த பந்தத்துக்கிட்டேயே கூலி வேலை செய்யறேன்.. வம்சப் பெருமையைப் பத்தி நான்

பேசமாட்டேன் தம்பி.. பேசறதுக்கு எனக்கு உரிமையும் இல்ல.. தகுதியும் இல்ல.."

பெரியவரின் துயரத்தில் மனம் கரைந்தான் வினோத்.. அவனது மனம் கனத்தது.. பவானியின் தேஜஸ் மிகுந்த தேவதை முகம் மனதில் தோன்றியது.. ஜமின் வம்சத்தில் பிறந்தவள் இன்னொரு ஜமின் வீட்டில் வேலைக்காரியாக வேலை செய்தபடி படிக்கிறாள்.. அவளது படிப்பிற்கான மரியாதை வேலையாள் என்ற அழைப்பின் போர்வையில் மறைக்கப் படுகிறது..

பவானியை அந்தத் துன்ப நிலையிலிருந்து மீட்க வேண்டும் என்று விரும்பினான் வினோத்.. அவள் இருக்க வேண்டிய இடம் இதுவல்ல.. அவளுக்கான மரியாதை அவளுக்குக் கிடைத்தே ஆக வேண்டும்..

15

"நேர்மை, நியாயம், நீதி தவறாம வாழ்ந்தா போதும் தாத்தா.. அதுவே பெரிய தகுதி.. அதுக்கு மிஞ்சிய குவாலிபிகேசன் என்ன இருக்கு..? நீங்க வயதில் பெரியவங்க.. போலியா பெருமை பேசாம உள்ளது உள்ளபடி சொல்கிறிங்களே.. உங்களைப் போல இயல்பா இருக்கிறவங்க ரேர் தாத்தா.."

வாய்க்கு வாய் தாத்தா என்று உறவு கொண்டாடும் அந்தக் கோடிஸ்வர வலிபனைக் கண்கலங்கப் பார்த்தார் குமரகுரு.. இப்படியொரு மரியாதையான வார்த்தைகளைக் கேட்டு எவ்வளவு காலமாகிறது.. கோடிஸ்வரன் குடிசையில் இருக்கும் வயோதிகரிடம் சொந்தம் கொண்டாடுகிறானே..

"உங்களிடம் பணம் மட்டும்தான் இல்லை தாத்தா.. எங்க தூரத்துச் சொந்தம் என்கிற முறை இருக்கு.. ஜமீன் வம்சம் என்கிற பெருமை இருக்கு.. உழைத்துச் சாப்பிடுகிறீங்க.. உங்க பேத்தியை டாக்டருக்குப் படிக்க வைக்கறீங்க.. இதுக்கு மேல என்ன வேணும்..?"

"என் பேத்தி பவானி டாக்டருக்குப் படிக்கிறான்னு உங்களுக்கு எப்படித் தெரியும் தம்பி..?"

"என்ன தாத்தா இது..? சங்கர் வீட்டுக்கு வந்திருக்கிறேன்.. இங்கேதானே தோட்டத்திலே நீங்க குடியிருக்கிறீங்க..? எனக்குத் தெரியாம போகுமா..? ஏன் இப்படிக் கேட்கறிங்க..?"

"இல்லை தம்பி.. ஜமின் வீட்டில பவானி படிக்கிறான்னே சொல்ல மாட்டாங்க.. மத்தவங்க சொல்கிறதையும் அனுமதிக்க மாட்டாங்க.. நீங்க டாக்டருக்குப் படிக்கிறது வரை தெரிந்து வைத்திருக்கீங்களே.. அதான் கேட்டேன்.."

'என்ன மனிதர்கள் இவர்கள்..' வினோத்துக்கு வெறுப்பு வந்தது..

ஒரு ஏழைப்பெண், தன் படிப்பில் உயர்ந்து மருத்துவப் படிப்பைப் படிக்க ஆரம்பித்திருக்கிறாள்.. அதைச் சொல்ல அனுமதிக்காத மனிதர்கள் என்ன மனிதர்கள்..!

"யாரும் எனக்குச் சொல்லவில்லை தாத்தா.. நான் சங்கருடன் வந்தபோது உங்க பேத்தியின் ஸ்கூட்டி எதிரே வந்து விட்டது.. பயத்தில் அவங்க ஸ்கூட்டியோடு கீழே விழுந்துட்டாங்க.. அப்ப அவங்க கையில இருந்த கோட்டையும் ஸ்டெதஸ்கோப்பையும் பார்த்தேன்.. அதை வைத்து நானாத் தெரிந்துக்கிட்டதுதான்.."

"என்னது..? பவானி ஸ்கூட்டியோட கீழே விழுந்துட்டாளா..?"

குமரகுரு பதறிப் போனார்.. பவானி இப்படிப்பட்ட சம்பவங்களை அவரிடம் சொல்ல மாட்டாள்.. தாத்தா பதறிவிடுவார் என்பதால் மறைத்து விடுவாள்.. அன்றும் அதுபோல மறைத்து விட்டாள் சொல்லவில்லை..

"பவானி.. இங்கே வா.. தம்பி ஏதோ சொல்கிறாரே.. அது உண்மையா..?" குமரகுரு அதட்டினார்..

சமையலறையில் ஒளிந்து நின்ற பவானிக்கு என்ன செய்வதென்று தெரியவில்லை..இக்கட்டான நிலையில் மாட்டிக் கொண்டாள்... சங்கர் வினோத்தின் கண்களில்

அவள் படக்கூடாது என்று கட்டளையிட்டிருக்கிறான்.. அவன் சொல் அவளுக்கு வேத வாக்கு..! தாத்தாவோ வினோத்தின் முன்னால் உட்கார்ந்து கொண்டு அவளை வரச் சொல்லி சத்தம் போடுகிறார்.. தாத்தா சொல் மிக்க மந்திரமில்லை என்று வாழ்பவள் அவள்..

இரண்டு கட்டளைகளில் எந்தக் கட்டளைக்கு அடிபணிவது..? பவானி சங்கர் சொன்னதை நினைவு படுத்திக் கொண்டாள்.. ஒருவேளை வினோத் தானாக வந்து பவானியிடம் பேச முயன்றாலும் பவானி பேசக்கூடாது..

'வேற வழியில்லை.. தாத்தா கூப்பிடறப்ப ஏன்னு கேட்கப் போயி நின்னுதான் ஆகணும்.. உள்ளேயே ஒளிஞ்சிருக்க முடியாது. இப்ப என்ன..? சின்னய்யா ரெண்டாவதா சொன்னதை செஞ்சுட்டாப் போகுது..'

வினோத் பேசினாலும் தான் பேசக்கூடாது என்று உருப் போட்டபடி பவானி சமையறையை விட்டு வெளியே வந்தாள்.. அவளது வரவை எதிர்பார்த்து சமையலறை வாசலையே பார்த்துக் கொண்டிருந்த வினோத்தின் விழிகள் பளபளத்தன.. பவானி வினோத்தைப் பார்க்கவே இல்லை.. குனிந்த தலையோடு.

"என்ன தாத்தா..?" என்று கேட்டாள்..

"முந்தா நாள் காலையில நீ காரில மோதிட்டயா..?"

"காரில மோதினா முழுசா உங்க முன்னால நிக்க முடியுமா தாத்தா..? அன்னவாசல்ல நம்ம ஜமின் வீட்டுக் கார்க மட்டும்தான போய் வருது.. அதனால நான் பராக்குப் பார்த்துக்கிட்டு ஸ்கூட்டியை ஓடினேனா.. சின்னய்யாவோட காரு எதிரிலே வந்துருச்சு.."

"அய்யய்யோ.."

"ஏன் தாத்தா பயப்படறிங்க.. நம்ம சின்னய்யா கார் ஓட்டறதில மகா கெட்டிக்காரராச்சே.."

இதைச் சொல்லும்போது பிரகாசித்த பவானியின் விழிகளையும் முகத்தின் பூரிப்பையும் கவனித்த வினோத்,

அதை

'எஜமான் விசுவாசம்..!' என்று எண்ணிக் கொண்டான்.

"அப்புறம்..?" குமரகுரு விடவில்லை..

"அப்புறம் என்ன தாத்தா..? சப்புரம்தான்.." பவானி கலகலத்துச் சிரித்தாள்..

சிரிக்கும் போது அவளது கண்களும் மலர்ந்து சிரிக்கும் அழகை ரசித்துப் பார்த்தான் வினோத்.. மல்லிகையின் நறுமணம் அவனை மயக்கத்தில் ஆழ்த்தியது..

"சிரிச்சு மழுப்பாதே.. என்ன நடந்துச்சுன்னு சொல்லு.." கண்டிப்புடன் துருவினார் குமரகுரு..

"என்ன நடந்தாம்.. ஆடு, கோழி, மனுசங்கன்னு அத்தனை ஜீவன்களும்தான் நடந்துச்சு.. காரில மோதப் போகிறோம்ங்கிற பயத்தில நான் தொபுக்கடின்னு பக்கத்தில இருந்த வைக்கப் போர்மேல வண்டியோட விழுந்தேன்.. எதிரே காரில மோதறப் போல ஸ்கூட்டி வந்ததில சின்னய்யா காரை சடன் பிரேக் போட்டு நிப்பாட்டிட்டாரு.. வண்டி மேல காரும் மோதல.. காரு மேல வண்டியும் மோதல.. அதனால ரெண்டுக்கும் சேதமில்ல.."

"உனக்கு அடி பட்டுச்சா..?"

"நான்தான் வண்டியோட வைக்கப்போர் மேல விழுந்தேனே.. அப்புறம் எப்படி தாத்தா அடி படும்..?"

உண்மையில் பவானி பயத்தில் ஸ்கூட்டியோடு விழுந்த இடத்தில் புல் மண்டி இருந்தது.. வைக்கோல் போர் இல்லை.. புல்லின் மீது விழுந்ததால் அவளுக்கு சிராய்ப்பு கூட ஏற்படவில்லை.. அதைச் சொன்னால் குமரகுரு கேட்டுக் கொள்வாரா..? அதனால் வைக்கோல் போர் என்று மாற்றி விட்டாள்... அவளது சமயோகிதத்தை மெச்சும் புன்முறுவலை உதிர்த்தான் வினோத்.. அவன் வைரங்களையே உதிர்த்திருந்தாலும் பவானி ஏறெடுத்துப் பார்த்திருக்க மாட்டாள்.. சங்கர் அவளுக்கு கட்டளையிட்டிருக்கிறானே..

"இதை ஏன் என்கிட்டச் சொல்லலை..?"

"அடிபட்டிருந்தா சொல்லலாம்.. சிராய்ப்பு கூட இல்லை.. அப்புறம் எதுக்காக உங்ககிட்டச் சொல்லனுமாம்.."

"அப்படியெல்லாம் அசால்ட்டாப் பேசக் கூடாது.. பெரியவன்னு ஒருத்தன் எதுக்காக இருக்கேன்.. தாத்தாகிட்ட மறைப்பியா..?"

"உங்ககிட்ட மறைப்பேனா தாத்தா..? பெரிசு பண்ண வேணாம்ன்னுதான் சொல்லலை.."

பவானியின் குரல் கரகரத்தது.. அப்புறம்தான் அந்தப் பேச்சை விட்டார் குமரகுரு..

"போகுது விடு.." என்று பேத்திக்கு மன்னிப்பை அருளியவர்.. வினோத்தைக் காட்டி..

"தம்பி ஜமின் வீட்டுக்கு விருந்தாளியா வந்திருக்காரும்மா.." என்று அறிமுகப் படுத்தி வைத்தார்..

'நான் கேட்டேனா..? ஏன் தாத்தா, என் நிலைமை புரியாம விளையாடறிங்க..?' நொந்து போன பவானி வினோத்தைப் பார்க்காமல் வேறு எங்கோ பார்த்தபடி..

"தெரியும் தாத்தா.. நம்ம சின்னய்யாவோட காரில இவரும் இருந்தார்.." என்று சொன்னாள்..

"தம்பிக்கு காபி போட்டுக் கொண்டு வாம்மா.."

"சரி தாத்தா.."

விட்டு விடுதலையான உணர்வுடன் விட்டுச் சிறகடித்து சமையலறைக்குள் பறந்து விட்டாள் பவானி.. அவளை ரசித்துப் பார்த்துக் கொண்டிருந்த வினோத்தின் மனதில் ஏமாற்றம் சூழ்ந்தது.. சமையலறையை பார்த்தான்.. பவானியின் நிழல்கூடத் தெரியவில்லை.. அவள்தான் சுவரோடு சுவராக பல்லி போல ஒட்டிக் கொண்டிருந்தாளே..

அரிதாக அவர்களது வீடு தேடி வந்திருக்கும் முதல் விருந்தாளிக்கு அருமையான காபி கலந்து தம்ளரில் ஊற்றி அதைத் தட்டில் வைத்து எடுத்துக் கொண்டாள்

பவானி.. வினோத்தின் விழிகளில் மின்னல் வந்ததைக் கவனிக்காமல் எங்கோ பார்த்தபடி அவனிடம் காபிதம்ளரை நீட்டினாள்..

"தேங்க்ஸ்.." அவன் எடுத்துக் கொண்டான்..

மறுநொடியில் அவள் மறைந்து கொள்ள இவன் காபியைச் சொட்டுச் சொட்டாக ரசித்து உறிஞ்சிக் குடித்து முடித்தான்..

"காபி செம டேஸ்ட் தாத்தா.." மனம் விட்டு உண்மையாகப் பாராட்டினான்..

"என் பேத்தி எதைச் செய்தாலும் அது சிறப்பா இருக்கும் தம்பி.." குமரகுரு முகம் மலர்ந்தார்..

"உங்க பேத்தியே சிறப்பானவங்கதான் தாத்தா.."

வினோத் விடைபெற்றுக் கொண்டு எழுந்தான்.. வாசலுக்கு வந்து மரியாதையுடன் கை கூப்பி அனுப்பி வைத்தார் குமரகுரு.. அதை மாடி பால்கனியிலிருந்து பார்த்துக் கொண்டிருந்த சரளா தமையனிடம் போய் எரிமலையாய் வெடித்தாள்.. அவன் மறுநாள் காலையில் பவானியைத் தோட்டத்தில் சந்தித்து கனல் கங்குகளை அவள் மனதில் கொட்டினான்..

"கோடிஸ்வரன்.. வெளிநாட்டில் இருக்கிறவன்.. பார்க்கவும் நல்லா இருக்கான் என்கிறதுக்காக அவனை மயக்கப் பார்க்கிறாயா..? இந்தப் பிழைப்பு பிழைக்க உனக்கு வெட்கமாக இல்லை.. ச்சீ.."

வெறுப்பை உமிழ்ந்த அவன் பார்வையில் பவானி துடித்துப் போனாள்..

## 16

"கணக்குப்பிள்ளையோட பேத்தியாச்சே.. உனக்குக் கணக்குப் பண்ண சொல்லியா தரனும்..?"

இதைத்தான் இவன் வெளிநாட்டில் போய் படித்து விட்டு வந்தானா என்று வெறுத்துப் போனாள் பவானி.. அவனை வெறுக்க முடியவில்லை.. அவன் பேசும் பேச்சைத்தான் வெறுக்க முடிந்தது.. வேண்டாம் இப்படியெல்லாம் பேசாதே என்று அவளது மனம் கூவியது.. கேட்கச் சகிக்காமல் காதுகளைப் பொத்திக் கொண்டாள்.. அவள் துடித்த துடிப்பில் எதை உணர்ந்தானோ.. சங்கரின் புருவங்கள் முடிச்சிட்டன.. அவன் யோசனையுடன் அவளைப் பார்த்தான்.. அவளது கண்களின் வேதனையில் பொய் தெரியவில்லை.. நிதானித்தான்..

"உன்னிடம் நான் என்ன சொன்னேன்..?"

"உங்க பிரண்டின் கண்களில் படக்கூடாதுன்னு சொன்னீங்க.. அதை ஃபாலோ பண்ணினேன் சின்னய்யா.. அவர் பார்வையில் படவே இல்லை.. அவர்தான் எங்க வீட்டுப் பக்கம் வந்தாரு.. அப்பவும் நான் சமையல்கட்டில போய் ஒளிஞ்சுக்கிட்டேன்.."

பவானி தேம்பினாள்.. சங்கர் யோசனையுடன் திரும்பி விட்டான்.. சரளாவைக் கூப்பிட்டு விசாரித்தான்..

"நீ என்ன பார்த்த சரளா..?"

"வினோத் அந்த வேலைக்காரியோட வீட்டுக்குள்ள இருந்து வந்தார் அண்ணா.. கூடவே அந்தக் கணக்குப்பிள்ளையும் வந்தான்.."

"ம்ப்ச்.. அம்மா உன்னைத் திட்டறதில தப்பேயில்ல.. வயதில பெரியவரை அவன் இவன்னு சொல்கிறயே.. வயதுக்கு மரியாதை கொடுக்க வேண்டாமா..?"

"அவனையும் அவனோட பேத்தியையும் நம்ம வீட்டுக் காம்பவுண்டுக்குள்ள காலடி வைக்க விட்டதே தப்பு.. இதில மரியாதை வேற கொடுக்கனுமா..? அவனுக்கு இந்த மாரியாதையே போதும்.. எல்லாம் அப்பாவைச் சொல்லனும்.. அம்மாவை அடக்கி... வைக்கிற இடத்தில வைத்திருந்தா இதுகள்ளாம் இந்த ஆட்டம் போட்டிருக்காதுக... அம்மாள்ளாம் ஒரு ஆளுன்னு அவங்க

பேச்சை அப்பா காது கொடுத்து கேட்டதினாலதான் இதுகளுக்கு இருக்க இடமும் கொடுத்து அந்தக் கிழவனுக்கு வேலையும் போட்டுக் கொடுத்தாரு.. அந்த நன்றியில்லாம ஆடுதுக.. நன்றி கெட்ட நாய்க.."

"சரளா.. வாயை மூடு.."

சங்கர் ஓங்கி விட்ட அறையில் கன்னத்தைப் பிடித்துக் கொண்டு பின்னால் நகர்ந்தாள்.. அதிர்ச்சியுடன் தமையனைப் பார்த்தாள்.. அதுநாள்வரை அவன் சரளாவை கைநீட்டி அடித்ததில்லை..

"அண்ணா..?"

சங்கருக்கு மனம் வலித்தது.. சரளா சங்கரைவிட நான்கு வயது இளையவள்.. அவளைத் தூக்கி வைத்துக் கொஞ்சுவான்.. விளையாட்டுக் காட்டுவான்.. கடிந்து பேசியதில்லை.. சின்னதாகக் கிள்ளியதுகூட இல்லை.. தங்கை மீது பாசத்தை பொழிபவன்..

அந்தத் தங்கையை கைநீட்டி அடித்து விட்டான்..

"ஐ'ம் ஸாரி.. பட்.. நீயும் இப்படிப் பேசியிருக்கக் கூடாது.. அம்மாவை வைக்கிற இடத்தில வைக்கனும்ங்கிற.. நானும் கவனித்துக்கிட்டுத்தான் இருக்கேன்.. உனக்குச் செல்லம் கொடுத்து நீ செய்கிறதெல்லாம் சரின்னு சொன்னா அவங்க நல்லவங்க.. கண்டிச்சு வளர்த்தா அவங்க உனக்குப் பிடிக்காதவங்க.. அப்பாவும் உன்னை வைக்கிற இடத்தில வைத்திருக்கனும்.. ஐ மீன்.. அம்மாவைப் போல கண்டித்து வளர்த்திருக்கனும்.. அப்படி வளர்த்திருந்தா இப்படி நீ பேசியிருக்க மாட்ட.."

"புரியுது அண்ணா.. நீயும் அம்மா பக்கம் சேர்ந்துட்டயில்ல..?"

"அறிவோடதான் பேசறயா..? அம்மாவையும் அப்பாவையும் பிரித்துப் பார்க்கறியா..?"

"அம்மா செய்கிறது அப்படித்தான் இருக்கு.. அப்பா வேண்டாம்ன்னு சொல்கிறதை செய்கிறாங்களே.."

"அம்மா வேண்டாம்ன்னு சொல்கிறதை நீ செய்கிறாயே.."

"அப்பா என்பக்கம்தானே நிற்கிறார்..?"

"பாசம் அவர் கண்ணை மறைக்குது.. அம்மாவும் உன்பக்கம் தான் நிற்கிறாங்க சரளா.. அது உனக்குத் தெரியலை.. தட்ஸ் ஆல்.. நல்லது கெட்டது அவங்களுக்குத் தெரியுது.. அதனால் நீ செய்கிறதுக்கு எல்லாம் தலையை ஆட்டாம கண்டிக்கிறாங்க.."

"அந்த நல்லது கெட்டது எனக்கும் தெரியும்.."

"என்னத்தை தெரியுது..? ஒரு மண்ணும் தெரியலை.."

"தெரியலைன்னா போகட்டும்.. நான் இப்படித்தான் இருப்பேன்.. அன்னவாசல் ஜமின்தாரோட செல்ல மகளை யாரும் ஒன்றும் சொல்ல மாட்டாங்க.."

"எந்த வீட்டிலும் பிள்ளைகளை வளர்ப்பதைப் பற்றி அப்பாவை ஒன்றும் சொல்ல மாட்டாங்க.. இவள் பிள்ளைகளை வளர்த்திருக்கிற லட்சணத்தைப் பாருன்னு அம்மாவைத்தான் திட்டுவாங்க.."

சங்கர் கோபமாக போய் விட்டான்.. சரளா அதற்கும் குமரகுருவும், பவானியும்தான் காரணம் என்று சிவனேசனிடம் போய் அழுதாள்.. அவர் சங்கரை விட்டு விட்டு கௌரியிடம் சப்தம் போட்டார்.. கௌரி சங்கரிடம் நடந்தது என்ன என்று விசாரித்தாள்.. அவனும் சொன்னான்..

"நீ பவானியிடம் அப்படிச் சொல்லியிருக்க வேண்டியதில்லை சங்கர்.. நீ சொல்லாமலே அவள் வினோத்திடம் பேசியிருக்க மாட்டாள்.. அவனைத் தவிர்த்திருப்பாள்.."

"எனக்கும் அப்படித்தான் தோணுதும்மா.. பவானியிடம் பிரச்னையில்லை.. அவ சொன்னாக் கேட்டுகிற டைப்பாத்தான் இருக்கிறா.. பட்.. இந்த வினோத்தைக் கண்ட்ரோல் பண்ண முடியலையே.. அவ வீட்டுக்கே போயிருக்கிறானே.."

"வீட்டுக்குப் போனாலும் பிரச்னையில்லை சங்கர்.. பவானியை வசியம் பண்ண அவனால் முடியாது.."

கௌரி மகனைப் பார்த்த மௌனப் பார்வை உன்னால் மட்டும்தான் அது முடியும் என்று சொல்லாமல் சொல்லியது.. அது புரியாத சங்கர்..

"என்னம்மா..?" என்றான்..

"இதெல்லாம் ஒரு பிரச்னையே இல்லை சங்கர்.. விடு.. நான் பார்த்துக்கறேன்.. ஆனா ஒன்னு சங்கர்.. அவளைப் போய் பணத்துக்கும் வெளிநாட்டு வாழ்க்கைக்கும் ஆசைப்பட்டு அவனை மயக்கப் பார்த்தான்னு சொல்லியிருக்கியே.. தப்புடா சங்கர்.. ஏழைப்பெண் என்கிறதுக்காக நாம் வாயில் வந்ததைப் பேசி விடலாமா..?"

"தப்புத்தான் அம்மா.." குற்ற உணர்வுடன் சொன்னான் சங்கர்..

மகனின் தலைமுடியைக் கோதிப் பரிவுடன் சிரித்த கௌரியின் கண்களில் கண்ணீர் திரையிட்டிருந்தது..

"நீ என் மகன்டா சங்கர்.. புரிஞ்சு நடந்துக்குவ.. இப்ப என்ன..? வினோத் பவானியிடம் பேசிப் பழகி விடக் கூடாது.. அவ்வளவுதானே..? நாளையிலிருந்து பவானி வீட்டில் இருக்க மாட்டா.." கௌரி உறுதியளித்தாள்..

"எப்படிம்மா..?"

"அவளுக்கு முத வருச பரிட்சை ஆரம்பிச்சிருச்சுடா.. பரிட்சை முடிகிற வரைக்கும் நீ ஹாஸ்டலில் உன் தோழிகளோடு இருந்து படின்னு நான் ஏற்கனெவே சொல்லி வைச்சிருக்கேன்.. வீட்டில இருந்தா உன் தங்கை அவளைப் படிக்க விடமாட்டாளே.. வேணும்னே வேலை ஏவுவா.. மனசைப் புண்படுத்தறதைப் போலப் பேசுவா.. பாவம்டா அந்த பவானி.. இந்த படிப்பை வைச்சுத்தான் அவளோட எதிர்கால வாழ்க்கையே இருக்கு.. அவ தலைவிதி இந்தப் படிப்பாலேதான் மாறனும் சங்கர்.. இன்னும் ரெண்டு நாளிலே பரிட்சை ஆரம்பிச்சிரும்.. அவ நாளைக்கே ஹாஸ்டலுக்குப் போயிருவா.."

பவானி மறுநாளில் இருந்து வீட்டில் இருக்கமாட்டாள் என்பதில் சங்கர் மகிழ்ந்துதானே போக வேண்டும்..? ஏன் சோர்வாக உணர வேண்டும்..?

மறுநாள் அதிகாலையிலேயே எழுந்தவன் தோட்டத்துப் பக்கம் போனான்.. குமரகுரு தோட்டத்தின் மரம், செடி, கொடிகளைச் சுற்றிப் பார்க்கப் போயிருந்தார்.. பவானி தாவணியை இழுத்துச் செறுகியபடி குனிந்து வாசலில் கோலம் போட்டுக் கொண்டிருந்தாள்.. அவளது நீண்ட பின்னல் முன்னால் வந்து விழுந்து தரையில் புரண்டது..

'டாக்டருக்குப் படிக்கிறவளைப் போலவா இருக்கா..?'

இவளிடம் என்ன இருக்கிறது என்று சரளாவை விட்டுவிட்டு இவள் பின்னால் வினோத் சுற்றுகிறான் என்று ஆராய்ச்சிப் பார்வை பார்த்தான் சங்கர்.. பார்க்கப் பார்க்க அவனது மனம் வியந்து போனது.

அவளிடம் கள்ளம் கபடமில்லாத அற்புத அழகு இருந்தது.. தேவதையின் பொழிவு இருந்தது.. யட்சக் கன்னிகையின் யௌவனம் நிறைந்திருந்தது.. காருண்யம் மிக்க கருவிழிகளில் அன்பைத் தேக்கி வைத்திருந்தாள்.. அது போன்ற முகபாவத்தை கௌரியிடம்தான் சங்கர் கண்டிருக்கிறான்.. அதனாலேயே கௌரியை அவனுக்கு மிகவும் பிடிக்கும்.. தாயின் விழிகளை உற்று உற்றுப் பார்ப்பான்..

'இவ பின்னாலே அவன் மனசு போகிறதில் ஆச்சரியமில்லை..'

கோலம் போட்டு முடித்து எழுந்த பவானி, முகத்தில் வந்து விழுந்த முடிக்கற்றையை ஒதுக்கி விட்டபடி யதேச்சையாக திரும்பிப் பார்த்தாள்.. சங்கரைக் கண்டதும் பதறிப் போனவளாக உடையை சரி செய்தபடி..

"சின்னய்யா..?" என்றாள்..

தவறு செய்து விட்டு தண்டனையை எதிர்பார்த்துக் காத்திருக்கும் குழந்தையைப் போல அவளது விழிகளில் பயம் தெரிந்தது.. இன்றைக்கு என்ன மண்டகப்படியைக்

கொடுக்கப் போகிறானோ என்று நடுங்கிப் போனாள்.. அதில் சங்கர் சங்கடம் கொண்டான்..

"வினோத்துக்குத்தான் காபி போட்டுக் குடுப்பியா..? எனக்கெல்லாம் காபி கிடைக்காதா..?" இயல்பாகக் கேட்டான்.

அதில் அவளது முகம் பூவாக மலர்ந்தது.. விழிகளில் நட்சத்திரங்கள் மின்னின.. அதியசம் நடந்து விட்டதைப் போல ஆனந்தப் பரவசம் கொண்டாள்.. சிலிர்ப்புடன் அவளைப் பார்த்தாள்.

17

"சின்னய்யா..?"

நம்பமுடியாத பிரமிப்புடன் கேட்டாள் பவானி.. சங்கருக்கு அவளது அந்த சந்தோசம் பிடித்திருந்தது.. அவளுடைய எஜமானன் அவள் வீட்டில் காபி சாப்பிட விரும்புகிறாள் என்பதில் ஏழை வேலையாள் காட்டும் மகிழ்வு அது என்று அவன் நினைத்துக் கொண்டான்..

"உள்ளே வான்னு கூப்பிட மாட்டியா..?"

"வாங்க சின்னய்யா.. வாங்க.."

அவள் சந்தோசத்துடன் துள்ளிக் குதித்து மான் போல படிகளில் பாதம் படாமல் தாவியேறினாள்.. அவளது சந்தோசத்தை ரசித்தபடி படியேறி தோட்ட வீட்டுக்குள் போனான் சங்கர்.. அதற்கு முன்னால் அவன் சிறுவனாக இருந்த போது ஓரிரு முறை அந்த வீட்டுக்குள் வந்து போனதாக ஞாபகம்..

"உக்காருங்க சின்னய்யா.."

தாவணியின் முந்தானையைக் கொண்டு நாற்காலியைத் துடைத்து விட்டாள்.. சங்கருக்குள் நூதனமான ஓர் உணர்வு உற்பத்தியானது.. எதனாலோ அவன் கிளர்ந்தான்..

'இதில் உட்கார்ந்தா இவ தாவணி முந்தானையில உட்காருவதைப் போல இருக்காதா..?'

தயக்கத்துடன் உட்கார்ந்தவன்.. மனதில் அவளுடைய தாவணியின் முந்தானை பறந்தது.. அது அவனுடைய முகத்தில் படிந்ததைப் போல அவனுக்குள் சிலிர்ப்பு வந்தது..

'என்னடா இது.. நான் எதுக்காக வந்தேன்..?'

பவானி அன்று ஹாஸ்டலுக்குப் போகப் போகிறாள் என்று கௌரி சொல்லியிருந்தாள்.. அவள் பரிட்சைகளை எழுதி முடித்து வருவதற்குள் சங்கர் வினோத்துடன் சென்னைக்குக் கிளம்பிச் சென்றிருப்பான்.. அவள் போவதற்குள் அவளைப் பார்த்து ஓரிரு வார்த்தைகள் இணக்கமாகப் பேசிவிட வேண்டும் என்ற உந்துதல் அவன் மனதில் வந்தது.. அவளைத் தகாத வார்த்தைகள் பேசிப் புண்படுத்திவிட்ட குற்ற உணர்வு அவனுக்குள் சுழன்று கொண்டிருந்தது.. மன்னிப்புக் கேட்க வேண்டுமென்று அவசியமில்லை.. மலர்ந்த முகத்துடன் ஒரு வார்த்தை பேசினால் போதும்.. பவானி முகம் மலர்ந்து விடுவாள்.. அவள் எளிமையான குணம் கொண்டவள்.. மன்னித்து மறக்கும் மனமுள்ளவள்.. அதனால்தான் அந்த அதிகாலையில் சங்கர் அவளைப் பார்க்க வந்தான்..

பவானியின் விழிகளில் தெரிந்த பிரமிப்பு அகலவில்லை.. கந்தர்வன் அவளுடைய வீடு தேடி வந்து விட்டதைப் போலப் பருகு, பருகு எனப் பார்த்துக் கொண்டிருந்தாள்.. அவளுடைய ஆவலைக் கண்டு சங்கருக்குள் ஓர் கர்வம் எழுந்தது.. இந்த ஆவலை வினோத்திடம் அவள் காண்பிக்கவில்லை என்பதில் ஓர் திருப்தியும் வந்தது..

சரளாவிடம் இதைச் சொன்னால், நீ அன்னவாசலின் ஜமின்தார்.. கோடிஸ்வரன்.. சென்னையில் இருக்கிறாய்.. வெளி நாட்டில் படித்திருக்கிறாய்.. உன்னைக் கண்டால் அவள் பல்லைக் காட்ட மாட்டாளா என்று கேட்டு வைப்பாள்.. அவள் சொல்லும் அத்தனை தகுதிகளும் வினோத்திடமும் இருக்கின்றன.. கூடுதலாக அவன் வெளிநாட்டில்

வசிப்பவன்.. வீட்டுக்கு ஒற்றைப் பிள்ளை.. சரளாவைப் போன்ற நாத்தனார் அங்கு இல்லை.. வினோத்தின் பெற்றோர் சென்னையில் வசிப்பவர்கள்.. சிவனேசனைப் போல ஜமின்தார் தோரணையைக் காட்டாதவர்கள் என்று எடுத்துச் சொல்ல முடியாது.. அப்படியென்றால் நீ வினோத்திடம் பவானி பல்லைக் காட்டவில்லை என்று வருத்தப்படுகிறாயா..? என்று சண்டைக்கு வந்து விடுவாள்..

'கமகம' வென்ற காபியின் நறுமணம் அவளது நாசிகளில் நுழைந்தது.. சங்கர் சிந்தனை கலைந்து எதிரே பார்த்தான்.. பவானி காபியுடன் பரவசமாக நின்றிருந்தாள்..

"அதுக்குள்ளே காபி போட்டுட்டியா..? குட்.."

சங்கரின் பாராட்டுதலில் வெட்கத்துடன் முகம் மலர்ந்தாள்.. காபி தம்ளரை அவனது விரல் மீது விரல் பட்டு விடாமல் கொடுத்தாள்.. அவள்மீது அவனுக்குள் மரியாதை வந்தது.. காபியைப் பருகினான்..

"செம டேஸ்ட்.." உண்மையைச் சொன்னான்..

காபியின் ருசி அத்தகையதாக இருந்தது.. பவானியின் கண்களில் கண்ணீர் வந்து விட்டது.. இமைகளைச் சிமிட்டி அதை அடக்க முயன்றாள்..

"ஈஸி பவானி.." பரிவுடன் சொன்னான் சங்கர்..

"இப்படி உட்கார்.."

"இருக்கட்டும் சின்னய்யா.."

"இது உன் வீடுதானே.. இங்கே உட்கார என்ன தயக்கம்..?"

"இது நாங்க குடியிருக்கும் வீடு சின்னய்யா.. உங்களுக்குச் சொந்தமான வீடு.."

"இப்போக் குடியிருக்கிறாய்தானே.. உட்கார்.."

அவள் உட்காரவில்லை.. உன்னுடன் சரிசமமாக நான் உட்காருவதா என்ற பாவனையுடன் அவனது முகம் பார்த்தபடி அசையாமல் நின்றாள்.. சங்கர் சாய்ந்து அமர்ந்து

கால் மேல் கால் போட்டுக் கொண்டான்.. பவானியின் விழிகள் மின்னின.. அவள் அவனை ரசிப்பதைப் புரிந்து கொண்டான் சங்கர்.. வினோத்தை ஏறெடுத்தும் பார்க்காதவள் அவனை ரசித்துப் பார்ப்பது மகிழ்ச்சியாக இருந்தாலும் அவளுடைய உணர்வுகளை புரிந்து கொண்டதைக் காண்பித்து விடக்கூடாது என்பதில் கவனமாக இருந்தான்..

'இவள் பாவம்.. ஏழைப்பெண்.. சின்ன வயது.. தடுமாறுகிறாள்.. இந்த தடுமாற்றத்திற்கு எதிர்காலமில்லை என்று தெரியாத பேதை.. இவளது இந்தத் தடுமாற்றத்தை நான் பயன் படுத்திக் கொள்வது மகா பாவம்..'

பவானி அவனைப் பார்ப்பதும், அவன் பார்த்தால் வேறு திசையில் பார்ப்பதுமாக இருந்தாள்.. அவனது விரல்களுக்குள் சிக்கியிருந்த காபித் தம்ளர் அந்த மணித்துளிகளை அற்புதமானவையாக மாற்றிக் கொண்டிருந்தது.. அவளது குடிழில் அவன் பாதம் பதித்து விட்டான்.. அவள் கலந்து கொடுத்த காபியை ரசித்துப் பருகுகிறான்..

'இது போதும் தெய்வமே..' அவள் மனம் தெய்வத்திடம் மண்டியிட்டது..

எதிர்காலமில்லாத ஓர் பிரியத்தை இத்தனை வருடங்களாக நெஞ்சில் சுமந்திருந்தாள்.. உத்திரவாதமில்லாத ஓர் சொந்தத்தை மனதில் தேக்கி அவன் முகம் பார்க்கும் நாளுக்காக காத்திருந்தாள்.. அவனிடம் பேச வேண்டுமென்று சில சொற்களை நீண்ட காலமாக நெஞ்சில் சுமந்திருந்தாள்.. ஒவ்வொரு நாளும் அரண்மனையில் இருக்கும் அவனது அறையைச் சுத்தம் செய்து அவனது வரவுக்காக வழி பார்த்திருந்தாள்..

அவளுடைய காத்திருத்தல் பலித்தது.. அவன் வெளிநாட்டிலிருந்து வந்து விட்டான்.. அவனுடைய முகத்தைக் காட்டி விட்டான்.. இதோ.. அவள் எதிர்பார்க்காத தருணத்தை அவளுக்குக் கொடுத்து அவள் வீட்டில் அமர்ந்து.. அவள் கலந்து கொடுத்த காபியைக் குடித்துக்

கொண்டிருக்கிறான்.. திட்டமிடப்படாத நற்செயல்களை அவளுக்கு அமைத்துக் கொடுத்து விட்டுக் கண்சிமிட்டி அவளது சந்தோசத்தை ரசிக்கிறது கடவுளின் கருணையுள்ளம்.

தன் சிறகுகளை விரித்துக் கொட்டும் மழையில் நனைந்து குதூகலித்துக் கொண்டிருந்தது அந்த சாதகப்பறவை..

"பவானி.." மிருதுவாக அழைத்தான் சங்கர்..

"சின்னய்யா..?" இமைகள் படபடக்க அவள் தடுமாறினாள்..

"இன்றைக்கு ஹாஸ்டலுக்குப் போகிறாயா..? அம்மா சொன்னாங்க.."

"ஆமாம் சின்னய்யா.."

அவனைப் பார்க்க முடியாதே என்ற ஏக்கம் கண்களில் வழிய சோகத்துடன் சொன்னாள் பவானி..

"நானும் இன்றைக்கே கிளம்பி விடுவேன்.." அவளது மனதைப் புரிந்து கொண்ட சங்கர் சொன்னான்..

"அப்படியா..?" அவளது விழிகளில் சோகம் அகன்றது..

அவனில்லாத அரண்மனையில் அவள் ஏன் இருக்கப் போகிறாள்..? அவளது முகத்தையே பார்த்துக் கொண்டிருந்த சங்கரின் மனம் கசிந்தது.. அவள் மனதில் இப்படியொரு ஆசை இருக்கிறதா..? நிச்சயமாக ஜமின்தார் என்பதால் அந்த ஆசை வந்திருக்காது.. பவானியிடமும் குமரகுருவிடமும் அவன் பேச மாட்டான்.. அவர்கள் இருக்கும் திசைப்பக்கம் திரும்பிக்கூடப் பார்க்க மாட்டான்.. ஆனாலும் அவர்கள் இருவரும் நேர்மையானவர்கள்.. பண்பான நடத்தையுள்ளவர்கள் என்ற அபிப்ராயம் அவனுக்கு இருந்தது..

உண்மையில் சங்கர் அன்று சென்னைக்கு கிளம்புவதாக இல்லை.. அதைப்பற்றி வினோத் பேசாமல் அவன் பேசுவது நாகரிகமாக இருக்காதே.. வினோத் இன்னும் அவனுடைய முடிவைச் சொல்லவில்லை.. சென்னைக்குக்

கிளம்புவதைப் பற்றிய எண்ணமே இல்லாதவனைப் போல நடந்து கொண்டான்..

சங்கர் அரண்மனையில் இருக்கும் போது தான் மட்டும் ஹாஸ்டலில் இருப்பதா என்று பவானி ஏக்கம் கொள்வாள்.. அவனைப் பற்றியே நினைத்துக் கொண்டிருப்பாள்.. அவளுடைய படிப்பு பாதிக்கப்பட்டு விடும் என்பதினால்தான் அவன் அப்படியொரு பொய்யைச் சொன்னான்.. அவன் அவளுக்குத் துணையாக முடியாது.. படிப்பு மட்டுமே காலத்துக்கும் அவளுக்குத் துணை நிற்கும் என்ற இரக்கம் அவனுக்கு..

"நான் கோபத்தில் பேசியதை மனதில் வைத்துக்காதே.."

"அதையெல்லாம் நான் அப்பவே மறந்துட்டேன் சின்னய்யா.."

"மறந்து விட்டாயா..? மறக்கிறதைப் போலவா நான் பேசினேன்..?"

"பேசினது யார் சின்னய்யா..? நீங்களாச்சே.."

'இவ்வளவு பிரியத்தை என்மீது வைக்காதே பெண்ணே..! நான் உனக்கு எட்டாக்கனி..! என் பாதை வேறு.. உன் பாதை வேறு..!'

சங்கர் பெருமூச்சுடன் எழுந்து கொண்டான்.. வாசல் வரை வந்த பவானியைத் திரும்பிப் பார்த்தான்.. அவளது விழிகளின் மின்னலில், தடுமாற்றத்தில் அவனது மனம் கனத்தது..

"படி பவானி.. படிப்பு மட்டும்தான் உன்னைக் காப்பாற்றும்.."

கரகரத்த குரலில் சொல்லி விட்டுத் திரும்பிப் பார்க்காமல் வேகமாகப் போய் விட்டான் சங்கர்.. அவனது மனம் தெரியாத பவானி அவனைப் பார்த்தபடி நின்றிருந்தாள்..

"என்ன சொல்கிறீங்க பெரியப்பா.. பவானியை வினோத் பெண் கேட்டுச்சா..?" அதிர்ந்து போனாள் கௌரி..

இது நடக்கும் என்று அவள் எதிர்பார்த்ததுதான்.. நடக்க விடாமல் தடுக்கத்தானே பவானியை ஹாஸ்டலுக்கு அனுப்பி வைத்தாள்..? வினோத்தின் கண்பார்வையில் படாமல் பவானியை பிரித்து அனுப்பி விட்டால் வினோத் அவளைப் பற்றிய நினைவை மறந்து விடுவான் என்று நினைத்தாளே.. அவன் என்னவென்றால் குமரகுருவைப் பார்த்து பவானியை திருமணம் செய்து கொள்ள விரும்புவதாகச் சொல்லியிருக்கிறானே..

இதன் பின்விளைவுகள் என்னவாக இருக்கக்கூடும் என்பதை அவளும் குமரகுருவும் உணர்ந்திருந்தார்கள்.. பூகம்பம் வெடித்து விடும்.. சரளாவைப் பெண் பார்க்க வந்த மாப்பிள்ளை மனம் மாறிப் பவானியைப் பெண் கேட்டிருக்கிறான் என்பது மட்டும் சிவனேசனுக்குத் தெரிய வந்தால் ருத்ர தாண்டவம் ஆடி விடுவார்.. கௌரியை மன்னிக்கவே மாட்டார்.. தான் பெற்ற மகளுக்கு எதிராக கௌரி செயல்பட்டு விட்டாள் என்று தள்ளி வைத்து விடுவார்.. குமரகுருவையும் பவானியையும் அன்னவாசலை விட்டுத் துரத்தி விடுவார்..

வினோத் குமரகுருவைத் தாங்கத் தயாராக இருந்தாலும் குமரகுரு பேத்தியின் நிழலில் வாழ்வதை விரும்ப மாட்டார்.. தன்மானம் மிக்க வயோதிகர் அவர்.. அன்னவாசல் அரண்மனைத் தோட்டத்தில் ஒரு வேலையாளாக தங்கியிருப்பவர்.. உழைத்துச் சாப்பிடுபவர்.. பவானியைப் பற்றிச் சொல்லவே வேண்டாம்.. வினோத்தை அவள் திரும்பிக்கூடப் பார்க்க மாட்டாள்.. அத்துடன் சரளாவைக் கொடுக்க விரும்பும் மாப்பிள்ளைக்குத் தன் பேத்தியை குமரகுரு ஒருநாளும் திருமணம் செய்து கொடுக்க மாட்டார்..

நடக்காத ஒன்றிற்காக ஏன் பிரளயத்தை எதிர்கொள்ள வேண்டும் என்று யோசித்தாள் கௌரி..

"எனக்கு இதில் இஷ்டமில்லைம்மா.. அந்தத் தம்பி அடிக்கடி வந்து என்னிடம் பேசினாரு.. சொந்தம்ன்னு சொன்னாரு.. வீட்டுக்கு வந்து காபியெல்லாம் குடிச்சாரு.. ஏழை, பணக்காரர் வித்தியாசமில்லாம பேசுதேன்னு ஒரு பிரியம்.. எங்களையும் சொந்தபந்தம்ன்னு சொல்லிக்குதேன்னு ஒரு சந்தோசம்.. அந்தத் தம்பிகிட்ட நானும் பாசமாப் பேசிப் பழகினேன்ம்மா.. அவுக மனசில இப்படி ஒரு எண்ணமிருந்துச்சுன்னு சத்தியமா எனக்குத் தெரியாதும்மா.."

"உங்களைப் பற்றி எனக்குத் தெரியாதா பெரியப்பா..? நீங்க வருத்தப் பட்டுக்க வேணாம்.."

"எப்படிம்மா வருத்தப்படாம இருக்கிறது..? நம்ம சரளாவைப் பெண் பார்க்க வந்த மாப்பிள்ளை பவானியைப் பெண் கேட்டா சந்தோசப்பட முடியுமா..?"

இதுதான் குமரகுரு.. வாராது வந்த வாழ்வு பேத்திக்கு வாய்த்திருக்கிறது என்று மகிழ்ந்துவிட மாட்டார்.. இது தர்மமல்ல என்று தள்ளி நிற்பார்.. பவானி தாத்தா சொல்லும் வார்த்தையை மீறமாட்டாள்..

கெட்டாலும் மேன்மக்கள் மேன்மக்களே.. இதை சிவனேசனுக்கு எவர் சொல்வது..?

"விடுங்க பெரியப்பா.. இந்த விசயம் நமக்குள்ளேயே இருக்கட்டும்.. வேறு யாருக்கும் தெரிய வேண்டாம்.."

"நான் சொல்ல மாட்டேன்ம்மா.. ஏன்னா, பவானியை அந்தத் தம்பிக்குக் கட்டிக் கொடுக்கிற எண்ணமே எனக்கு இல்லை.. நீயும் சொல்ல மாட்டா.. ஆனா அந்த வினோத் தம்பி அப்படியிருக்கனுமே.. அவரு சொல்லிட்டாருன்னா என்னம்மா பண்றது..?"

"வினோத் கேட்டதுக்கு நீங்க என்ன பதிலைச் சொன்னீங்க பெரியப்பா..?"

"எங்கேம்மா அவரு வாயைத் தொறக்க விட்டாரு..? காலையிலே நான் தோட்டத்தைச் சுற்றி வந்துக்கிட்டு இருக்கிறப்ப திடிர்ன்னு எதிரே வந்து நின்னாரு.."

அப்படித்தான் வந்து நின்றான் வினோத்.. குமரகுருவின் வரவிற்காக மரத்தின் மறைவில் காத்திருந்தவன் சரேலென வெளி வந்ததில் ஓர்நொடி பயந்து போனவராக பின்வாங்கி விட்டார் குமரகுரு..

"நான்தான் தாத்தா.. வினோத்.."

"ஆத்தி.. ஒரு நிமிசம் பயந்தே போயிட்டேன் தம்பி.. இப்புடியா திடிர்ன்னு வருவீங்க..?"

"சங்கருக்குத் தெரியாம வந்திருக்கிறேன் தாத்தா.. அவன் கூடவே இருந்தான்.. எனக்குத் தனியா உங்களிடம் பேச வேண்டியிருக்கு.."

இப்படிச் சொன்னவனைக் கூர்ந்து பார்த்தார் குமரகுரு.. எதுவோ சரியில்லை என்று அவர் மனதில் மணியடித்தது..

"சின்னய்யாவுக்குத் தெரியாம என்கிட்டப் பேச என்ன இருக்கு தம்பி..? இந்த பதினொரு வருசமா எங்களுக்கு அடைக்கலம் கொடுத்து ஆதரிச்சுக்கிட்டு இருக்கிற அன்னவாசல் ஜமினுக்குத் தெரியாம பேச வேண்டியதில்லை தம்பி.. நாங்க அவங்க நிழலில் வாழ்கிறவங்க.. எந்த நன்றியை வேணுமானாலும் மறந்திரலாம்.. செய்நன்றியை மட்டும் மறக்கவே கூடாதுன்னு வள்ளுவர் எழுதி வைச்சிருக்காரு தம்பி.."

"அவங்க ஒன்றும் சும்மா ஆதரிக்கலை தாத்தா.. நீங்களும் பவானியும் வேலை செய்கிறீங்க.. அவங்க சம்பளம் கொடுத்து இந்த குவார்ட்டர்ஸில் குடியிருக்க வைச்சிருக்காங்க.."

"குவார்ட்டர்ஸா..?"

தோட்டவீட்டைத் திரும்பிப் பார்த்த குமரகுரு..

"இது வீடு தம்பி.." என்றார்..

"இருக்கட்டும் தாத்தா.. ப்ரீயா எதையும் செய்து விடவில்லை.. அதை நீங்க புரிந்துக்கங்க.."

"எனக்குப் புரியவே வேணாம்.. நதி போகிற போக்கில ஓடம் போகிறதைப் போல விதி காட்டுற பாதையிலே நானும் என் பேத்தியும் போய்க்கிட்டு இருக்கோம்.. விட்டு விடுங்க.."

"காலம் மாறிப் போச்சு தாத்தா.. உங்க வாழ்க்கை இப்படியே போய்விடக் கூடாது.."

"எங்க வாழ்க்கையை நாங்க பார்த்துக்கிறோம்.. உங்களுக்கு எதுக்கு அந்தக் கவலை..? அன்னவாசல் ஜமினுக்கு விருந்தாளியா வந்திருக்கிறீங்க.. ஊரைச் சுற்றிப் பார்த்துட்டு ஊருக்குக் கிளம்பிப் போங்க தம்பி.. அதுதான் எல்லோருக்கும் நல்லது.."

"உங்க பேத்திக்கு நல்லது நடந்தா அதைத் தடுப்பீங்களா தாத்தா..?"

ஆழ்ந்த குரலில் வினோத் கேட்டான்.. குமரகுரு திகைத்து விட்டார்..

"என்ன தம்பி சொல்கிறீங்க..?"

"ஆமாம் தாத்தா.. நான் உங்க பேத்தி பவானியை மேரேஜ் பண்ணிக்க விருப்பப்படறேன்.. என் பேரண்ட்ஸ் சென்னையிலயும் வெளிநாட்டிலேயும் மாறி மாறி குடியிருக்கிறவங்க.. நான் எந்தப் பெண்ணைக் கைகாட்டினாலும் ஓகே சொல்லிருவாங்க.. நீங்க ஓகே சொன்னா போதும்.. இம்மீடியட்டா என் பேரண்ட்ஸை வரச் சொல்றேன்.. 'மேரேஜ் டே'யை பிக்ஸ் பண்ணி விடலாம்.. நெக்ஸ்ட் முகூர்த்தத்தில் மேரேஜை நடத்தி விடலாம்.. அப்புறம் பாருங்க.. உங்களையும் பவானியையும் அடிமைகளா நினைக்கும் இந்த அன்னவாசல் அரண்மனைக்காரங்க, உங்களைப் பார்த்து சல்யூட் வைப்பாங்க.."

அவன் பேசப்பேச கண்களைக் கட்டிக் காட்டுக்குள் விட்டதைப் போல இருந்தது குமரகுருவுக்கு.. அவர் மயக்கநிலைக்கே போய் விட்டாள்..

"வினோத்.." சங்கர் கூப்பிடும் சப்தம் கேட்டது..

"பார்த்தீங்களா.. ஒரு செகண்ட் தனியா விட மாட்டேங்கிறான்.. கூடவே இருந்து காவல் காக்கிறான்.. நான் இப்போப் போகிறேன் தாத்தா.. ஈவினிங் வர்றேன்.. நீங்க உங்க சம்மதத்தைச் சொல்லுங்க.. நைட்டே நான் என் பேரண்ட்ஸீக்கு போன் பண்ணி வரச் சொல்றேன்.."

அவர் மறுக்கவே மாட்டார் என்ற நிச்சயத்துடன் அவன் விரைந்து விட்டான்.. அதிர்ச்சியிலிருந்து மீண்டு தன்னுணர்வுக்கு வந்த குமரகுரு பதட்டத்துடன் கௌரியைத் தேடி வந்து விட்டார்..

"சரி பெரியப்பா.. சாயந்திரமா வினோத் உங்களிடம் பேச வர்றப்ப இப்படிச் சொல்லுங்க.."

"எப்புடிம்மா..?"

கௌரி சொல்லிக் கொடுத்தாள்.. அதன்படி குமரகுரு வினோத்திடம் ஒரு வார்த்தைகூட மாறாமல் ஒப்பித்து விட்டார்..

"என்ன தாத்தா.. டாடி, மம்மிக்கு போன் பண்ணி விடவா..?"

"பொறுங்க தம்பி.. நீங்க சொன்னதை பவானியிடம் போனில் சொன்னேன்.."

"அவங்க சந்தோசப்பட்டாங்களா..?"

"அதுதான் இல்லை தம்பி.. பவானிக்கு இப்போ பத்தொம்பது வயசுதான் ஆகுது.. மொத வருசப் படிப்பைத்தான் முடிச்சிருக்கு.. கல்யாணம் பண்ணனும்னா இருபத்தியொரு வயசாகனும்னு சொல்லுது.."

"டிவெண்டி ஒன் ஏஜ் ஜெண்ட்ஸீக்குத்தான் தாத்தா.. லேடிஸ்க்கு எய்ட்டின் கம்ப்ளீட் ஆகியிருந்தாப் போதுமே.."

"என்னவோ தம்பி.. அது அப்படிச் சொல்லிருச்சு.."

"நான் வேண்டும்னா பவானியிடம் பேசிப் பார்க்கவா..?"

"அதுக்குப் பிடிக்காதே தம்பி.."

உன்னைப் பிடிக்காது என்று மறைமுகமாக குமரகுரு சொன்னார்.. வினோத் அதைப் புரிந்து கொள்ளாமல்..

"பவானிக்கு பிடிக்காத எதையும் நான் செய்ய மாட்டேன் தாத்தா.. போர்ஸ் பண்ண மாட்டேன்.. ஐ'ம் வெயிட்டிங்க.. ஃபார் ஹெர்.." என்று சொல்லி விட்டான்..

குமரகுரு நடந்ததைக் கௌரியிடம் சொன்னார்.. அவள் யோசனையுடன் கேட்டு விட்டு..

"இப்போதைக்கு இந்தப் பேச்சைத் தள்ளிப் போட்டாச்சில்ல.. நாளைக்கு நடக்கிறதை அப்பப் பார்த்துக்கலாம்..." என்றாள்..

"ரெண்டு வருசத்தில வினோத் தம்பியோட மனசு மாறிரும்மா.."

"இல்லை பெரியப்பா.." தீர்க்கமான முகத்துடன் தலையாட்டி மறுத்தாள் கௌரி..

"அவன் ரொம்ப நல்ல பையன்.. மாறவே மாட்டான்.."

இப்படிப்பட்ட பையனுக்கு பவானியைத் திருமணம் செய்து கொடுக்க முடியவில்லையே என்ற வருத்தம் கௌரியின் மனதில் வந்தது.. குமரகுருவின் மனதில் வரவில்லை..

இதுபோன்ற சில மனித ஜீவன்கள் இருப்பதினால்தான் அவ்வபோது, ஆங்காங்கே மழை பொழிகிறது..

## 19

"வினோத் என்ன சொன்னான் சங்கர்..?"

கவலையுடன் வினவினார் சிவனேசன்.. சரளாவின் விழிகளில் தெரியும் ஏக்கமும் எதிர்பார்ப்பும் அவரைப் பாதித்தன.. இந்த அளவுக்கு அவள் வினோத்தின் மீது மனதை வைப்பாள் என்று அவர் நினைத்தும் பார்க்கவில்லை.. ஊர், உலகத்தில் பார்ப்பதைப் போலதான்

அவரும் மாப்பிள்ளை பார்த்தார்.. பார்க்கும் முதல் மாப்பிள்ளையையே திருமணம் செய்து கொள்ள வேண்டும் என்று அவரது மகள் அடம் பிடிப்பாள் என்று கனவா கண்டார்..?

'கௌரி சொன்னதைக் கேட்டிருக்கனுமோ..'

அவரது மனம் சஞ்சலப்பட்டது.. அன்னவாசல் ஜமின்தாரின் மகளுக்கு மாப்பிள்ளையா கிடைக்காது..? வினோத்தை விட அழகானவனாக, படித்தவனாக, கோடிஸ்வரனாக மாப்பிள்ளைகளை வரிசை கட்டி நிற்க வைத்து... மகளின் கைகளில் சுயம்வர மாலையைக் கொடுத்து.. உனக்குப் பிடித்த மாப்பிள்ளையின் கழுத்தில் மாலையைப் போடு என்று சொல்லும் அளவிற்கு வாழ்ந்து கொண்டிருப்பவரல்லவா அவர்.. இப்படி ஒருவனை மட்டும் குறி வைத்து, அவனை வீட்டுக்கே வர வைத்து, மகளின் மனதில் ஆசையை வளர்த்து விட்டது அவருடைய பெருமைக்கும், தகுதிக்கும் அழகா..?

"இப்போதைக்கு அவனுடைய மேரேஜைப் பத்தி எந்த டிசிசனும் எடுக்க மாட்டானாம் அப்பா.. புதிதாய் ஒரு பிரான்ச்சை லண்டனில் ஓப்பன் பண்ணியிருக்கானாம்.. அதில் கான்சென்ட்ரேட் பண்ணனுமாம்.. டூ இயர்ஸ் கழித்துத்தான் மேரேஜைப் பற்றி யோசிப்பானாம்.."

இதை என்ன பதிலாய் எடுத்துக் கொள்வது..? சரளாவுக்கு இருபத்தியொரு வயது முடியப் போகிறது.. அன்னவாசல் ஜமின்தாரின் மகள் இருபத்தி ஐந்து வயது வரை திருமணமாகாமல் இருப்பதா..? சுற்று வட்டார கிராமங்களில் பேசிவிட மாட்டார்களா..? அவர் ஒன்றும் நகரத்தில் வசிக்கவில்லையே.. அன்னவாசலின் ஜமின்தார் என்ற பெருமைக்காக கிராமத்தில் அல்லவா ஆட்சி செய்து கொண்டிருக்கிறார்..

"நம்ம புள்ளைய தட்டிக் கழிக்கனும்னு வேணும்னே காரணம் சொல்றானோ..?"

"தெரியலைப்பா.. பட்.. அவன் லண்டனில் புதிதா ஒரு பிரான்ச் ஓப்பன் பண்ணியிருப்பது என்னவோ

உண்மைதான்.."

அறைக்கு வெளியே கொழுசு சப்தம் கேட்டது.. சரளா அங்கிருக்கிறாள் என்பதை புரிந்து கொண்ட தந்தையுடம் மகனும் பேச்சை நிறுத்தி விட்டு ஒருவர் முகத்தை ஒருவர் பார்த்தார்கள்.. பலமாக தேம்பியழும் ஓசை கேட்டது.. இருவரும் பதறிப் போய் அறை வாசலுக்கு ஓடினார்கள்.. அங்கே வாயைக் கைகளால் மூடியபடி அழுகையை அடக்கப் போராடிக் கொண்டிருந்தாள் சரளா.. தங்கையை அந்த நிலையில் பார்த்திராத சங்கர் அதிர்ச்சியானான்.. சரளா அழுகிறாளா..? அவள் மற்றவர்களை அழ வைத்து வேடிக்கைப் பார்ப்பவள்.. அதில் சந்தோசம் கொள்பவள்.. அவளா அழுகிறாள்..?

"சரளா.."

"மகளே.."

சிவனேசன் பதறிப் போய் கைகளை விரிக்க, தந்தையின் மார்பில் சாய்ந்து கதறினாள் சரளா..

"நான் தோற்றுப் போயிட்டேன்ப்பா.. ஒரு வேலைக்காரியிடம் தோற்றுப் போயிட்டேன்.. உன் பிரண்டுக்கு என்னைப் பிடிக்கலை அண்ணா.. அந்த வேலைக்காரியைத்தான் பிடிச்சிருக்கு.."

"உளராதே.." சிவனேசன் மகளை அதட்டினார்..

அது உண்மைதான் என்பதில் மௌனமானான் சங்கர்.. வினோத்துக்கு பவானியைத்தான் பிடித்திருக்கிறது என்பது கசப்பான உண்மைதானே..

"உளரல் இல்லை அப்பா.. உண்மைதான்.. முந்தாநாள் அண்ணனேட பிரண்டும், நம்ம கணக்குப் பிள்ளையும் தோட்டத்தில் பேசிக்கிட்டு இருந்ததை என் காதாலே கேட்டேன்ப்பா.."

"இது என்னடா சங்கர், புதுக்கதையா இருக்கு.. உனக்கு இதைப்பத்தி எதுவும் தெரியாதா..?"

"தெரியாதேப்பா.."

வினோத் சங்கரிடம் மறைத்து விட்டான்.. குமரகுருவிடம் நடந்த பேச்சுவார்த்தையைப் பற்றி சங்கரிடம் எதுவும் சொல்லவில்லை.. திருமணத்தை இரண்டு வருடங்கள் தள்ளிப் போட்டிருப்பதாக மட்டும் சொன்னான்.. பவானியை அவன் விரும்புவதைப் பற்றி சங்கரிடம் சொன்னால் அன்னவாசலுக்கு வினோத் வந்து போக முடியாது.. சங்கரின் தோட்டத்து வீட்டில்தான் பவானி குடியிருக்கிறாள்.. அவளும் அவளுடைய தாத்தாவும் சங்கரின் குடும்பத்தின் கட்டுப்பாட்டில் இருக்கிறார்கள்..

சிவனேசன் தன் மகளின் திருமணத்தை இரண்டு வருடங்கள் தள்ளிப் போட மாட்டார்.. என்று வினோத் நினைத்தான்.. கௌரியும் அதைக் கணக்கிட்டுத்தான் இரண்டு வருடங்கள் போகட்டும் என்று குமரகுருவை சொல்லச் சொன்னாள்..

சரளாவுக்கு என்ன மாப்பிள்ளையா கிடைக்காது..? சிவனேசன் வினோத்தை விட உயர்ந்த இடத்தில் இருக்கும் மாப்பிள்ளையைத் தேடிப் பிடித்து மகளுக்குத் திருமணம் செய்து வைத்து விடுவார்.. விரும்பாத மாப்பிள்ளையை ஏன் கௌரியின் மகள் திருமணம் செய்து கொள்ள வேண்டும்..? சரளாவின் திருமணம் நடந்து விட்டால், சிவனேசன் வினோத்தை அன்னவாசல் ஜமின் அரண்மனைக்குள் அனுமதிக்க மாட்டார்.. வீட்டுக்கு வெளியே பவானியைச் சந்தித்து திருமணத்திற்கு சம்மதம் வாங்க வினோத்தால் முடியாது... குமரகுருவும், பவானியும் சரளாவுக்குப் பார்க்கப் பட்ட மாப்பிள்ளை என்ற ஒரே காரணத்துக்காகவே வினோத்தை நிராகரித்து விடுவார்கள்..

இதையெல்லாம் யோசித்துத்தான் கௌரி குமரகுருவிடம் இரண்டு வருடங்கள் கால அவகாசம் வேண்டும் என்று சொல்லச் சொன்னாள்.. அதை மறைந்திருந்து சரளா கேட்டு வைப்பாள் என்பதை யாருமே எதிர்பார்க்கவில்லை..

"வினோத் குமரகுரு தாத்தாவிடம் பேசினானா..?" புருவங்கள் முடிச்சிடக் கேட்டான் சங்கர்..

"அவர்தான் நம் வீட்டு விருந்தாளிங்கிறதையே மறந்துட்டு தோட்ட வீட்டுக்கு விருந்தாளியா வந்திருக்கிறதைப் போல அங்கேயே சுத்திச்சுத்தி வந்தாரே.." சரளா விம்மினாள்..

"நானும் கவனிச்சேண்டா சங்கர்.. அவன் அப்படித்தான் நடந்துக்கிட்டான்.." சிவனேசன் பல்லைக் கடித்தார்..

பவானி தோட்டத்து வீட்டில் இல்லையென்று தெரிந்த மறுநாளே வினோத் சென்னைக்குக் கிளம்பிச் சென்று விட்டான்.. சங்கருக்கு அன்னவாசலில் சிலநாள் தங்க வேண்டியிருந்தது.. மூன்று வருடங்கள் கழித்துக் குடும்பத்தினரைப் பார்க்க வந்திருக்கிறான்.. உடனே கிளம்பினால் கௌரி தாங்கிக் கொள்ள மாட்டாள்.. கண்ணீர்விட ஆரம்பித்து விடுவாள்..

சங்கர் வெளியே பார்க்கத்தான் தந்தை சொல் மிக்க மந்திரமில்லை என்பதைப் போலத் தெரிவான்.. உண்மையில் அவன் தாயிற் சிறந்த கோவிலில்லை என்று அம்மாவைக் கொண்டாடுபவன்.. அம்மாபிள்ளை.. கௌரியை நேசிக்கும் மகன்..

"அவன் காரைக் கூட எடுத்துக்கிட்டு வரலைப்பா.. என் காரைக் கொடுக்கிறேன்னு சொன்னா வேணாம்ன்னு சொல்லிட்டு கால் டாக்ஸியப் புக் பண்ணிக் கிளம்பிப் போயிட்டான்.. அவசர வேலையா இருக்கும்ன்னு பேசாம இருந்துட்டேன்.."

"அவர் அவசர வேலை இருக்குங்கிறதினால சென்னைக்கு ஓடலைப்பா.. அந்த வேலைக்காரி ஹாஸ்டலுக்குப் போயிட்டாள்ல அதனால ஊருக்குக் கிளம்பிட்டார்.."

"பத்ச்.. சரளா.. கண்டபடி பேசாதே.. அவளும் பெண்தான்.. இப்படிப் பெயரைக் கட்டி விட்டா அந்தப் பெண்ணோட வாழ்க்கை பாதிக்கும்.. நாளைக்கு அவளுக்கும் ஒரு கல்யாணம் காட்சின்னு நடக்க வேணாமா..?"

"அதான் நடக்கப் போகுதே.. உங்களுக்குத் தெரியுமாப்பா.. அவர் என்ன வேணாம்ன்னு சொல்லிட்டு அந்த

வேலைக்காரியை கணக்குப்பிள்ளைகிட்டப் பெண் கேட்டிருக்கார்.."

"என்னது..?"

"இதுக்கே அதிர்ச்சியானா எப்புடிப்பா..? அந்தக் கணக்குப்பிள்ளை கெடு வைச்சிருக்கான்.. அவனோட பேத்தி ரெண்டு வருசம் ஆகட்டும்ன்னு சொல்லிட்டாளாம்.. அதுக்காகத்தான் அவரு அண்ணன்கிட்ட ரெண்டு வருசம் போகட்டும்ன்னு தட்டிக் கழிச்சிருக்காரு.. அவருக்காக ரெண்டு வருசம் நாம காத்திருக்க மாட்டோமில்ல.. வேற மாப்பிள்ளையைப் பார்த்துக் கல்யாணம் பண்ணிக் கொடுத்துடுவீங்கள்ல.. அந்தக் கணக்குத்தான் அப்பா.. அன்னவாசல் ஜமின்தாரோட செல்லமக அம்புட்டு ஈஸியாப் போயிட்டேனில்ல..?"

சரளா கதறியபடி ஓடி விட்டாள்.. சினம் கொண்ட சிங்கமாக சிவனேசன் கர்ஜித்தார்.. சங்கர் என்ன செய்வது என்று யோசித்தான்.. கௌரியிடம் செய்தி போனது.. அவள் மௌனமாக மகனை ஏறிட்டுப் பார்த்தாள்..

"பிடிக்கலைன்னு சொல்லி வேறு பெண்ணை பெண் கேட்கிற மாப்பிள்ளையை வற்புறுத்திக் கட்டிக்கிறதைவிட, விரும்பி வருகிற மாப்பிள்ளையைக் கல்யாணம் பண்ணிக்கிட்டா உன் தங்கையின் வாழ்வு சந்தோசமா இருக்குமேடா சங்கர்..?"

கௌரி சொல்வதில் உள்ள நியாயம் சங்கருக்குப் புரிந்தது.. அவன் சிவனேசனிடம் பேசினான்.. வினோத்துக்கு இணையாக அவர்களின் உறவுமுறையில் இருக்கும் மாப்பிள்ளை வீட்டாரின் பெயர்களை அவர்கள் பட்டியலிட்டார்கள்.. விடிந்ததும் அவர்களை தொடர்பு கொண்டு பேசலாம் என்று முடிவெடுத்து விட்டுப் படுக்கப் போனார்கள்.. விடிவதற்குள் அவர்கள் சரளாவை அள்ளிக்கொண்டு பக்கத்து டவுனில் இருக்கும் மருத்துவமனைக்கு ஓட வேண்டியதாகி விட்டது..

சரளா தூக்க மாத்திரைகளை விழுங்கி விட்டாள்..

# 20

"பவானி.. உன்னைப் பார்க்க உன் வீட்டிலிருந்து வந்திருக்காங்க.."

தரையில் ஒப்புறப்படுத்து.. சுற்றிலும் பாடப்புத்தகங்களைப் பரத்திப் போட்டுப் படித்துக் கொண்டிருந்த பவானி தலை நிமிர்ந்து தோழியைக் குழப்பமாகப் பார்த்தாள்..

"தாத்தாவா.. வந்திருக்காரு..?"

"நோ.. நோ.. இவர் யங் மேன்.. வெரி ஹேண்ட்சம், இப்படியொரு ரிலேட்டிவ் இருக்காருன்னு எங்களிடமெல்லாம் சொல்லவே இல்லை, பார்த்தியா..? நீ கெட்டிக்காரிடி.."

'யங் மேனா..? வெரி ஹேண்ட்சம்மா..?'

வினோத் இங்கேயும் அவளைத் தேடி வந்து விட்டானோ..

'எங்கே போனாலும் துரத்திக்கிட்டு வருவானா..? அவன் நல்லவனாவே இருக்கட்டும்.. அழகனாவே இருக்கட்டும்.. ஃபாரின்ல செட்டிலாகியிருக்கிற பணக்காரனாவே இருக்கட்டும்.. ஐ டோன்ட் கேர்.. தேவையில்லாம என் சங்கரின் கோபத்துக்கு என்னை ஆளாக்கறான்.. இவன் கண்ணில் படக் கூடாதுன்னுதான ஹாஸ்டலுக்கு ஓடி வந்தேன்..? இங்கேயும் வந்து நின்னா என்ன அர்த்தம்..? அவனைச் சும்மா விடக்கூடாது..'

கோபமாக எழுந்தாள் பவானி.. விரிந்த கூந்தலும், கசங்கிய நைட்டியுமாக இருந்தவளை ஏற இறங்கப் பார்த்த தோழி..

"இப்படியேவா போகிற..? ரெஃப்பிரஷ் ஆகி, டிரஸ் சேன்ஸ் பண்ணி, லைட்டா மேக்கப் போட்டுக்கிட்டு போ.. இந்தக் கோலத்தில் உன்னைப் பார்த்தா அவன் ஓடியே போயிடுவான்.." என்று சிரித்தாள்..

"ஓடனும்.. இல்லைன்னா ஓட வைத்துட்டுத்தான் வருவேன்."

வண்டை, வண்டையாக வாயில் வார்த்தைகளைச் சுமந்து கொண்டு அவற்றை வினோத்திடம் கொட்டிவிட

வேண்டுமென்ற வேகத்துடன் போனாள் பவானி.. இனி அவன் பவானி இருக்கும் திசைப்பக்கம் தலை வைத்துக் கூடப் படுக்கக் கூடாது.. என்ன நினைத்துக் கொண்டிருக்கிறான் அவன்..?

ஹாஸ்டலுக்கு வெளியே மரத்தடியில் முதுகைக் காட்டி நின்றிருந்தவனைச் சரிவரக் கவனிக்காமல் பொரிய ஆரம்பித்து விட்டாள் பவானி.. கோபத்தில் அவளது உடல் நடுங்கியது..

"யாருங்க நீங்க..? உங்களுக்கும் எனக்கும் என்ன சம்பந்தம்..? ஜமின் வீட்டுக்கு விருந்தாளியா வந்திருக்கீங்கன்னு பொறுமையாகப் போனா ஹாஸ்டலுக்கே தேடி வந்திருக்கிறீங்க.. என்ன நினைச்சுக்கிட்டு இருக்கீங்க..?"

பவானியின் கோபத்தைப் பொருட்படுத்தாதைப் போல அவன் அசையாமல் நின்றான்.. அதில் பவானி வெகுண்டாள்..

"நீங்க நினைக்கிறதைப் போல மத்தவங்களும் நினைக்கனும்னு அவசியமில்லை.. உங்களுக்குத்தான் நீங்க உயர்த்தி.. எனக்கு இல்லை.. படிச்சிருக்கோம்.. பணக்காரனா இருக்கோம்.. வெளிநாட்டில குடியிருக்கிறோம்ங்கிற மிதப்பில நீங்க இருக்கலாம்.. எனக்கு இதெல்லாம் பெரிதே இல்லை.. உங்க முகத்தில முழிக்கப் பிடிக்காமத்தானே ஹாஸ்டலுக்கு வந்திருக்கேன்..? இங்கேயும் வந்து நிற்கறீங்க.. ச்சே.. விலகிப் போகிற பெண்ணைத் தேடி வந்து தொந்தரவு பண்ண வெட்கமா இல்லையா..? நல்ல மாட்டுக்கு ஒரு சூடு.. அம்புட்டுத்தான் சொல்லுவேன்.. பேசாமப் போயிருங்க.. இல்லேன்னா ஊரைக் கூட்டிப் பஞ்சாயத்து வைச்சிருவேன்.. ஆமாம்.."

அவன் முகத்தைப் பார்க்க வேண்டிய அவசியமில்லை என்று திரும்பி நடக்கப் போனவளை அவன் கரம்பற்றி நிறுத்தினான்.. அதிர்ந்து போன பவானி அடிக்கக் கை

ஓங்கி விட்டாள்.. அவன் முகம் பார்த்ததும் ஓங்கிய கை அப்படியே நின்று விட்டது..

"சின்னய்யா..??!!"

அவளது விழிகள் மின்ன பரவசத்துடன் உச்சரித்ததைப் பார்த்த சங்கரின் முகம் மிருதுவானது..

"ம்ம்ம்.." அவளது கையை விட்டு விட்டான்..

தோழியின் பேச்சைக் கேட்காமல் போய் விட்டதற்காக வெகுவாக வருத்தப்பட்டாள் பவானி.. அப்படியே ஓடி வந்து விட்டாளே..

'முகம் கழுவி, டிரஸ் மாத்தி, லேசா பவுடர் பூசிக்கிட்டு வந்திருக்கலாம்.. தலைவிரி கோலமா, கசங்கின நைட்டியோட வந்து நிற்கிறேன்.. இருந்திருந்து இந்தக் கோலத்திலா சின்னய்யா என்னைப் பார்க்கனும்..?'

அவளுக்குத் தெரியவில்லை.. அந்தக் கோலத்திலும் அவள் பேரழகாக இருந்தாள் என்பது.. யட்சக் கன்னிகையாக ஒளிர்ந்தாள்.. இயற்கையான வனப்பு அவனைக் காந்தமெனக் கவர்ந்து இருந்தது.. யௌவைத்தின் பொழிவு அவனை அயர வைத்தது..

'இப்படி இவ அட்ராக்ட் பண்ற ஏன்ஜலைப் போல இருந்தா வினோத் மயங்க மாட்டானா..?' சங்கருக்குள் கேள்வி எழுந்தது..

அவன் அவளைத் தீர்க்கமாகப் பார்த்தான்.. தீட்சண்யம் மிக்க அவனது விழிகள் அவளை ஊடுறுவின.. அந்தப் பார்வையின் வேகம் தாளாமல் அவள் தடுமாறினாள்.. அவளது முகம் சிவந்தது..

"வினோத்தை உனக்குப் பிடிக்காதா..?"

அவனது கேள்வியில் வெட்கத்தில் சிவந்திருந்த அவளது முகத்தில் கோபச் சிவப்பு வந்தது.. அரிதாக அவளுக்குக் கிடைத்திருக்கும் அந்த பொக்கிச தருணத்தில் வினோத்தைப் பற்றிய பேச்சு ஊடே வருவதை அவள் விரும்பவில்லை..

"அவரை ஏன் எனக்குப் பிடிக்கனும்..?" படபடத்தாள்..

"பட்.. அவனுக்கு உன்னைப் பிடிச்சிருக்கே.." நிதானமாகச் சொன்னான் சங்கர்..

"நீங்களா எதையும் சொல்லாதீங்க சின்னய்யா.. எனக்கு அவரைப் பற்றிப் பேசவே பிடிக்கலை.."

"அதுதான் யார் வந்திருக்கிறதுன்னு கூடத் தெரியாம நீ படபடன்னு பொரிஞ்சு தள்ளினதில இருந்தே தெரியுதே.."

சங்கர் சிரிக்காமல் பேசினான்.. கோபமாகப் பேசவில்லை.. அவன் முகத்தில் ஓர் இறுக்கம் தெரிந்தது.. எதனால் அந்த இறுக்கம் வந்திருக்கக்கூடும் என்று பவானி யோசிக்கவில்லை.. சங்கரின்

முகம் இறுக்கமாகத்தான் இருக்கும்.. கண்டிப்பும் கறாருமாகத் தோரணiயாகப் பேசுவான்..

'சின்னய்யா எதுக்காக ஹாஸ்டலுக்கே தேடி வந்திருக்காரு..?'

பவானியின் மனதில் இந்தக் கேள்விதான் குடைந்தது.. ஒருவேளை குமரகுருவுக்கு உடல்நிலை சரியில்லையோ..

"தாத்தாவுக்கு என்ன ஆச்சு..?" அவள் பதறினாள்..

"அவருக்கென்ன..? நல்லாத்தான் இருக்கார்.. இப்போத் தோப்பில காய் இறக்கறதைக் கணக்கெடுத்துக்கிட்டு இருப்பார்.." இலகுவாகச் சொன்னான் சங்கர்..

"அப்பாடி.." பவானி நெஞ்சில் கை வைத்து ஆசுவாசமானாள்..

"ஒரு நிமிசம் என் மூச்சே நின்று விடும் போல இருந்தது.." அவளது சுவாசம் சீரானது..

'பாவம் இவள்.. குமரகுருவை விட்டாச் சொந்தம்ன்னு சொல்லிக்க யாருமில்லை..'

சங்கர் இரக்கத்துடன் அவளைப் பார்த்தான்.. பெருமூச்சு விட்டான்.. எப்படிப் பேச்சை ஆரம்பிப்பது என்று அவனுக்கு

யோசனையாக இருந்தது.. வேறு வழியும் தெரியவில்லை.. அனைத்து வழிகளையும் அடைத்து விட்டு சரளா மருத்துவமனையில் கிடக்கிறாளே..

"இதுக்கா உன்னைப் பெத்து வளர்த்தேன்..?"

கௌரி தலைதலையாக அடித்துக் கொண்டு கதறினாள்.. தகப்பனையும், மகனையும் குற்றம் சாட்டினாள்..

"படிச்சுப் படிச்சுச் சொன்னேனே.. கேட்டிங்களா..? நம்மகிட்ட சம்பந்தம் பண்ணிக்கத் தவம் கிடக்கிறவங்களைப் பத்தி பொண்ணு காதுபடப் பேசியிருக்கனும்.. அது நடந்திருக்கும்.."

'உண்மைதானே..' சங்கர் சங்கடப்பட்டான்..

சிவனேசன் குற்ற உணர்வுடன் கண் கலங்கினார்.. அவரது செல்ல மகள் தூக்க மாத்திரைகளை விழுங்கி விட்டாள் என்ற செய்தியை அவரால் ஜீரணித்துக் கொள்ள முடியவில்லை.. அவர் பிழைக்கும் பிழைப்புக்கே அர்த்தம் இல்லாமல் போய் விட்டதே.. அன்னவாசல் ஜமின்தாரரால் அவரது செல்ல மகளின் ஆசையை நிறைவேற்ற முடியவில்லையே..

"அதை விட்டுட்டு.. வெளிநாட்டில குடியிருக்கான்.. அது, இதுன்னு பேசி, என்மக மனசைக் கலைச்சுட்டிங்களே.. அவனை வீட்டுக்கே கூட்டிட்டு வந்து பெண்ணைக் காட்டிப் பழக விடணும்னு நினைச்சீங்களே.. பெண்ணைக் காட்டிக் கட்டிக் கொடுக்கிற நிலைமையிலா நாம் பிழைக்கிறோம்..?"

நெற்றியடிக் கேள்வி.. பதில் சொல்ல முடியாமல் தந்தையும் மகனும் வாயடைத்துப் போனார்கள்..

"செய்கிறதையும் செஞ்சுட்டுத் தும்பை விட்டு, வாலைப் பிடிக்கத் திட்டம் போடறிங்க.. இந்தத் திட்டத்தை முதலிலேயே போட்டிருக்கனும்.. இனிப் போட்டு பிரயோசனமில்லை.. இவ கதறுகிற கதறலைக் கேட்டு பெத்த வயிறு பத்தி எரியுதுடா சங்கர்.. ஏதாச்சும் ஏடாகூடமா செய்து வைச்சிருவாளோன்னு பயந்துதான் ஒரு மணிக்கொரு தரம் இவ ரூமை எட்டிப் பார்த்துக்கிட்டே

இருந்தேன்.. நான் நினைச்சதைப் போலவே செஞ்சு வைச்சிட்டா.. உடனே தூக்கிக்கிட்டு ஓடி வந்ததில உயிர் பிழைச்சா.. இல்லேன்னா என்ன ஆகியிருக்கும்..?"

"சொல்லாதே.." சிவனேசன் பதறினார்..

கௌரி மட்டும் மகளைக் கண்காணிப்பாகப் பார்த்திருக்கா விட்டால் நிலைமை விபரீதமாக ஆகியிருக்கும்..

"பிகினிங் ஸ்டேஜில கொண்டு வந்துட்டிங்க.. எங்களால் காப்பாற்ற முடிந்தது.. ஆப் அன் அவர் லேட்டாகியிருந்தாலும் பிழைக்க வைக்கிறது கஷ்டமாகியிருக்கும்.."

டாக்டர் சொன்னதும் சிவனேசனும் சங்கரும் அதிர்ந்து போனார்கள்.. சிவனேசன் நெஞ்சைப் பிடித்துக் கொண்டு உட்கார்ந்து விட்டார்..

"சங்கர்.. இனி மாத்தி யோசிச்சு பிரயோசனமில்லை..

உன் தங்கை அந்த வினோத்தைத் தவிர வேறு யாரையும் கட்ட மாட்டாள்.."

"அவன்தான் பவானியைப் பெண் கேட்டுத் தொலைச்சிருக்கானேம்மா.. அவனைக் கட்டி இழுத்து வந்து தாலியைக் கட்ட வைக்கவா முடியும்..?"

"முடியும் சங்கர்.."

கௌரி தீர்மானமான குரலில் சொன்னாள்.. தெளிவாகச் சொன்னாள்..

"பவானி நினைத்தால் அவனை வார்த்தைகளால் கட்டி இழுத்து வந்து நம் சரளாவின் கழுத்தில் தாலியைக் கட்ட வைக்க முடியும்.."

எதற்காக அவன் வந்திருக்கிறான் என்று தெரியாமல் இமைகள் படபடக்க.. கால் விரலால் தரையில் கோலம் போட்டு.. நொடிக்கொரு முறை அவனைப் பார்ப்பதும்.. அவன் பார்வையைச் சந்திக்க முடியாமல் நாணத்துடன் தலை குனிந்து கொள்பவளுமாக இருந்த பவானியைப் பார்த்தான் சங்கர்.. அவளிடம் தென்பட்ட பெண்மையின் தவிப்பு அவனுக்குப் பிடித்திருந்தது.. அவளைப் பிடித்திருக்கிறதா என்ற கேள்விக்கு பிடித்திருக்கிறது.. ஆனால் பிடிக்கவில்லை.. என்ற குழப்பமான பதிலைத்தான் மனம் தந்தது..

திருமணவயதில் இருக்கும் ஆணுக்கு, பருவப் பெண்களின் மீது வரும் ஈர்ப்புத்தான் சங்கருக்கும் பவானிமீது வந்தது.. அவள் வெகு அழகாக இருந்தாள்.. பெண்மையின் குணங்களோடு இருந்தாள்.. அவனைவிடப் பணக்காரனான வினோத்தை நேர்கொண்ட பார்வை பார்த்தவள் சங்கருடைய பார்வையை எதிர்கொள்ள முடியாமல் நாணத்துடன் தடுமாறினாள்.. அது சங்கரின் ஆண் மனதுக்கு ஓர் கர்வத்தையும் திருப்தியையும் கொடுத்தது.. அதைத்தாண்டி பவானியை அவன் நினைத்தும் பார்க்கவில்லை.. அவன் பாதையும் நிலைமையும் வேறு.. பவானியின் பாதையும் நிலைமையும் வேறு என்பதில் தெளிவாக இருந்தான்.. அவளிடம் கருணை காட்டலாம்.. காதலைக் காட்ட முடியுமா..?

அப்படிப்பட்டவனிடம்தான் அந்த வார்த்தைகளைச் சொன்னாள் அவனுடைய அன்னை..

"உன்னைக் காதலிப்பதாக வினோத்திடம் பவானி சொல்ல வேண்டும் சங்கர்.."

சங்கர் திடுக்கிட்டான்.. விளையாட்டாகக் கூட இப்படிப் பேச அவன் விரும்பவில்லை.. பருவ வயதில் தோன்றும் ஈர்ப்புக்கு காதல் என்று பெயரிடுவதா..?

"அம்மா.. பவானியின் மீது எனக்குக் காதலில்லை.."

"அதைத்தான் வினோத்திடம் பவானி சொல்லனும் சங்கர்.. அவ உன்மேல உயிரை வைச்சிருக்கிறதா சொல்லி

அழனும்.."

"ஏம்மா..? எதுக்காக இந்த விபரீத விளையாட்டை விளையாடனும்..? குமரகுருவை உங்களுக்குச் சொந்தம்ன்னு கூட நான் நினைத்துப் பார்த்ததில்லை.. பவானியை நம் வீட்டில் வேலை செய்பவள் என்கிற ரேன்ஜில்தான் நினைக்கிறேன்."

"தெரியும் சங்கர்.. இப்போ நாம பேசிக்கிட்டு இருக்கிறது உன் தங்கையின் வாழ்க்கையைப் பத்தி.. அவ ஆசைப்பட்டவனுக்கு அவளைக் கட்டிக் கொடுக்கனும்னா பவானி ஒருத்தியால்தான் அது முடியும்.."

"அவன் என் பிரண்ட்.. அவனோட பேரண்ட்ஸ் நமக்கு ரிலேட்டிவ்.. நம்மால் முடியாததை ஒரு சின்னப்பெண் செய்து முடித்து விடுவாளா..? என்னம்மா பேசறிங்க.."

"நீ அவனுடைய நண்பன்ங்கிறதுக்காக உன் பேச்சை அவன் காது கொடுத்துக் கேட்டானா சங்கர்..? பவானியைப் பெண் கேட்டதை உன்னிடம் சொன்னானா..? நம் வீட்டுக்கு விருந்தாளியாக வந்து விட்டு, குமரகுர பெரியப்பாவிடம் உறவு கொண்டாடுகிறான்.. நம் சரளாவைப் பார்க்க வந்தவன் பவானியைப் பெண் கேட்கிறான்.. அவர் ரெண்டு வருச அவகாசம் கேட்டதும், நமக்குப் பதில் சொல்ல ரெண்டு வருச கெடு வைக்கிறான்.. எல்லாத்திலயும் நல்லவனா, நேர்மையானவனா இருக்கும் வினோத் இந்த விசயத்தில் நேர்மையா இல்லை சங்கர்.. நம்பிக்கைத் துரோகம் செய்கிறான்.. நம்ப வைச்சு ஏமாத்தறான்.. அவன் பவானியைப் பார்க்கனும்னா நம்ம வீட்டுக்கு விருந்தாளியா வந்து தங்கியாகனும்.. அதுக்காக நம்மை பயன்படுத்திக்கப் பார்க்கிறான்.."

"ம்மா.. இதையெல்லாம் நீங்க சொல்லனுமா..? எனக்கே தெரிந்ததுதானே.. அவன் மேல செம காண்டா இருக்கேன்மா.. கொலை வெறியில இருக்கேன்.."

"அவன் மேல உன் கோபத்தைக் காண்பித்தா மட்டும் சரளா வாழ்ந்து விடுவாளா..? தற்கொலை பண்ணிக்கப் பார்த்திருக்கா.. நாம் பிழைக்கிற பிழைப்புக்கே ஓர்

அர்த்தமில்லாம பண்ணிட்டா.. இதுக்காகவா அவளைச் சீராட்டிப் பாராட்டி வளர்த்தோம்..?"

சங்கர் குற்ற உணர்வுடன் மௌனமானான்.. இதற்கு தானும் ஓர் காரணம் என்ற குற்றஉணர்வு அவன் மனதை வாட்டியது.

"அப்பா வினோத்தைப் பெத்தவங்களிடம் பேசலாம்.. பேசினா அவங்க என்ன சொல்லுவாங்க..? மகன் மனசுக்குப் பிடிக்காததை அவங்க செய்ய மாட்டாங்கன்னுதானே சொல்வாங்க..?"

அப்படித்தான் அவர்கள் சொல்வார்கள்.. கந்தகோட்டை ஜமின்வம்சம் என்றாலும் வினோத்தின் அப்பா சென்னையில் பிறந்து வளர்ந்தவர்.. வினோத்தின் அம்மா பிறந்து வளர்ந்தது மும்பையில்.. அவர்கள் வெளிநாட்டில் இருந்த போது வினோத் பிறந்ததால் அவனுக்கு அமெரிக்க குடியுரிமை உண்டு.. அங்குதான் அவன் வளர்ந்தான்.. படித்தான்.. இங்கும் அங்குமாக வினோத்தின் பெற்றோர் இருக்க, இவன் மட்டும் அமெரிக்காவில்தான் வசிப்பேன் என்று அங்கே அரண்மனைபோல வீட்டைக் கட்டிக் கொண்டு இருந்து விட்டான்.. அதற்கும் அவனுடைய பெற்றோர்கள் ஆட்சேபிக்கவில்லை.. அவன் விருப்பம் என்று சொன்னார்கள்.. அவர்களது தொழில்களின் தலைமயகத்தை அவன் வெளிநாட்டிற்கு மாற்றிக் கொண்டதற்கும் மறுப்புத் தெரிவிக்கவில்லை.. அவன் விருப்பம் என்றார்கள்.. அப்படிப்பட்டவர்கள் மகனின் திருமணத்தில் மட்டும் அவர்களது விருப்பத்தை அவன்மீது திணித்து விடுவார்களா..? மகன் விருப்பம் எதுவோ.. அதுதான் அவர்களின் விருப்பம் என்றுதான் சொல்வார்கள்..

"அதுக்காக பவானியைக் காதலிப்பதாக வினோத்திடம் சொல்லச் சொல்கிறீங்களே.. இது நியாயமா..?"

"இது போர்.. உன் தங்கைக்கான யுத்தம்.. இங்கே சில தர்ம நியாயங்களுக்கு இடமில்லை.. பவானி சொல்வதை

வினோத் கண்ணை மூடிக்கிட்டு செய்வான்.. அதே போல, நீ சொல்வதை பவானி கேள்வியே கேக்காம செய்வா.."

"மற்ற விசயங்களில் வேண்டும்ன்னா அவ அடி பணிஞ்சு செய்யலாம்.. இது காதல் விவகாரம்.."

"இதிலும் அவ அடிபணிவா.. நல்லா யோசிச்சுக்க சங்கர்.. பவானி நேர்கொண்ட பார்வையுடன் வாழ்பவ.. அவ மனசை ஜெயிக்க வினோத்தால் முடியாது. உன்னால் முடியும்.."

"அதுக்காக அவமேல விருப்பமில்லாத ஒருத்தனைக் காதலிக்கிறதா அவ பொய் சொல்லனுமா..?"

"அது அவ பிரச்னை.. நீ உன் பிரச்னையை மட்டும் பாரு.. நீ குதின்னு சொன்னா பவானி மலையுச்சியில இருந்துகூட குதிப்பா.. அதை மனப்பூர்வமா செய்வா.."

"எப்படிம்மா..? ஒரு பெண்ணிடம் போய் இப்படிப் பேசுவதா..?"

"இதுக்கு மேலேயும் பேசியாகனும் சங்கர்.. வினோத்தை பவானி வரச்சொல்லனும்.. இவ சொன்னா அவன் அடுத்த நாளே அன்னவாசலில் வந்து நிற்பான்.. இப்போதைக்கு அதை மட்டும் சொல்லச் சொல்லு.. மத்ததை நான் போகப்போகச் சொல்றேன்.. சரளா மறுபடியும் எதையும் ஏடாகூடமா செய்யாம இருக்கனும்னா வினோத் அன்னவாசலுக்கு வந்தாகனும் சங்கர்.."

"பவானிக்கு எக்ஸாம்ஸ் ஸ்டார்ட் ஆகப் போகுதும்மா.. இப்ப அவ மனசை வேறு எதிலும் டைவர்ட் பண்ணக்கூடாது.."

"அதனாலதான் சொல்றேன்.. இப்போதைக்கு வினோத்தை அன்னவாசலுக்கு வரவை.. உன்மீது காதல்ன்னு வினோத்திடம் சொல்ல வைப்பதை அவளோட பரிட்சை முடிஞ்ச பின்னால பார்த்துக்கலாம்.. உன்னால்தான் இந்தப் பிரச்னை ஆரம்பிச்சது சங்கர்.. நீ மட்டும் வினோத்தைப் பத்தி வாய் விடாம இருந்திருந்தா சரளாவும் வினோத்தைப் பத்தி யோசிச்சிருக்க மாட்டா.. உன் அப்பாவும் வேறு மாப்பிள்ளை பார்த்திருப்பார்.. உன்னால் ஆரம்பித்த

பிரச்னையை நீதான் முடிச்சு வைக்கனும் சங்கர்.. போ.. பவானியிடம் போ.."

கௌரியின் கோபம் மகனை விரட்டியது.. அவன் வேறு வழியின்றி பவானியைப் பார்க்க விரைந்தான்..

சிந்தனையுடன் நின்றிருந்தவனை ஆசையுடன் அள்ளிப் பருகுவதைப் போலப் பார்த்துக் கொண்டிருந்தாள் பவானி.. அந்த மணித்துளிகளை சேகரித்துப் பத்திரப்படுத்திக் கொண்டிருந்தது மனது.. இந்த ஜென்மத்திற்கும் இதுபோதும் என்று அவளது இதயம் நிறைந்தது.. எப்படிப்பட்ட தருணம் இது.. இனிப்பை ஏந்தி நிற்கும் தருணம்..

"பவானி.."

சங்கரின் அழைப்பில் பவானி சிலிர்த்துப் போனாள்.. அவளுடைய கந்தவர்வன் அவளைப் பெயர் சொல்லி அழைக்கிறான்.. ஆனந்தப் பரவசத்துடன் அவனை ஏறிட்டுப் பார்த்த விழிகளில் தெரிந்த ஏக்கம் சங்கரைக் கட்டிப் போட்டது.. அவளை இழுத்து அணைத்து, முகமெங்கும் முத்தங்களைப் பதித்து, 'ஏன்டி.. என்மீது இவ்வளவு ஆசை வைத்திருக்கிறாய்..' என்று கேட்கத் தோன்றியது.

"சொல்லுங்க சின்னய்யா.."

"உன்னிடம் ஒரு உதவி கேட்டு வந்திருக்கிறேன் பவானி.. செய்வியா..?"

கரகரத்த அவனது குரலில் பவானி துடித்துப் போனாள்.. அவளுடைய கந்தவர்வன் அவளிடம் உதவி கேட்பதா..? ஆணையிட வேண்டாமா..?

"இப்படிப் பேசாதீங்க.. உங்க வார்த்தை எனக்கு வேதம்.. மலையுச்சியில இருந்து குதின்னு சொன்னாக்கூட மனப்பூர்வமா குதிப்பேன் சின்னய்யா.. உதவின்னு நீங்க சொல்லலாமா..? செய்ன்னு சொல்லுங்க.. செஞ்சு முடிக்கறேன்.."

இப்படிப்பட்டவளிடம் எப்படி அவன் சொல்லவந்ததைச் சொல்வான்..? தயங்கினான்.. பவானி சொல்லும்படி வற்புறுத்தினாள்.. அவனும் சொன்னான்.. அவளுடைய தேர்வுகளுக்கு இடையூறு ஏற்படாத வகையில் தன் கோரிக்கையை முன் வைத்தான்.. தயக்கத்துடன்தான் பேசினான்..

"வினோத்துக்கு நீ போன் பண்ணனும் பவானி.. உன் தாத்தாவுக்கு உடம்பு சரியில்லை.. நீ ஹாஸ்டலுக்கு வந்துட்டதினால தாத்தாவைப் பார்த்துக்க யாருமில்லை.. நீ பரிட்சை முடிஞ்சு வர்ற வரைக்கும் தாத்தாவைப் பார்த்துக்க அன்னவாசலுக்கு வர முடியுமான்னு கேளு.. அவன் உடனே அன்னவாசலுக்கு வந்து நின்று விடுவான்.. ஏன்.. எதுக்குன்னு கேட்காம இதை நீ செய்யனும்.."

"சரிங்க.. ஆனா.. உங்க பிரண்டோட போன் நம்பர் எனக்குத் தெரியாதே.. என்ன செய்யறது..?"

"நான் தர்றேன்.."

"என் போனில இருந்து பேசினா என்னோட போன்நம்பர் அவருக்குத் தெரிஞ்சுருமே.."

"தெரியட்டும்.. தெரிஞ்சுதானே ஆகனும்..? நீ பேசு.. பேசினவுடன் எல்லாத்தையும் மறந்துட்டு எக்ஸாமுக்கு படி.. புரியுதா..?"

பவானியின் முகத்தில் ஆயிரம் வாட்ஸ் பல்பு எரிந்தது.. அவளுக்கான அவனது அக்கறையில் மெய் மறந்து போனவளாக தலையை ஆட்டினாள்..

## 22

கடற்கரையோரம்  ஜாகிங் போய் கொண்டிருந்த வினோத் செல்போன் அலறியதும், ஓடுவதை நிறுத்திவிட்டு.. அங்கிருந்த சிமிண்ட் பெஞ்சில் சாய்ந்து அமர்ந்து கடலைப்

பார்த்தபடி செல்போனை உயிர்ப்பித்தான்.. மறுமுனையில் தயக்கமான குரல் ஒலித்தது..

"நான்.. நான்.. பவானி பேசறேன்.."

"பவானி..?"

ஆவலுடன் வினோத் எழுந்து நின்று விட்டான்.. எதிரே ஆர்ப்பரித்து ஓடி வந்த கடல் அலைகள் போல அவனது மனம் பரபரத்தது.. விழிகள் பிரகாசித்தன..

"பவானிதான்.. எனக்கொரு உதவி செய்ய முடியுமா..?"

"முடியுமான்னு கேக்காதீங்க பவானி.. சொல்லுங்க.. செய்கிறேன்.. உதவின்னு சொல்லாதீங்க.. அது என் கடமை.."

'என்னடா இது.. இவன் இப்படி உருகறான்..'

பவானிக்கு சங்கடமாக இருந்தது.. வினோத் அவளைத் திருமணம் செய்து கொள்ள விரும்பிப் பெண் கேட்டது அவளுக்குத் தெரியாது..

"சொல்லுங்க பவானி.. ஏன் கொயட்டாகிட்டிங்க..?"

"வந்து.. வந்து.."

தாத்தாவுக்கு உடம்பு சரியில்லை என்று எப்படிச் சொல்வது..? ஆனால் சொல்லித்தானே ஆக வேண்டும்.. இது சங்கரின் கட்டளை..

"என்ன பவானி..? பணம் எதுவும் தேவைப்படுதா..?" வினோத் கனிவாகக் கேட்டான்..

'டேய்..' பவானிக்கு கோபம் வந்து விட்டது..

அதுவரை இருந்த தயக்கமெல்லாம் பறந்தோடி விட, பவானி கடகடவென ஒப்பிக்க ஆரம்பித்தாள்..

"பணம் தேவைப்பட்டால் கொடுக்க என் தாத்தா இருக்கார்.. ஆண்டவன் புண்ணியத்தில எனக்கு மெடிகல் சீட் ஃப்ரீயாத்தான் கிடைச்சிருக்கு.. அதுவும் பக்கத்து டவுனில இருக்கிற கவர்ண்ட்மெண்ட் மெடிகல் காலேஜிலேயே

கிடைச்சிருக்கு.. அதுக்காக போன் பண்ணலை.. தாத்தாவுக்கு உடம்பு சரியில்லையாம்.. மழையில நனைஞ்சிட்டார் போல.. பக்கத்தில நானிருந்தா ஆறுதலா பேசிக்கிட்டு இருந்திருப்பேன்.. பரிட்சைக்குப் படிக்க ஹாஸ்டலுக்கு வந்துட்டேன்.. இப்ப வீட்டுக்குப் போனா என்னாலே பரிட்சைக்குப் படிக்க முடியாது.."

"டோன்ட் வொர்ரி.. நான் அன்னவாசலுக்கு வருகிறேன்.. நீங்க எக்ஸாமை எழுதி விட்டு வரும்வரைக்கும் தாத்தாவை பார்த்துக்கிறேன்.. இந்த வொர்ரிஸையெல்லாம் தலையில் ஏற்றிக்காம நீங்க படிங்க.. எக்ஸாம்ஸில தூள் கிளப்பனும்.. ஓகே..?"

அவள் கேட்க நினைத்ததை அவள் கேட்காமலே செய்வதாக வாக்குக் கொடுத்த வினோத்தின் பரிவிலும், புரிதலிலும் பவானிக்கு கண்ணீரே வந்து விட்டது.. இப்படிப்பட்டவனை ஏமாற்றி வரச்சொல்வதில் குற்றஉணர்வு மேலிட்டது.. என்ன, ஏது என்று கேட்காமல் அவள் வினோத்தை வரச்சொல்ல வேண்டுமென்று சங்கர் சொல்லி விட்டானே.. அவள் என்ன செய்வாள்..?

பவானி அத்துடன் வினோத்தை மறந்துவிட்டு படிப்பில் ஆழ்ந்தாள்.. வினாத் உடனே கிளம்பி பிளைட் பிடித்து பக்கத்து டவுனில் இறங்கி, அங்கிருந்து கால்டாக்ஸி பிடித்து மதிய உணவுக்கே அன்னவாசலுக்கு வந்து நின்று விட்டான்..

மருத்துவமனையிலிருந்து வந்திருந்த சரளா அயர்வாக உறங்கிக் கொண்டிருந்தாள்.. ஹாலில் சிவனேசன் கவலையுடன் மோட்டுவளையைப் பார்த்துக் கொண்டிருக்க பக்கத்தில் சங்கர் உலாத்திக் கொண்டிருந்தான்.. மகளை உறங்க வைத்துவிட்டு மாடிப்படிகளில் தளர்வாக இறங்கி வந்தாள் கௌரி.. போர்டிகோவில் கார் வந்து நிற்கும் சப்தம் கேட்டதும் மகனை கேள்வியாகப் பார்த்தாள்.. வெளியே எட்டிப் பார்த்த சங்கர் கட்டை விரலை உயர்த்திக் காண்பித்தான்.

"அதுக்குள்ள வந்துட்டான் பாத்திங்களாம்மா.. காலையில்தான் பவானிகிட்டப் பேசினேன்.. அவஉடனே போன் போட்டிருக்கா.. லன்சுக்கு வந்து குதிச்சிட்டான்.." கடுப்புடன் சொன்னான் சங்கர்..

"இப்படித்தான் நடக்கும்ன்னு நான் எதிர்பார்த்ததுதான் சங்கர்.."

"குமரகுருவிடம் சொல்ல மறந்துட்டோமே.. அவர் காய்ச்சல்ன்னு இழுத்துப் போர்த்திப் படுக்காம சுறுசுறுப்பா கணக்கு நோட்டைக் கையில் பிடிச்சுக்கிட்டு வந்து நின்னுட்டார்ன்னா நம்ம பிளானெல்லாம் சொதப்பிருமே.."

"வரமாட்டார்.. சரளாவைப் பார்க்க அவர் ஆஸ்பத்திரிக்கு வந்தப்பவே நான் சொல்லிட்டேன்.. வீட்டிலதான் இழுத்துப் போர்த்திக்கிட்டு படுத்திருக்கார்.."

'பரவாயில்லையே..' என்று தோன்றியது சங்கருக்கு..

அவர்கள் 'எள்' என்று செல்வதற்குள் தாத்தாவும், பேத்தியும் எண்ணையாக நிற்கிறார்களே.. அவர்களின் ஒத்துழைப்பு இல்லாவிட்டால் வினோத்தை அன்னவாசலுக்கு வர வைத்திருக்க முடியாதே..

இதை அவன் சொல்லி சிலாகித்ததை சிவனேசன் விரும்பவில்லை..

"அதுகளாலதான் இந்த வினை வந்திருக்குது.. வினை விதைத்ததுகதான் அதை சரிபண்ணனும் சங்கர்.. பாவம் பாத்து இருக்கஇடம் கொடுத்து, பாக்க வேலையும் கொடுத்தோம்.. பத்தாததுக்கு டாக்டருக்குப் படிக்க வைக்கிறோம்.. அந்த நன்றிக் கடனுக்கு அதுக பண்ணி வைச்ச வேலை, என் மகளைப் பெண் பாக்க வந்த மாப்பிள்ளையை அந்த பவானியைப் பெண் கேக்க வைச்சது.."

கௌரி கணவரை ஓர் மௌனப் பார்வை பார்த்துவிட்டு சங்கரிடம் சொன்னாள்..

"டாக்டருக்கு நாம படிக்க வைக்கலை சங்கர்.. கவர்ண்ட்மெண்ட் படிப்பைக் கொடுக்குது.. பவானி மாவட்டத்திலேயே மொத மாணவியா பாஸ் பண்ணினா.. டாக்டர் படிப்புக்கு பரிட்சை எழுதி அதிலேயும் ஜெயிச்சு சீட்டை வாங்கினா.. படிக்கிறா.. இதில நம்ம பங்குன்னு என்ன இருக்கு..? இருக்க இடம் கொடுத்து பாக்க வேலயும் கொடுத்தோம்.. அதுக்குத்தான் அந்த வயதானவர் பத்துமடங்கு உழைத்துக் கொட்டுறாரே.. ராப்பகலா வேல செய்யறார்.. அவரளவு யாரும் வேல செய்யல.. அதை மனசில வைச்சுக்கச் சொல்லு.. அவருக்கு மட்டுமா உங்க அப்பா வேல கொடுத்திருக்கார்..? எத்தனையோ பேருக்கு வேல கொடுத்திருக்கார்.. உதவி செஞ்சிருக்கார்.. எதையும் சொல்லிக் காட்டியதில்லை.. அன்னவாசல் ஜமின்தார் இந்த அளவுக்கு குறுகின புத்தியோட இருக்கக் கூடாது.."

"கௌரி.." சிவனேசன் கர்ஜித்தார்..

"அப்பா.. வினோத் வந்துட்டான்.." சங்கர் வினோத்தைக் காரணம் காட்டித் தந்தையை அடக்கினான்..

"ஹாய் சங்கர்.. ஹலோ அங்கிள்.. ஆண்ட்டி.." வினோத் சக்கரங்கள் உருளும் பெட்டியைத் தள்ளிக்கொண்டு உள்ளே வந்தான்..

அவனைக் கொன்று விடும் கோபம் இருந்தாலும் மகளுக்காக அதை அடக்கிக் கொண்டு இறுக்கமான முகத்துடன்..

"வாங்க தம்பி.." என்று வரவேற்றார் சிவனேசன்..

"அர்ஜெண்ட் வொர்க் இருக்குன்னு ஓடினாயேடா..?" சங்கர் பல்லைக் கடித்தபடி கேட்டான்.

"வொர்க் கேன்சலாகிருச்சு சங்கர்.. உடனே அப்ராட் போக மனம்வரலை.. அன்னவாசலின் அமைதியும், இயற்கையான காற்றும்.. பசுமையான சூழலும் என் மனதிலேயே இருந்தது.. இன்னும் கொஞ்சநாள் இங்கே இருக்கலாம்.. ஹாலிடேஸ் போல என்ஜாய்

பண்ணலாம்ன்னு கிளம்பி வந்துட்டேன்.. டு யு ஹேவ் எனி அப்ஜெக்சன்..?"

"எனக்கென்னடா அப்ஜெக்சன்.. இது உன் வீடு, எவ்வளவு நாள் வேண்டுமானாலும் நீ இங்கே தங்கலாம்.. இதெல்லாம் ஒரு கொஸ்டின்னு கேக்கற பார்.. அடிதான் வாங்கப் போற.."

மனதுக்குள் புயலை வைத்துக் கொண்டு வெளியே சிநேகிதத்துடன் பேச வெகுவாக சிரமப்பட்டான் சங்கர்.. என்ன செய்வது..? முள்ளை முள்ளால்தானே எடுக்க வேண்டும் என்று கௌரி சமாதானம் சொன்னாள்.. மதியஉணவுகூட உண்ணாமல் வினோத் தோட்டத்தைப் பார்த்துவிட்டு வருகிறேன் என்று கிளம்பினான்..

'மகனே.. நீ தோட்டத்தைப் பார்க்கவா போகிற..? தோட்டத்து வீட்டில இருக்கிற குமரகுருவையில்ல பார்க்கப் போகிற.. இப்பப் பாரு.. நீ தோட்டத்துக்குப் போகாம நிறுத்தி வைக்கிறேன்..'

சங்கர் மனதுக்குள் கருவியபடி..

"அம்மா.. குமரகுரு தாத்தா ஹாஸ்பிடலுக்குப் போயிருக்காரில்ல...?" என்றான்..

வினோத் பிரேக் பிடித்து நின்றான்..

"எந்த ஹாஸ்பிடல் போயிருக்காராம் சங்கர்..?" கவலையுடன் கேட்டான்..

"அவர் ஆஸ்பத்திரியில இருந்து அப்பவே வந்துட்டாரு சங்கர்.. வயசான மனுஷர்.. பவானி வேற வீட்டில இல்ல.. தனியா ஏன் இருக்க வைக்கனும்னு மாடியில சரளா ரூமுக்கு பக்கத்து ரூமில அவரத் தங்கச் சொல்லியிருக்கேன்.." கணவரின் முகம் பார்க்காமல் சொன்னாள் கௌரி..

'இது எப்போ..?' சங்கரின் புருவங்கள் உயர்ந்தன..

'இவளுக்கு இருக்கிற தெனாவெட்டைப் பார்த்தியா.. எம்புட்டு தைரியம்மிருந்தா அந்தக் கிழவன மாடியில தங்கச் சொல்லியிருப்பா..?' சிவனேசன் வெகுண்டார்..

"ஈஸிட்..? தேங்க்ஸ் ஆண்ட்டி.. யு டிட் குட் ஜாப்.." வினோத் பெட்டியை விட்டுவிட்டு மாடிப் படிகளில் தாவி ஏறினான்..

"அப்பாவும் பிள்ளையும் கோபத்திலே கொதிச்சீங்கள்ல.. இதுக்குத்தான் பெரியப்பாவை மாடியில, சரளா ரூமுக்குப் பக்கத்து ரூமில இருக்க வைச்சிருக்கேன்.. இவன் அன்னவாசலுக்கு வந்தா மட்டும் போதுமா..? அரண்மனையிலே அடங்கி உட்கார வேணாமா..? தோட்டத்து வீட்டிலேயே குடியிருந்தா சரளா மனசசொடிஞ்சு போயிர மாட்டாளா..? அவளுக்காகத்தானே இத்தனை பாடும்..?"

கௌரி விளக்கம் சொன்னதும் சிவனேசனின் கோபம் புஸ்வாணமாக இறங்கி விட்டது.. வினோத் மாடிக்குப் போனபோது குமரகுரு சரளாவின் அறையில் உட்கார்ந்திருந்தார்.. அவரது உடல்நலம் பற்றி விசாரிக்க வந்த வினோத் பிடுங்கிப் போட்ட கொடி போல கிடந்த சரளாவின் தோற்றத்தில் தாக்கப்பட்டான்.

"ஹௌ ஆர் யு தாத்தா..? உங்களுக்கு ஃபீவர்ன்னு பவானி சொன்னாங்க.. துணைக்கு யாருமில்லைன்னு அவங்க ரிக்வெஸ்ட் பண்ணியதாலே ஓடி வந்தேன்.."

"மழையில நனைஞ்சதிலே காய்ச்சல் வந்திருச்சு தம்பி.. என்னை விடுங்க.. நான் வயசானவன்.. இங்கே பாருங்க.. வாழ வேண்டிய வயசில சரளாப் பாப்பா தூக்க மாத்திரைகள முழுங்கிருச்சு.. ஒருவழியா உயிர் பிழைக்க வைச்சுக் கொண்டு வந்திருக்காக.."

"வாட்..?" வினோத் அதிர்ந்தான்..

அனுடைய குரலில் கண்விழித்த சரளாவின் விழிகளில்தான் எத்தனை பிரகாசம்..! அவனை நோக்கி நீண்ட கையைப் பற்றிக் கொள்ளாமல் அவன் அசையாமல் நின்று விட்டான்.. இப்படி ஆகும் என்று அவன் நினைக்கவில்லையே..

"பேசிக்கிட்டு இருங்க தம்பி.." குமரகுரு வெளியேறினார்..

அன்று மட்டுமல்ல.. பவானி பரிட்சைகளை எழுதி முடித்து விட்டு வரும்வரை.. குமரகுரு அதைத்தான் செய்தார்..

வினோத்தை சரளாவின் அறையில் உட்கார்ந்து பேச வைத்தார்.. பரிட்சைகளை முடித்து விட்டு வந்த பவானிக்கு அடுத்த பரிட்சை காத்திருந்தது..

23

பட்டு வேட்டி சட்டையுடன் நின்றிருந்தான் சங்கர்.. மொட்டை மாடியில் காற்று சிலுசிலுவென வீசிக் கொண்டிருந்தது.. கைகளை முன்னால் மடித்துக் கட்டிக் கொண்டு இருளை வெறித்துக் கொண்டிருந்தவனைத் தேடி வந்தாள் கௌரி.. மகனின் கையைத் தொட்டாள்.. கண்கள் சிவக்கத் திரும்பிப் பார்த்தவனிடம்..

"மன்னிச்சுருடா சங்கர்.." என்று இறைஞ்சினாள்..

"நீங்க மன்னிப்புக் கேட்கிறதினாலயும்.. நான் மன்னிப்பதாலேயும் எதுவும் சரியாகி விடப் போவதில்லைம்மா.. நடந்த கல்யாணம் நடந்ததுதான்.. எனக்கு வரப் போகிற மனைவியைப் பற்றி ஆயிரம் கற்பனைகளை வைத்திருந்தேன்.. அவ எனக்கு இணையான அந்தஸ்து இருக்கிற வீட்டில பிறந்தவளா இருக்கனும்.. ஃபாரின் போய் படிச்சுட்டு வந்தவளா இருக்கனும்.. மேல்தட்டு நாகரிகப் பழக்க வழக்கங்களுடன் இருக்கனும்.. இப்படி நிறைய.. இப்படி பவானி கழுத்தில் தாலியைக் கட்டுவேன்னு நினைச்சுக்கூடப் பார்க்கலையேம்மா.. என் கனவுக் காதலி பவானியில்லம்மா.."

"அதுக்காகத்தான் மன்னிப்புக் கேட்டேன் சங்கர்.. உனக்கும், எனக்கும் வேற வழியில்லடா.. சரளாவுக்காக இதைச் செய்திருக்கோம்.."

"ம்ப்த்ச்சு.." சங்கர் வெறுப்புடன் சூள் கொட்டினான்..

"சங்கர்.." சங்கடத்துடன் அழைத்தாள் கௌரி..

"ம்ம்ம்.."

"வினோத்தும் சரளாவும் தூங்கப் போயாச்சு சங்கர்.. அவங்களுக்கு இன்னைக்கு முதலிரவு.."

"ஸோ.. வாட்..?"

"உனக்கும் இன்னைக்குத்தான் முதலிரவு.. பவானி உனக்காக காத்திருக்கா.."

"அம்மா.."

கோபத்தில் பேச முடியாமல் பல்லைக் கடித்தான் சங்கர்..

"உன் கோபம் புரியுது சங்கர்.. அதுக்காக இந்த வாழ்க்கையை வாழாம நீ ஓடி ஒளிய முடியாது.. ஒளியவும் கூடாது.. நீ சொன்னதுக்காகத்தான் இத்தனையும் பவானி செஞ்சா.. நீ பேசச் சொன்னதை வினோத்திடம் பேசினா.. உனக்கும் கழுத்தை நீட்டினா.. அவளோட நன்றியையும் விசுவாசத்தையும் அவ காட்டிட்டா.. அவளுக்கான நியாயத்தை நீ செய்ய வேண்டாமா..? அவ மனுஷிடா.. கல்லில்ல.. படிச்சுக்கிட்டு இருந்த பொண்ண நம்ம சுயநலத்துக்காக கல்யாணத்தில கொண்டு வந்து நிறுத்திட்டு இப்ப வாழமாட்டேன்னு மொட்டைமாடி இருட்டுக்குள்ள வந்து நின்னுக்கிட்டு இருந்தா என்ன அர்த்தம் சங்கர்..?"

கௌரியின் வற்புறுத்தலில் சங்கர் படியிறங்கி வந்தான்.. அவனுடைய அறையில் நுழைந்து கதவைச் சாத்தித் தாழிட்டான்.. திரும்பினால்.. அவனுடைய கட்டிலைச் சுற்றி மலர்ச்சரங்கள் தொங்கின.. அறையில் நறுமணம் கமழ்ந்து கொண்டிருந்தது..

பவானி கட்டிலருகே தலை குனிந்து நின்று கொண்டிருந்தாள்.. சந்தனநிறப் பட்டுச்சேலை.. கழுத்தில் வைரப் பதக்கம்.. அவன் கட்டிய மஞ்சள் சரடு அவள் அவனுடைய மனைவி என்பதை பறை சாற்றியது.. காதுகளில் பெரிய வைரத் தொங்கட்டான்.. கைகளில் குழுங்கும் வைர வளையல்கள்.. அத்தனையும் மருமகளுக்காக கௌரி கொடுத்த நகைகள்..

எளிமையான அலங்காரத்திலேயே யட்சக் கன்னிகையாக யௌவன வனப்புடன் ஈர்ப்பவள், சர்வ அலங்கார பூஷிதையாக தேவலோக மங்கையாக நின்றாள்.. வெட்கத்துடன் அவனை ஏறிட்டுப் பார்த்தாள்.. அவளது இமைகள் பட்டாம்பூச்சிகளாக படபடத்தன..

அவள் அவனுக்குப் பொருத்தமான மனைவி இல்லையென்ற மனக்குறையை மறந்தான் சங்கர்.. சந்தர்ப்ப சூழ்நிலையில் அவள் கழுத்தில் தாலியைக் கட்டி விட்டானே என்ற தன்னிரக்கத்தை மறந்தான்.. அவனது கனவுக்காதலி அவளில்லை என்பதையும் மறந்தான்.. அவனது பாதங்களில் பணிந்தவளின் தோள் தொட்டு எழுப்பினான்.. அந்த சிறு தொடுகையைத் தாங்கிக் கொள்ள முடியாமல் அவன் மார்பில் சரிந்தவளைத் தழுவிக் கொண்டவனின் மீது ஓங்கி விழுந்தது மோகப் பேரலை.. அதில் அமிழ்ந்தவன் ஆவேசத்துடன் அவளை இழுத்துக் கொண்டு அமிழ்ந்தான்.. பவானிக்கு மூச்சுத் திணறியது..

கௌரி வழங்கி பவானியை அலங்கரித்த நகைகள் பக்கத்திலிருந்த டீப்பாயில் வந்து விழுந்தன.. அவற்றை மூடி மறைத்து விழுந்தது பவானியின் பட்டுப் புடவை.. முகம் மறைத்து வெட்கத்துடன் போராடியவளின் விரல்களை விலக்கி ஆவேசத்துடன் அவளது இதழ்களைச் சுவைத்தான் சங்கர்.. பவானியின் மெல்லுடல் நடுங்கியது.. அவளது அந்த நடுக்கம்.. சங்கருக்குள் வேட்கைத் தீயைப் பற்ற வைத்தது.. அவனது கரங்கள் தேடுதல் வேட்டையைத் தொடங்கின.. பெரும் ஜீவாலைக்குள் பவானி வீழ்ந்தாள்.. சங்கர் அவள்மீது கவிழ்ந்தான்.. முடிவில்லாத வேட்டையைத் தொடர்ந்தான்..

வேட்டைக்காரனிடம் விருப்பத்துடன் சிக்கினாள் பவானி.. காதோரம் அவன் முணுமுணுத்த முணுமுணுப்புகள் அவளை வெட்கத்தில் ஆழ்த்தின.. அவனது விருப்பங்களை அவன் நிறைவேற்றிக் கொள்ள ஆரம்பித்தபோது அவளை வெட்கம் பிடுங்கித் தின்றது.. அவளறியாத புது உலகம் அது.. ஆணின் தொடுகை எத்தகைய ஆளுமை கொண்டது என்று அறிந்து கொண்ட நாள் அது.. விடியம் வரை அவனது

வேட்டை தொடர்ந்தது.. பவானி களைத்துப் போனாள்.. மனம் மட்டும் இனித்தது..

காலையில் அறைக்கதவு தட்டப்படும் சப்தத்தைக் கேட்டுக் கண்விழித்தாள். அவள் மீது கவிழ்ந்திருந்த சங்கரிடமிருந்து மெதுவாக நகர்ந்து எழுந்து புடவையைக் கைப்பற்றினாள்.. அவசரமாக அதைச் சுற்றிக் கொண்டு கதவைத் திறந்தாள்.. கையில் காபிக் கோப்பைகள் கொண்ட டிரேயோடு சுமதி நின்றிருந்தாள்.. பிரியத்துடன் சிரித்தாள்..

"சீக்கிரமா குளிச்சுட்டு வருவியாம் கண்ணு.. உன் மாமியாரு கூப்பிட்டாக.." என்றவள் கண்ணடித்தபடி ரகசியக்குரலில்..

"என்ன கண்ணு.. எல்லாம் சரியா நடந்ததா..?" என்று கேட்டாள்..

கிராமங்களில் இது போன்ற கேள்விகள் உண்டு.. லஜ்ஜையில்லாமல் இதைவிட வெளிப்படையாகவும் கேட்பார்கள்.. நகரங்களில் நாசுக்காக விசாரிப்பார்கள்.. புதுப்பெண்கள் பதிலளிக்க முடியாமல் வெட்கத்தில் திணறிப் போவார்கள்..

"போங்கக்கா.." பவானி முகம் சிவந்தாள்..

"ஐ..ஐ.. வெக்கத்தைப் பாரு.." சுமதி போய் விட்டாள்..

பவானி கதவை மூடித் தாழிட்டு விட்டு சங்கரை எழுப்பினாள்.. கண்விழித்தவன் அவளைக் கட்டி இழுப்பான் என்று வெட்கத்துடன் காத்திருந்தவளுக்கு ஏமாற்றம்தான் மிஞ்சியது.. இமைகளைத் திறந்தவன் அவளைப் பார்த்ததும் முகம் சுருங்கினான்.. இரவில் அவன் காட்டிய வேகத்துக்கும் விடியலில் காட்டும் முகச் சுருக்கத்திற்கும் வித்தியாசம் நிறைய இருந்தது.. பவானியின் மனதில் அதிர்வு வந்தது.. இது கணவனாக அவன் காட்டும் முகமல்ல.. வேலையாளிடம் சின்ன ஜமின்தார் காட்டும் முகம்.. இரவில் நடந்ததை அவன் மறந்து விட்டானா..?

"காபி.. சின்.. சின்.."

அவனை எப்படி அழைப்பது என்று அவளுக்குத் தெரியவில்லை.. அத்தான் என்று அழைத்தால் கோபித்துக் கொள்வானோ.. சின்னய்யா என்றுதான் அவள் அழைக்க வேண்டுமோ..?

"என்னத்த 'சின்..சின்..'னுன்னு ராகம் போடற..? சின்னய்யான்னு கூப்பிட்டு வைச்சுத் தொலைச்சிராதே.. கேக்கிறவங்க வேலைக்காரியை நான் மேரேஜ் பண்ணியிருக்கேன்னு சிரிச்சு வைச்சிருவாங்க.."

'வேலைக்காரியா..? நானா..?' பவானி விக்கித்துப் போனாள்..

அவன் அந்த அளவில்தான் அவளை வைத்திருந்தான் என்பது உண்மைதான்.. அவளுடைய முகம் பார்த்துக்கூடப் பேச மாட்டான்.. பவானி என்ற ஒருத்தி தோட்டத்து வீட்டில் வசிக்கிறாள் என்பதைக்கூட கவனத்தில் வைத்துக் கொள்ள மாட்டான்.. எல்லாமும் சரிதான்.. அப்போது போல இப்போது இல்லையே.. முதல்நாள் காலையில்தான் பவானியின் கழுத்தில் அவன் தாலி கட்டியிருக்கிறான்.. இரவு முழுவதும் அவளுடன் உறவாடியிருக்கிறான்.. இப்போதும் அவள் வேலைக்காரிதானா..? சங்கரின் மனைவி இல்லையா..?

"மக்கு.. மக்கு.. உன் கழுத்தில் தாலியைக் கட்ட வேண்டியதாகிருச்சே.. எல்லாம் இந்த சரளாவால் வந்தது.. அவ கழுத்தில் வினோத் தாலிகட்டனும்னா உன் கழுத்தில் நான் தாலி கட்டியாகனும்னு கண்டிசன் போட்டுட்டானே.."

'அதுதான் தெரியுமே..' பவானி இமைகளைச் சிமிட்டிக் கண்ணீரை அடக்கிக் கொண்டாள்..

"எனக்கு வரப் போகிற வொய்ப் பத்தி ஆயிரம் கனவுகள் இருந்தது.. அதில் ஒரு கனவில் கூட நீ பிக்ஸ் ஆக மாட்ட.. உன்னையெல்லாம் என் வொய்புன்னு சொல்லி சென்னைக்குக் கூப்பிட்டுக்கிட்டு போகனுமா..?"

கேள்வியைக் கேட்டுவிட்டு அவள் முகத்தில் விழிக்கக்கூடப் பிடிக்காதவனைப் போல முகச்சுளிப்புடன் பால்கனிக்குப்

போய் விட்டான் சங்கர்.. இடிந்து போய் கட்டிலில் உட்கார்ந்து விட்டாள் பவானி.. கசங்கியிருந்த மலர்களும் கட்டில் விரிப்பும் முதல்நாள் இரவில் நடந்தது கனவல்ல என்பதற்கு கட்டியம் கூறின.. அது உண்மையா..? இது உண்மையா..?

பவானி பரிட்சைகளை எழுதி முடித்தபின் அன்னவாசலுக்குத் திரும்பினாளே.. அன்று அவளை ஹாஸ்டலில் இருந்து அழைத்துவர சங்கரே காரை எடுத்துக் கொண்டு வந்திருந்தானே.. அன்றே அவன் மனதிலிருப்பதைச் சொல்லியிருந்தால் பவானி திருமணம் வரை வந்திருக்க மாட்டாளே..""

"வினோத் உனக்காக காத்திருக்கிறான் பவானி.."

"எனக்காக அவர் எதுக்குக் காத்திருக்கனும்..? ஓ.. தாத்தாவைப் பார்த்துக்கச் சொல்லி நான் சொன்னேனே.. அதற்காகக் காத்திருக்காரா..?"

"இல்லை.. உன்னிடம் காதல் சொல்லக் காத்திருக்கிறான்.."

"என்னது..?"

வினோத் அவளை குமரகுருவிடம் பெண் கேட்பது வரை போயிருக்கிறான் என்பது தெரிந்ததும் பதறிப் போனாளே.. கையெடுத்துக் கும்பிட்டாளே..

"எனக்கு எதுவும் தெரியாது சின்னய்யா.. இதுக்கும் எனக்கும் சம்பந்தமில்லை.." என்று மன்றாடினாளே.. அதையெல்லாம் சங்கர் மறந்து போனானா..?

"உனக்கும் இதுக்கும் சம்பந்தமில்லைன்னு எனக்கும் அம்மாவுக்கும் தெரியும் பவானி.. ஆனா சிக்கல் வந்திருச்சு.. சரளா தற்கொலை பண்ணிக்கிற அளவுக்குப் போயிட்டா.. அவளை வினோத் மேரேஜ் பண்ணிக்கனும்னா நீ வினோத்திடம் என்னைக் காதலிப்பதா பொய் சொல்லனும்.."

'அது பொய்யில்லையே.. உன்மேல் உயிரையே வைச்சிருக்கேனே..' பவானி அவனை ஏக்கத்துடன் பார்த்தாள்..

மழைக்காக ஏங்கி நிற்கும் சாதகப்பறவையின் பார்வை அது.. ஒரு நொடி அந்தப் பார்வையில் தொலைந்து போன சங்கர் மனதை இழுத்துப் பிடித்துக் கொண்டான்.. அவனது மனம் விரும்பும் பெண் பவானியல்ல என்பதை நினைவு படுத்திக் கொண்டான்.. இந்த தியாகம் தங்கைக்காக..

"நான் உன் காதலை ஏற்றுக்கொள்ள மறுப்பதாச் சொல்லனும்.. நான் உனக்குக் கிடைக்கலேன்னா நீ செத்துப் போயிருவன்னு கதறி அழனும்.. வினோத் நினைத்தால் உன் காதலை நிறைவேற்றி வைக்க முடியனும்னு வேண்டிக்கனும்.."

பவானி செய்தாள்.. வினோத்திடம் உண்மையாக கதறி அழுதாள்..

"எனக்குன்னு தாத்தாவைத் தவிர யாருமில்லை.. தாத்தாவோ, நானோ இதைப் பத்திப் பேச முடியாது.. ஊமை காணும் கனவுதான் என் காதல்.. நீங்க நினைச்சா என் காதலை நிறைவேற்றி வைக்க முடியும்.. செய்வீங்களா..?"

பவானி கை கூப்பிக் கண்ணீர்விட்ட போது அவளையே பார்த்தபடி அசையாமல் நின்றானே அந்த நல்லவன்.. தான் காதலித்த பெண்ணுக்காக தன் காதலையே விட்டுக் கொடுத்து அவளுடைய காதலனிடம் அவளுக்காக பேசினானே.. சங்கரின் தங்கையைத் திருமணம் செய்து கொள்ள வேண்டுமென்றால் சங்கர் பவானியைத் திருமணம் செய்து கொள்ள வேண்டும்.. அதுவும் ஒரே மேடையில் இரண்டு திருமணங்களும் நடக்க வேண்டும் என்று நிபந்தனை விதித்தானே..

எந்த ஜென்மத்து பந்தமோ.. பேதை பவானியின் கனவை வினோத் நிறைவேற்றி விட்டான்..

24

"நீங்க நல்லா இருக்கனும்மா.."

குழந்தையைத் தூக்கிக் கொண்ட அந்தக் கிராமத்துப் பெண்மணி கையெடுத்துக் கும்பிட்டாள்.. புன்னகையுடன் குழந்தையின் கன்னத்தைத் தட்டிய பவானி..

"என் டியூட்டியைத்தான் நான் செஞ்சேன்.. இதுக்கு எதுக்கு நன்றி..? ஊம்..?" என்று கேட்டாள்..

"செய்யற தொழிலே தெய்வம்ன்னு எத்தனை பேருமா நினைக்கிறாக..?"

'நான் நினைப்பேன்..' பவானி எதுவும் பேசாமல் அடுத்த நோயாளியைக் கவனிக்க நகர்ந்தாள்.. அவளுக்கு அந்தக் குழந்தையைத் திரும்பிப் பார்க்க வேண்டும்போல இருந்தது.. கன்னங்களில் குழி விழ சிரித்து மயக்கும் மாயக் கண்ணன்..!

அவளுக்குத் திருமணமாகி நான்கு வருடங்களாகி விட்டன.. சரளா திருமணமான மறுவருடமே ஓர் அழகிய ஆண்குழந்தையைப் பெற்று விட்டாள்.. தலைப்பிரசவம் என்ற போதிலும் தாய் வீட்டுக்கு வரவில்லை.. வினோத்தைப் போலவே அவனுடைய குழந்தைகளுக்கும் அமெரிக்கக் குடியுரிமை வேண்டும் என்று அமெரிக்காவிலேயே இருந்து விட்டாள்..

"நம்ம நாட்டைவிட எந்த நாடு உசந்தது..?" சிவனேசன் மனைவியிடம் எகிறினார்..

"இத உங்க மகளிடம் சொல்ல வேண்டியதுதானே.." என்று கௌரி நொடித்த நொடிப்பில் அடங்கிப் போனார்..

சிவனேசனும் கௌரியும் மகளையும் பேரனையும் பார்க்க அமெரிக்கா போய் வந்தார்கள்.. அவர்கள் அன்னவாசலில் இல்லாத நாள்களில் வீட்டையும், தொழில்களையும், தோப்பு துரவுகளையும் பவானியும் குமரகுருவும் பார்த்துக் கொண்டார்கள்.. அவர்கள் இல்லாத குறை தெரியாமல் அனைத்தும் சீராக இருந்ததில் சிவனேசனுக்கு பரம திருப்தி.. அதை வெளிக்காட்டிக் கொள்ளாமல் அமுக்குளியாக இருந்தார்..

சங்கர் சென்னையில் இருந்தான்.. வாரத்திற்கு ஓர்முறை அன்னவாசலுக்கு வந்து போனான்.. அந்த ஒரு நாளில் அவன் காட்டும் வேட்கைக்கு ஈடு கொடுக்க முடியாமல் திணறிப் போவாள் பவானி.. எல்லாம் ஓர் நாள்தான்.. மறுநாள் அவளைத் திரும்பிக் கூடப் பார்க்காமல் சென்னைக்குப் போய் விடுவான்..

"சென்னை மெடிகல் காலேஜீக்கு அவளுக்கு மாறுதல் வாங்கிக் கொடுத்து உன்னுடனே அவளை வைத்துக்கலாமில்ல..?" மனது கேட்காமல் கௌரி சங்கரிடம் சண்டைக்குப் போவாள்..

"அவளுடைய படிப்பு கெட்டு விடும்மா.. சென்னையை என்ன அன்னவாசல்ன்னு நினைத்தீங்களா..? அது மெகா சிட்டிம்மா.. நானும் அங்கே அன்னாவசல் ஜமின்தாரில்லை.. 'சிகோ' குருப் ஆஃப் கம்பெனியின் எம்.டி. என் லெவலுக்கு இவளால் ஈடு கொடுக்க முடியாது.. படிப்பை முடிக்கட்டும்.. சென்னைக்கு அழைத்துக்கிட்டுப் போகிறதைப் பற்றி யோசிக்கலாம்.. இப்போதைக்கு உங்களோடு இருந்து படிக்கட்டும்.. சரளாவும் அமெரிக்காவுக்குப் போயிட்டா.. உங்களுக்கும் வீடு வெறிச்சுன்னு இருக்காதா..?"

"அப்ப நீயும் இங்கேயே இருந்துவிடு.."

"ஊஹீம்.. என் இடம் சென்னைதான்.."

"ராமன் இருக்கும் இடம்தாண்டா சீதைக்கு அயோத்தி.."

"ம்மா.. முடியலை.."

"எனக்கும்தான் முடியலை.."

"அதுதான் உங்க மனம் விரும்பிய மருமகளை துணைக்கு விட்டுட்டுத்தானே சென்னைக்குப் போகிறேன்.. வாட் தென்..?"

"சங்கர்.. சரளாவுக்கும் பவானிக்கும் ஒரே மேடையில்தான் கல்யாணம் ஆச்சு.. சரளா மறுவாரமே அவ புருசனோட அமெரிக்காவுக்கு பறந்துட்டா.. ஆனா பவானி..? கட்டின

புருசன் சென்னையில இருக்க அன்னவாசலை விட்டு நகராம இங்கேயே இருக்கா.. இது நியாயமில்லைடா.."

"எனக்கு இதுதான் நியாயம்.. அன்னவாசலில எப்போதும் இருக்கிறதைப்போல ஜமின் வீட்டு வேலைக்காரியா, தோட்ட வீட்டில அவ இருக்கலையே.. அன்னவாசல் ஜமின் வீட்டு மருமகளா அரண்மனையில இல்ல இருக்கிறா..? அதை மறந்துட்டிங்களே.."

விதண்டாவாதம் பேசிய மகனை இமைக்காமல் உறுத்துப் பார்ப்பாள் கௌரி.. அவளின் அந்தப் பார்வையில் உதட்டைக் கடித்தபடி மௌனமாகும் சங்கர் வேறு திசையில் பார்ப்பான்..

"நீ நான் வளர்த்த பிள்ளையில்லை சங்கர்.. உங்க அப்பாவோட குணம் அப்படியே இருக்கு.. வார்த்தைக்கு வார்த்தை உன் பெண்டாட்டியை வேலைக்காரியாய் இருந்தவன்னு சொல்றயே.. அதனால யாருக்குடா அவமானம்..? உனக்குத்தான் அவமானம்.. பெண்டாட்டிக்கு வரும் மரியாதை புருசனைச் சேரும்.. உன் பெண்டாட்டி டாக்டருங்கிறதை மறந்துட்டு வேலைக்காரின்னே சொல்லிக்கிட்டு இருந்தேன்னா உன்னை இந்த உலகம் டாக்டரோட புருசன்னு சொல்லாது.. வேலைக்காரியோட புருசன்னுதான் பேசும்.. பரவாயில்லையா..?"

அதன் பின்னால் சங்கர் கௌரியிடமோ, மற்றவரிடமோ பவானியைக் குறைவாக பேச மாட்டான்.. ஆனால், தனிமையில் பவானியை அவன் வீட்டில் வேலை செய்தவள்தானே என்று கேட்பான்.. பவானியின் மனம் குமுறும்.. காட்டிக் கொள்ள மாட்டாள்.. அசையாமல் நிற்பாள்.. கண்கள் மட்டும் கலங்கி கண்ணீரைச் சுரக்கும்..

குமரகுரு தோட்டத்து வீட்டை விட்டு வர மறுத்து விட்டார்.. எப்போதும் போல கணக்குப் பிள்ளை வேலையைத் தொடர்ந்து பார்த்து வந்தார்.. பவானியின் இருப்பிடம் மட்டும் அன்னவாசல் தோட்ட வீட்டிலிருந்து, அரண்மனையில் சங்கரின் அறைக்கு மாறியது.. மற்றபடி விழித்து எழுந்ததும் தோட்ட வீட்டிற்குப்போய் விடுவாள்..

எப்போதும் போல வீட்டைச் சுத்தம் செய்து வாசல் தெளித்துக் கோலம் போடு காபி கலந்து தாத்தாவுடன் பேசியபடி வாசல்படியில் அமர்ந்து குடிப்பாள்.. சாப்பாடு மட்டும் அரண்மனையிலிருந்து போய்விடும்.. அதற்கும் குமரகுரு ஆட்சேபனை தெரிவித்தபோது கௌரியே ஆச்சரியப்படும் விதமாக சிவனேசன் அதட்டி விட்டார்..

"வயசான காலத்தில அன்னவாசல் ஜமின்தாரோட சம்பந்தி தனியாப் பொங்கிச் சாப்பிடறாருன்னு ஊருக்குள்ள பேசனும்னு நினைக்கறீங்களா மாமா..?"

அவர் வாயில் வந்த 'மாமா..' என்ற அழைப்பில் குமரகுருவுக்கு மயக்கமே வந்து விட்டது.. உறவைச் சொல்லக் கூடாது என்று நிபந்தனை விதித்திருந்த அன்னவாசலின் ஜமின்தார் தன் வாயாலேயே குமரகுருவை சம்பந்தி என்று சொல்லி விட்டார்.. மாமா என்றும் அழைத்து விட்டார். இதற்கு மேல் என்ன வேண்டும்..?

பவானியின் மனம் நிறைந்து விட்டது.. சிவனேசன் அவளை வாய் நிறைய மருமகளே என்று அழைத்தார்.. மகள் விரும்பிய வாழவை அமைத்துக் கொடுத்துவிட்ட மகராசி என்று மனதுக்குள் பவானியை கொண்டாடினார்.. வார்த்தைக்கு வார்த்தை..

"என் மருமக டாக்டருக்குப் படிக்குது.." என்று சொல்லி மகிழ்வார்..

சின்னஞ்சிறு சிறுமியாக ஏழு வயதில் தாத்தாவின் கை பிடித்து அன்னவாசல் அரண்மனையில் வேலை செய்து பிழைக்க காலடி வைத்த பவானி வேறு எதற்கும் ஆசைப்பட்டதில்லை.. சங்கரை நேசித்தாள்.. அவனை மனதில் இருத்தி வாழ்நாள் முழுவதும் அவன் நினைவுடனே வாழ்ந்துவிட வேண்டும் என்று நினைத்திருந்தாள். அவனைக் கரம் பிடிக்கவும் ஆசைப்பட்டதில்லை..

'அப்படியே வாழ்க்கை போயிருந்தால் நன்றாக இருந்திருக்கும்..' பெருமூச்சு விடுவாள் பவானி..

மழைக்கு ஏங்கும் சாதகப்பறவையாக அவள் வாழ்நாள் முழுவதும் சங்கரின் காதல் கிடைக்காமலே வாழ்ந்து முடித்து விடுவாளோ..?

சரளாவின் குழந்தைக்கு மூன்று வயதான போது மொட்டை போட்டுக் காது குத்த வேண்டும் என்று அன்னவாசலுக்கு வந்தாள்..

"கல்யாணமான கையோட புருசன் பின்னாடி அமெரிக்காவுக்கு போன புள்ள, இப்பப் புள்ளயும் கையுமா நாலு வருசத்துக்குப் பின்னால அன்னவாசலுக்கு வந்திருக்குது.." ஊரே அவளை வரவேற்றது..

சரளாவின் முகத்தில் பணத்திமிரும், கர்வமும் அப்பிக் கிடந்தன.. நவநாகரிகமாக மாறியிருந்தாள்.. முடியைப் பின்னல் போடாமல் வெட்டி விட்டிருந்தாள்.. கையில்லாத ரவிக்கை.. ஸ்டைலாகச் சேலை கட்டுதல் என்று அன்னவாசலின் எந்த அடையாளங்களும் இல்லாமல் அமெரிக்க வாழ் இந்தியப்பெண் என்பதை ஒவ்வொரு அசைவிலும் உணர்த்தினாள்.. அதிக நகைகள் இல்லை.. ஆனால் கையில் கட்டியிருந்த வாட்ச் முதற்கொண்டு அணிந்திருந்த சொற்ப நகைகளும் வைரத்தில் மிளிர்ந்தன.. வாட்ச்சின் விலையே சிலகோடி ரூபாய்கள் என்று கௌரியிடம் பெருமை பீற்றிக் கொண்டாள்..

பக்கத்தில் மௌனமாக காபி கலந்து கொண்டிருந்த பவானியைப் பார்த்தாள் கௌரி.. தனக்குக் கிடைத்த உயரிய வாழ்வை விட்டுக் கொடுத்து விட்ட பிரஞை துளியும் இல்லாமல் ஓர் யோகியைப் போல வேலைகளைக் கவனித்துக் கொண்டிருந்தாள் பவானி..

"ஏய்ய்.. பட்டிக்காடு.. காபியில் சுகரைப்போடாதே.. அவருக்குப் பிடிக்காது.. பக்க்ததில் சின்னக் கிண்ணத்தில் வைத்துக் கொண்டுபோ.. இத்தனை வருசமா இந்த வீட்டில வேலை செய்யறயே.. எந்த வேலையை எப்படிச் செய்கிறதுன்னு கேட்டுச் செய்யனும்ங்கிற அறிவு வேணாமா..?"

சரளா வேண்டுமென்றே சப்தமாகப் பேசினாள்.. வினோத்தும் சங்கரும் திரும்பிப் பார்த்தார்கள்.. அவர்கள் காதுகளில் விழ வேண்டும் என்றுதானே அவள் குரலை உயர்த்திப் பேசினாள்..

பவானியின் கைவிரல்கள் நடுங்கின.. ஹாலில் வினோத்தையும் சரளாவையும் பார்ப்பதற்காக ஊர்ப் பெரியவர்கள் வந்திருந்தார்கள்.. அவர்கள் முன்னிலையில் பவானியை அவமானப் படுத்த வேண்டும் என்பதுதான் சரளாவின் திட்டம்.. அவளால் பவானியை அன்னவாசல் ஜமினின் மருமகளாக ஏற்றுக் கொள்ள முடியவில்லை..

"இன்னும் ஏண்ணா அவளை வீட்டில வைத்திருக்க.. டைவர்ஸ் பண்ணித் துரத்திவிட வேண்டியதுதானே..? உன் பிரண்டைப் பத்திக் கவலைப்படாதே.. அவர் என்னோட ஃபுல் கண்ட்ரோலில் இருக்கிறார்.. மகனைப் பெற்றுக் கொடுத்துட்டேனில்ல.. நான் வைத்ததுதான் சட்டம்.. இனி இவளோட உதவி நமக்குத் தேவையில்லை.. துரத்தியடி.."

அமெரிக்காவிலிருந்து வந்த கையோடு சங்கரைத் தனிமையில் அழைத்து சரளா சொன்ன முதல் வார்த்தைகள் இவைதான்.. மௌனப் பார்வையோடு போய் விட்டான் சங்கர்.. இப்போது இப்படி ஆரம்பித்திருக்கிறாள்..

"சரளா.. வினோத்துக்கு காபி கொடுக்க என் பெண்டாட்டிதான் கிடைத்தாளா..? நீ என்ன செய்கிற..? அம்மா எப்படி அப்பாவைக் கவனித்துக்கிறாங்கன்னு பிறந்ததிலிருந்து பார்த்துக் கொண்டிருக்கிறாயே.. அந்த அறிவு வேண்டாமா..? பவானி.. காபியை எனக்குக் கொடு.. வினோத்தை சரளா கவனிச்சுக்குவா.."

சங்கர் போட்ட போட்டில் சரளாவுக்கு அவமானமாகி விட்டது.. வந்திருந்த ஊர்ப் பெரியவர்களும் வினோத்தும் அவளை ஒரு மார்க்கமாகப் பார்த்து வைத்தார்கள்.. 'இருக்குடி உனக்கு' என்று மனதுக்குள் கருவிய சரளா மொட்டையடித்து காது குத்தும் வைபவத்தில் வேலையைக் காண்பித்தாள்..

"அண்ணா.. இந்த பவானி உன் பக்கத்தில் நிற்கக் கூடாது.. எனக்கும் இவளுக்கும் ஒரே நாளில்தான் கல்யாணமாச்சு.. நான் மூணு வயசுப் பையனை கையில வைச்சிருக்கேன்.. இவ பூக்காத மரமா நிக்கிறா.. இவ காத்து என் குழந்தை மேல பட்டா ஆகாது.."

"சரளா.." சங்கர் ஒற்றை விரலை உயர்த்தி கர்ஜித்த கர்ஜனையில்..

"அண்ணா.." என்று சப்த நாடியும் ஒடுங்கி நடுங்கி நின்று விட்டாள் சரளா..

"எங்கே வந்து, யாரைப்பார்த்து, என்ன வார்த்தை பேசற..? தாய்மாமன்னு நான் உன் பிள்ளைக்கு நிற்கனும்னா என்னோட சரிபாதியான என் பெண்டாட்டி பவானியும் என் கூடத்தான் நிற்பா.. நீ கல்யாணத்தை மட்டுமே லட்சியமா வைச்சிருந்த.. மேரேஜ் ஆன நெக்ஸ்ட் இயரே பிள்ளையும் கையுமா நின்ன.. பவானி டாக்டருக்குப் படிக்கிறா.. அவ படிப்பு முடியாம குழந்தை பெற வேண்டாம்ன்னு தள்ளிப்போட்டிருக்கோம்.. நீயும் அவளும் ஒன்றா.."

பவானி தன் கணவனின் முகத்தை நன்றியுடன் பார்த்தாள்.. அதில் தெரிந்த உண்மையான காதலில்.. விட்டுக் கொடுக்காத கோபத்தில் மனம் நனைந்தாள்..

மறுவாரமே சங்கர் பவானியை சென்னைக்கு அழைத்துச் சென்று விட்டான்.. அடுத்த வருடம் பவானி சங்கரின் மகனுக்குத் தாயானாள்..

மழை வேண்டி தவம் இருக்கும் சாதகப் பறவைகளின் தவம் என்றும் பொய்ப்பதில்லை..